SEPTEMBER 1934 No. 9

# செங்குந்த மித்திரன்

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே
ஒற்றுமை நீங்கிடி லனைவர்க்கும் தாழ்வே

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 OCT 1934
MADRAS



இந்திய ராணுவத்திற்காக 44 கோடி ரூபாய் செலவாகின்றதை அறிந்து ஏழை விவசாயி ஆச்சரியப் படுகிறான்.

...செ. மாணிக்கவாசக முதலியார்.
—இ. கர். சபாபதி முதலியார்.

A. JAGANNATHACHARI

N34.8-9
208449




உன்னியூர் மிராசுதார் திரு. R. மாணிக்கமுதலியார் புதல்வன் திருநிறைச் செல்வன் நல்லண்ணனும், வெங்கல் யூனியன் போர்டு தலைவராகிய பாண்டமங்கலம் திரு. மு. பழநியப்ப முதலியார் புதல்வி திருநிறைச் செல்வி தங்கம்மாளும்.

இவர்கள் இருவருக்கும் பவ௵ ஆனி௴ 11௳ திருமணம் வெகு சிறப்பாக மணமகள் இல்லத்தில் நடை பெற்றது.

# செங்குந்த மித்திரன்


தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
மாத வெளியீடு

ஆசிரியர்: பி. சே. மாணிக்கவாசக முதலியார்.

| தொகுதி—அ | பவ௵ புரட்டாசி மீ | பகுதி க |
|---|---|---|


## உள்ளடக்கம்


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - OCT 1934
MADRAS



பத்திரிகாசிரியர் முன்னுரை ... 494
நினைவுக் குறிப்புகள் .... 497
நமது தபால் பெட்டி ... 502
சமர்ப்பயாமி ... 506
மதிப்புரை ... 508
அதிசயம், அற்புதம், ஆச்சரியம் ... 509
ரங்கநாயகி ... 511
கருணையே தோழன் ... 513
இரண்டு ஷில்லிங் கூலிபெற்ற ராய் ... 516
ஸ்விஸ் தேச சுதந்திர வீரன் ... 520
இளைஞர்களின் கடமை என்ன? ... 525
செங்குந்த யாத்திரைவாசி ... 528
இந்திய பொருளாதார கஷ்டம் ... 530
தும்—பம்—தீம்—தோம் ... 532
விகடத் துணுக்குகள் ... 536
இயற்கையைத் தன் அடிப்படுத்தும் மனித வுயிரின் மாண்பு 540
கதம்ப விநியோகம் ... 543
வர்த்தமானம் ... 544
நன்கொடைகள் ... 550
கிளர்ச்சி ... 553

208449

உ

ஓம்

# பத்திரிகாசிரியர் முன்னுரை

[illegible] றிகிரு[illegible]மிவீடு, கள்வைத்த தோற்பை சுமவாதே
உ[illegible]ணைக்கு மறிவூறி, உள்ளத்தை நோக்க அருள்வாயே
வெள்ளைப் பிராட்டி யிறைகாணு, வெள்ளத்தை யேற்ற பதிவாழ்வே
வள்ளிக்கு லாத்தி கிரிவாழும், வள்ளிக்கு வாய்த்த பெருமாளே.

—ஸ்ரீ அருணகிரிநாதர்.

'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கு நெல்லும் மிஞ்சாது' என்று தமிழ்நாட்டில் கூறுவதுண்டு. நல்ல காலத்திலேயே இப்படி என்றால், பருவ மழை இன்றியும், விலைவாசிகள் அடியோடு குறைந்தும், விளை பொருள்களுக்குத் தக்க மார்க்கெட்டுகள் கிடைக்காமலும் கஷ்டமுறும் இக்காலத்தில், விவசாயிகளின் நிலை எப்படி இருக்கு மென்பதை மனதினால் யூகித்துப் பார்க்கவேண்டியதைத் தவிர வாயினால் சொல்லுவதற் கியலாது. இந்தக் கஷ்டமான நிலைமையி லிருந்து விவசாயிகள் உடனே மீட்கப்பட வில்லையாயின் சென்னை மாகாணத்தைப் பொருத்த வரையில் சர்க்காருக்குப் பெருங் கஷ்டம் நேரு மென்பதே நமது உறுதியான அபிப்பிராயமாகும். சென்னை சர்க்காரின் முக்கிய வருமானம் நிலத்தீர்வையைப் பொருத்ததாக இருப்பதால், விவசாயிகளின் கஷ்டம் நிவர்த்திக்கப்பட வில்லையாயின், சென்னை சர்க்காரின் வருமானமும் குறைந்துவிடு மென்பதை எடுத்துக்காட்ட வேண்டிய அவசியமில்லை.

சென்னை மாகாணத்தில் உற்பத்தியாகும் அரிசிக்குத் தக்க மார்க்கட்டு கிடைக்காமையால் அது செல்வந்தர்களின் களஞ்சியங்களிலேயே தூங்கிக்கொண் டிருக்கின்றது. மாட்டின் செலவுக்கும், எருவுக்கும், வாய்தாவுக்கும் பண மின்றி விவசாயிகள் தங்கள் நிலங்களை ஈடுகாட்டிப் பணம் பெற்று, அதனைக் குறித்தபடி திருப்பிக் கொடுக்க முடியாமல் நிலங்களை இழந்துவருகின்றனர். இப்படிப்பட்ட நிலையில் சயாம் அரிசியோ வாரந்தோறும் அபரிமிதமாக இந்தியாவில் வந்து இறங்கிய வண்ணம் இருக்கின்றது.

சென்ற மாதத்தில் மட்டும் சென்னை கடற்கரையில் 10,350 டன் (அதாவது 1,03,500 மூட்டை) அரிசி இறக்குமதியாகி இருக்கின்றது. சென்ற ஜனவரிமாத முதலாக இதுவரையில் இருபது லட்சம் சியம் அரிசி மூட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. இதுவன்றி கூடலூர், புதுச்சேரி முதலிய





இடங்களிலும் ஏராளமாய் அரிசி மூட்டைகள் வந்து இறங்கி இருக்கின்றன. இவ்வாறு அளவு கடந்து இறக்குமதி செய்யப்படுமானால் இந்திய அரிசிக்கு கிராக்கி எங்கிருந்து வருமெனத் தெரிய வில்லை. வெளிநாட்டு அரிசியை இந்திய சர்க்கார் உடனே தடுக்க முயற்சிக்காமல் இதுவரை இருந்தது போன்று இனியும் அசிரத்தையாக இருப்பார்களாயின் விவசாயிகள் கடைசியில் தங்கள் நிதானத்தை இழந்துவிடுவார்க ளென்றே நாம் அஞ்ச வேண்டி இருக்கிறது.

விவசாயிகளின் கஷ்டமான நிலைமையை தாங்களும் உள்ளபடி உணர்ந்திருப்பதாகவும், அதனை விரைவில் தடுக்க ஏற்பாடு செய்யப்போவதாகவும் இந்திய சர்க்கார் கூறி வருகிறார்களாயினும் காரியாம்சத்தில் எப்போது அதனைக் காட்டுவார்களெனத் தெரியவில்லை.

அரசாங்கத்தின் அசிரத்தையைக் கண்டிப்பதற்காக ஸ்ரீ. பி. வி. தேசிகாசாரியார் ராஜாங்க சபையில் ஒரு அவசரத் தீர்மானம் கொண்டு வந்தார். ஆனால் அது அவசரமான விஷய மன்றென தலைவரால் நிராகரிக்கப்பட்டது. அந்தத் தீர்மானம் கொண்டுவர அநுமதி கிடைத்திருக்குமானால் விவசாயிகளின் கஷ்டமான நிலைமையை, சர்க்காருக்கு விளக்கிக் காட்ட பல அங்கத்தினர்க்குச் சந்தர்ப்பம் வாய்த்திருக்கலாம்.

இந்தியா சர்க்கார் சாதாரணமாய் எல்லா விஷயங்களுக்கும் கமிஷனையும், அதிகாரியையும் நியமித்து ஆராய்ச்சி செய்வது போன்று இந்த விஷயத்திலும் புள்ளிகளைத் தயாரிக்க ஒரு அதிகாரியை நேமித் திருக்கிறார்கள். அவரது புள்ளி விவரங்கள் வெளிவரும் வரையில் அரசாங்கத்தார் காத்துக்கொண் டிராமல் உடனே கீழ்க்கண்ட பரிகாரங்களைத் தேடி, விவசாயிகளின் நிலை சீர்படச் செய்யுமாறு வேண்டுகிறோம்.

(1) சிறந்த முறையில் சாகுபடி செய்வதற்குரிய வழிகளை விவசாயிகளுக்குக் கற்பித்தல்.


(2) விளைந்த பொருள்களை நல்ல விலையுடன் விற்பதற்கான சௌகரியங்களைச் செய்து தருதல்.

(3) அன்னிய நாட்டு அரிசிப் போட்டியை தாமதமின்றி தடுத்துவிடுதல்.

(4) குறைந்த வட்டிக்கு சுலபத்தில் விவசாயிகளுக்குக் கடன் கிடைக்குமாறு வசதி செய்தல்.

(5) சிறிய குடிசைத் தொழில்கள் விருத்தி யடைந்தால் பொருளபிவிருத்திக்கும் அவசிய மேற்படும். அதனால் விவசாயிகளும் அதிக வருமானம் பெறக்கூடுமாதலின், குடிசைத் தொழிலை வளர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

இவற்றிற் கெல்லாம் அரசாங்கத்தின் செல்வ நிலை இடந்த[ம]
வில்லை என ஒரு காரணங் கூறக்கூடும். ராணுவத்திற்காக ஆண்[டு]




இந்திய ராணுவத்திற்காக 44 கோடி ரூபாய் செலவாகின்றதை அறிந்து ஏழை விவசாயி ஆச்சரியப் படுகின்றான்.

தோறும் செலவு செய்யும் 44 கோடி ரூபாயில் விவசாயிகளின் நிலையை சீர்படுத்துவதற் கென இரண்டு கோடி ரூபாயை இந்திய சர்க்கார் ஒதுக்கி வைப்பார்களானால் விவசாயிகளின் நிலை வெகு விரைவில் அபிவிருத்தி யடையக்கூடு மென்பதில் தடையில்லை. இந்திய சர்க்கார் புழுவாய்த் துடிக்கும் விவசாயிகளின் கஷ்டத்தைப் போக்க எல்லா முயற்சிகளையும் செய்வதில் தீவிர நடவடிக்கையினை மேற்கொள்வார்க ளென்று பூரணமாய் நம்புகிறோம்.

---

## பிரசாரகர்களின் சுற்றுப் பிரயாணம்

சென்னை, தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரகர்களாகிய தமிழ்ப் புலவர் மணவை திரு. ச. நா. குமரகுரு முதலியார் அவர்கள் தற்போது கோவை ஜில்லாவிலும், திரு. சு திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்கள். புரட்டாசி மாத ஆரம்பத்தில் திரு. குமரகுரு முதலியார் அவர்கள் திருச்சி ஜில்லாவுக்கு விஜயம் செய்வார்கள். ஆங்காங்குள்ள குலாபிமானிகள் வேண்டிய உதவிகள் புரிந்து குலப்பணி செவ்வனே நடைபெறத் துணைபுரியுமாறும், பழைய சந்தாதாரர்கள் சந்தாபாக்கிகளை நேரில் செலுத்தியும், புதிய சந்தாதார்களைச் சேர்த்துத் தந்தும் மித்திரன் வளர்ச்சிக்கு உறு துணையாக நிற்குமாறும் வேண்டிக்கொள்ளுகிறோம். (ப-ர்)

# நினைவுக் குறிப்புகள்

## ஜீவன் முத்தி

இந்தியா சட்டசபையில் பூபதி சிங் என்பவர் காங்கிரஸிலிருந்து பறிமுதல் செய்யப்பட்ட பணத்தைத் திருப்பித் தரும்படி கேட்டாராம். அதற்கு இந்திய சர்க்கார் சற்றுந் தயங்காமல் "பறிமுதல் செய்த காங்கிரஸ் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதென்ற பேச்சே கிடையாது. அப்பணம் மாகாண சர்க்காரில் கலந்துவிட்டது. அது மாகாண சர்க்காருக்கே சொந்தம்" என்று பதில் கூறினார்களாம்.

வாஸ்தவந்தானே. சிவத்தோடு சிவமாய் இரண்டறக் கலந்து ஜீவன் முத்தி யடைந்த உயிரைப் பிரித்துக் கொடுப்ப தென்றால் எப்படி முடியும்? பணம் என்னமோ காங்கிரஸ் பணந்தான். பறிமுதலாகி சர்க்கார் கஜானாவில் புகுந்ததும் அங்குள்ள பொக்கிஷத்தில் அது ஐக்கியப் பட்டுவிட்டது. இப்போது திருப்பிக் கொடுத்துவிடுங்கள் என்றால், அது எப்படி சாத்தியமாகும்?

## மூர்த்திகளின் முறையீடு

'ஹரே' கிருஷ்ணா! இந்தத் தொல்லையி லிருந்து எங்களைக் காப்பாற்ற மாட்டீரா? இன்னும் மூன்று மாதங்கள் இருக்கின்றனவே. எங்கே கால் வைத்தாலும் அதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? நீங்கள் எப்படி வாக்களிப்பீர்கள்? என்ற கேள்விகள், எங்களை மரணாவஸ்தையில் கொண்டு சேர்க்கின்றனவே' என்று மூர்த்திகளும், ரங்கங்களும் முறையிட்டுக் கொண்டனர். அவர்கள் முறையீடு ஸ்ரீ கிருஷ்ணனால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## கைலாகு கோடுங்கள்

ஸ்ரீமான் ரங்கய்யர் இரண்டு வருஷங்களுக்கு முன் ஒரு மசோதா கொண்டுவந்தது ஞாபகமிருக்கிறதா? அதுதான்-அந்த ஆலயப்பிரவேச மசோதா; இத்தனை நாட்களாக இந்தியா சட்டசபையின் தூக்கு மேடையில் பொதுஜன அபிப்பிராயத்திற்காகத் தொங்கிக்கொண் டிருந்த அது, சென்ற மாதத்தில்தான் கொலை செய்யப்பட்டிருக்கிறது. வரப்போகும் தேர்தலில் வெற்றிபெற்று இந்தியா சட்டசபையை அலங்கரிக்கப் போவதாக கனவு காணும் அப்பாவிகளின் மரணாவஸ்தை இதைக்கேட்ட

தும் நீங்கி, மகிழ்ச்சியினால் துள்ளிக் குதித்திருப்பார்க ளென்று நம்புகிறோம். இனிமேல் ஸ்ரீரங்கமல்ல, எந்த அரங்கத்திலும் அதைப்பற்றி உங்கள் அபிப்பிராய மென்ன என்றுகேட்கப்போகிறவர்கள் ஒருவரு மிருக்கமாட்டார்க ளல்லவா? மசோதாவைக் கொண்டுவந்த ஸ்ரீமான் ரங்கய்யரே அதனை வாபஸ் வாங்கிக் கொண்டதற்காக அவருக்கு வைதீகர்களும் தென்னாட்டு காங்கிரஸ் பார்ப்பனர்களும் கைம்மாறு செய்யவேண்டியது அவசியமாகும். ஆனால் அவர்கள் செய்தது என்ன தெரியுமா?

'ஸ்ரீமான் ரங்கய்யர் ஓடுகிற ஓட்டத்தில் சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார்மீது ஒரு கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டு ஓடுகிறாரே. இது என்ன நியாயம்?' என்று அவர்மீது பாய்கிறார்கள். உபகாரம் செய்தவருக்கு அபகாரமா செய்வது?

## கல்லா? துரும்பா?

ஸ்ரீமான் ரங்கய்யர் போட்டது கல்லா, துரும்பா? என்று சந்தேகமா யிருக்கிறபோது சில பத்திரிகைக்காரர்களுக்கு அது ஒரு பெரிய கல்லாகத்தோன்றியது ஏனோ தெரியவில்லை. 'சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார் காங்கிரஸையும், காந்தியையும் இம்மசோதா விஷயத்தில் துரோகம் செய்துவிட்டார். அவர் 'ஹிந்து' வில் எழுதிய விஷயம் இங்கு பெரு மாறுதலை உண்டாக்கிவிட்டது. அதனாலேயே நான் இம்மசோதாவை வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறேன்' என்று ஸ்ரீமான் ரங்கய்யர் இந்தியா சட்டசபையில் பேசியதைத்தான் சகோதர குட்டிப்பத்திரிகைகளும், காங்கிரஸ் வாதிகளும் ஒரு பெரிய கல்லாகக் கற்பித்து விட்டனர்.

## இருதலைக் கொள்ளி எறும்பு

இம் மசோதா விஷயத்தில் தென்னாட்டுக் காங்கிரஸ்வாதிகளுக்கு பெரிய சங்கடம் இருந்து வந்தது. 'முன்னே போனால் முட்டு, பின்னே வந்தால் உதை' என்ற நிலையில் அவர்களைத் தத்தளிக்கும்படிச் செய்துவிட்டது. 'ஹரிஜனங்களை ஆலயத்தில் அநுமதிக்க வேண்டியதுதான்' என்று சொன்னால் 'இந்துமத துரோகி, சநாதன தர்ம சத்துரு' என வைதீகர்கள் பட்டம் சூட்டுகிறார்கள்; 'அவர்களை கோயிலில் அநுமதிப்பது சாஸ்திரங்களுக்கு விரோதமானது' எனச் சொன்னால் 'வைதீகக் குடுக்கைகளுக்கு சட்ட சபையில் என்ன வேலை? மூக்கைப்பிடித்துக் கொண்டு மூலையிலே குந்திக் கிடக்கிறதுதானே' என்று சீர்திருத்தவாதிகள் வசை புராணம் பாடுகிறார்கள். இந்த இரண்டு பேர்வழிகளின் ஆதரவும் தேர்தல் வெற்றிக்கு அவசியமா யிருக்கிறது. இந்த இருதலைக் கொள்ளியில் ஸ்ரீ சத்தியமூர்த்தி போன்றவர்கள் சிக்கி, 'ஆலயப் பிரவேசம் ஹரிஜனங்களுக்கு வேண்டியதுதான். ஆனால், அதற்காகச் சட்டம் இயற்றக்கூடாது' என்ற இரண்டுங் கெட்ட பல்லவியால் இருவர் முகத்தையும் துடைத்துக்கொண்டு காலந் தள்ளுவதென்றால் அது மிகவும் கஷ்டமான தல்லவா? இந்தக் கஷ்டம் ஸ்ரீராஜகோபாலாசாரியாரின் ஹிதோபதேசத்தால் நிவர்த்தியாகி விட்டது.



## சோடா காந்தியின் ஹிதோபதேசம்

'இந்துக்க ளல்லாதாரின் ஒட்டுதவியைக் கொண்டு ஆலயப் பிரவேச மசோதா போன்றவைகளை நிறைவேற்ற காந்திஜிக்காவது மற்றெந்த காங்கிரஸ் வாதிக்காவது விருப்பமில்லை. இதை மசோதாவாக அங்கீகரிக்குமுன் ஒவ்வொரு காங்கிரஸ் வாதியும் தீர ஆலோசனை செய்யவேண்டும்' என்பதே சோடா காந்தி ஸ்ரீராஜகோபாலாசாரியார் 'ஹிந்து' பத்திரிகையில் வெளியிட்ட உபதேசமாகும்.

## இது என்ன தந்திரம்!

'இந்துக்களின் ஆதரவினாலேயே மசோதா நிறைவேற வேண்டும்; ஆனால், அவர்கள் அவசரப் படக்கூடாது; தீர யோசிக்க வேண்டும்' என்று ஆச்சாரியார் கூறியதின் கருத்து—மூடு மந்திரம் என்ன வென்பதும், அதனால் இந்தியா சட்டசபை அங்கத்தினர்களின் எண்ணம் எவ்வாறு மாறுபட் டிருக்குமென்பதும், மசோதா வாபஸ் வாங்கப்படாம லிருந்தால் அது என்ன கதி யடைந்திருக்கு மென்பதும் நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. இதனைப் பச்சையாக வெளியிட்ட பாபத்திற்காக, கூடை பழியை ஆச்சாரியார்மீது சுமத்திய குற்றத்தையும், பெரிய கல்லைப் போட்ட குற்றத்தையும் ஸ்ரீமான் ரங்கய்யர் மீது சகோதர குட்டிப் பத்திரிகைகள் சுமத்துவது ஏனோ தெரியவில்லை. ஒரு வேளை சுஜாதிப் பித்தாக இருக்கலாமோ!

## வறட்டுப் பசுவும் பால் கறக்கும்

'இதைப்பார்த்ததும், சாமர்த்திய மென்றால் சாமர்த்தியம்; வறட்டுப் பசுவும் பால்கறக்கிறதே' என்று கன்னத்தில் கைவைத்து ஆச்சரியப்படாதீர்கள். அந்த சாமர்த்தியம் பசுவினிடத்தி லில்லை. பால்கார னிடத்தில் இருக்கிறது. சென்னை இடையர்களின் அநுபவம் அறிந்தவர்கள் இதனை நன்றாக அறிவார்கள். ஆனால், நமது பிரிட்டிஷ் சர்க்கார், இந்த விஷயத்தில் சென்னை இடையர்களையும் தோற்கடித்து விடுவதை நாம் பல முறை பார்த்திருக்கிறோம்.

## ஆச்சரியம் எதற்கு ?

'இந்தியாவில் வறுமை தாண்டவ மாடுவதாகக் கூக்குர லிடுகிறார்களே; இவ்வளவு தங்கப் பாளங்கள் எங்கிருந்து வந்தன' என்று பிரிட்டிஷ் துறைமுகத்தில் ஒருவர் ஆச்சரியப்பட்டாராம். ஆமாம், சுவாமி? இதில் ஆச்சரிய மென்ன! பசு என்னமோ வறட்டுப் பசுதான். இடையன் சாமர்த்தியம் அது. அவனைப் பார்த்ததும் பால் பீரிட்டுக்கொண்டு ஓடிவருகிறது.

## எத்தனை நாளைக்கு?

ஆனால், எவ்வளவு நாளைக்கு இடையன் சாமர்த்தியம் செல்லும்? ஒரு நாள் இரண்டு நாள். அதன்பின் மாடு உதைத்தால் குப்புற விழவேண்டியதுதான். இந்தியாவி லிருந்து இதுவரை 206½ கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம் கறந்தாய்விட்டது. இனி கறக்கமாட்டேன் என்கிறது. முடிச்சிலே, மொந்தையிலே, பூமியிலே, பெட்டியிலே,. கையிலே, காதிலே இருந்த எல்லாம் ஒன்றுவிடாமல் கொடுத்து விட்டபின் . இன்னும் கொடு என்றால் எப்படிக் கொடுக்க முடியும்? இந்தியாவி லிருந்த தங்கமெல்லாம் வறண்டுவிட்டதால் மூன்று வாரங்களாக தங்கம் ஏற்றுமதி யாக வில்லையாம்.

ஐயா, பால்காரரே! அதோடு திருப்தி படுங்கள். இதற்கு மேல் ஆசைப்பட்டால் மாடு ...............கொடுக்கப்போகிறது.

## இந்தியாவின் சாபக்கேடு

'அம்மா, இதுயாரு? பார்த்தா பயமா யிருக்குதே' என்று, பக்கத்தில் முறுக்கு மீசையுடன் உட்கார்ந்திருந்தவனைப் பார்த்து அலறியது ஒரு குழந்தை. பக்கத்தி லிருந்தவனே சிரித்துக்கொண்டே அதன் கழுத்தில் ஒன்றைக் கட்டினான். நடுங்கிக் கொண்டிருந்த குழந்தை அவன் கைபட்டதும் அலறி வீறிட்டது. அதன் கையில் கரும்புத் துண்டு ஒன்றைக் கொடுத்து அழுகையை மாற்றினார்கள். அதனை குழந்தை மென்றுகொண்டிருந்தது. மேளவாத்தியம் முழங்கியது. புரோகிதன் மோண மோண மந்திரம் ஓதினான். சில நிமிஷங்களில் திருமணம் மூன்று வயதுள்ள அக்குழந்தைக்கும், முப்பது வயதான காளைக்கும் நடந்துவிட்டது.

## உண்மையே! நாவலன்று !

ஏதோ நாவல் தொடங்கி இருப்பதாக நினைக்காதீர்கள். கிழக்கு கோதாவரி ஜில்லாவிலுள்ள பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமான யானம் என்ற ஊரில் 26-8-34-ந் தேதி இந்த குழந்தைக் கல்யாணம் நடைபெற்றது. குழந்தை கருப்புத்துண்டை



மென்ற படியே போட்டோவும் பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒரு கல்யாண மல்ல. அந்த நாளில் பிரிட்டிஷ் எல்லையிலுள்ளவர்கள் அங்குச் சென்று அறுபது பால்ய விவாகங்கள் வரை நடத்தி இருக்கிறார்கள்.

## சாரதா சட்டம் எங்கே?

அந்த ஊரில், பிரிட்டிஷ் எல்லையைச் சேர்ந்தவர்கள், இதுவரை 800 பால்ய விவாகங்கள் இந்த ஆண்டில் நடத்தியிருக்கிறார்களாம். அவசரமாகவும், இரகசியமாகவும் விவாகங்கள் நடைபெறவேண்டு மென்பதற்காக சடங்குகள் ஒன்றும் செய்வதில்லையாம். செவ்வாய், சனி நீங்கலாக மற்ற நாட்களில் சுப முகூர்த்தம் பார்க்காமலே திருமணங்கள் நடந்துவருகின்றனவாம். சடங்குகளை நீக்கவும், மந்திரங்களை நிறுத்தவும், சுபாசுப வேளை கவனிக்கா திருக்கவும் இடங்கொடுத்த சாஸ்திரங்கள் பால்ய விவாகத்தை நிறுத்துவதற்குத்தானா இடந்தரவில்லை! அந்தோ, இந்தியாவே! தீய வழக்கமென மனதிற்கு நன்றாய்த் தெரிகின்ற இந்த விஷயங்களுக்கும் உனக்கு சட்டம் செய்ய வேண்டி இருக்கிறதே!

## புல் தடுக்கிகள்

இந்தியர்கள் மனோதிட மற்றவர்களாய், சரீர பல மில்லாதவர்களாய், இளமையிலேயே நரை திரை மூப்படைந்து நடைப் பிணங்களா யிருப்பதற்குக் காரணம் பால்ய விவாகங்களேயாகும். சின்னஞ் சிறு குழந்தைகளை மனைவியர்களாகவும், தாய்மார்களாகவும் செய்யும் கொடுமையைக் காட்டிலும் நாட்டிற்கு நாமிழைக்கும் தீமை வேறு என்ன இருக்கிறது? ஆறரை வயதில் பிரசவமாயிற்றென்றால் 'ஆ' என்று வாய் பிளக்கிறீர்களே. இவ்வாறு குழந்தை கல்யாணங்கள் நடத்தினால் குழந்தைகளில் பிரசவிப்பதும், சிசு மரணங்கள் ஏற்படுவதும், எலும்புந் தோலுமாய் வாழ்வதும் எவ்வாறு இல்லாமற் போகும்? இக்கொடுமைகளை நிறுத்த ஓ, இளைஞர்களே! ஆண்மையுடன் வெளிவாருங்கள்.

---

போட்டிப் பரிசு! அடுத்த இதழை எதிர்பாருங்கள்!

# நமது தபால் பெட்டி

[நமது சமூக சம்பந்தமாகவும், உலகப் பொது விஷய சம்பந்தமாகவும் சந்தாதாரர்களால் கேட்கப்படும் கேள்விகளில் முக்கியமானவற்றிற்கு இந்த பதில் எழுதப்படும். உடனுக்குடன் விடை தெரிவிக்க இயலாத கேள்விகளுக்குச் சிறிது தாமதித்தாவது தகவலறிந்து விடை இறுக்கப்படும்.]

கேள்வி:—உயர்தர பாடசாலைகளிலோ, கல்லூரிகளிலோ தமிழாசிரியர்களாக இருக்கின்ற நம்மவர்கள் யாவர்?

—S. M. திருவுடையான், சங்கரன் கோவில்.

பதில்:—'தமிழ்க்கிறைவன் முருகன்' என்ற காரணத்தினாலோ அன்றி வேறு எக்காரணத்தினாலோ முருகன் சகோதரர்களெனப் பெருமை பாராட்டும் நம்மவர்களுக்கு தமிழ்க் கலையினிடத்து நிறைந்த பற்றும் அபிமானமும் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. தமிழை முறையே பயின்று நல்ல புலமை வாய்க்கப்பெற்ற பல அறிஞர்கள் நமது சமூகத்தில் எப்பொழுதும் இருந்து வருகிறார்கள். உயர்தர பாடசாலைகளில் தமிழாசிரியர்களாக நம்மவர்கள் அநேகர் பண்டும் இருந்திருக்கிறார்கள். இன்றும் இருக்கிறார்கள். இப்பொழுது உயர்தர பாடசாலையில் தமிழாசிரியர்களாக இருப்பவர்களில் மொத்தத்தில் நூற்றுக்கு ஐந்து வீதமாவது நம்மவர்கள் இருக்கக் கூடுமென நாம் நம்புகிறோம். ஆனால், அவர்கள் யார் யாரென்பதும், எங்கெந்த பாடசாலைகளில் இருக்கிறார்களென்பதும் அதற்கென வாற்றும் தனி முயற்சியினாலேயே அறியக்கூடும்.

* * *

கேள்வி:—சமூக உட்பிரிவுகள் எல்லா சமூகத்தவருள்ளும் காணப்படுதல் சகஜந்தானே. அவ்வாறிருந்தும் எவ்வளவோ தீவிர முயற்சிகள் செய்தும் ஏனைய சமூகங்களைப்போல் நமது சமூகம் என் முற்போக்கடையவில்லை? சமூக முன்னேற்றத்திற்காகக் கங்கணங் கட்டி நிற்கும் உண்மை வீரர்களின் வீரகர்ஜனையும், நமது மித்திரன் எழுப்பும் புத்துணர்ச்சியும் நம்முள் ஒற்றுமைப்பூண்டை உற்பத்தி செய்யாததேன்?

—S. S. கந்தையா காவேட்டி.

பதில்:—சமூக உட்பிரிவுகள் பெரும்பாலும் எல்லாச் சமூகங்களிலும் இருக்கின்றனவென்பது உண்மையே. ஆனால், சமூக முன்னேற்ற விஷயத்தில் அந்த உட்பிரிவுகள் நமது சமூகத்தைப் பாதிப்பது போன்று ஏனைய சமூக உட்பிரிவுகள் அந்த சமூகங்களைப் பாதிப்பதில்லை. மற்ற சமூகத்தவர்கள் பெண் கொடுக்கல் வாங்கல்



தவிர மற்ற விஷயங்களில் உட்பிரிவின ரனைவரும் உடன்பிறந்த சகோதரர்களே போன்று அந்யோந்யமாய் வாழ்ந்து வருகிறார்கள். ஒருவருக்கு வரும் இன்பதுன்பத்தை, அவர் எந்த உட்பிரிவைச் சேர்ந்தவரா யிருப்பினும் பொதுவாய்த் தமது சமூகத்திற்கு வந்த இன்ப துன்பமாகப் பாவிக்கிறார்கள். ஆனால், நமது சமூகத்தவர்களுள் பெரும்பாலோர்க்கு இந்த உயரிய—சீரிய குணம் வாய்ந்திருக்கவில்லை. தனது நெருங்கிய சுற்றத்தவனே யாயினும் அவன் பொருளாதார நெருக்கடியினாலோ, அல்லது ஜீவனோபாயக் கஷ்டத்தினாலோ, வேறு எக்காரணத்தினாலோ தாழ்ச்சியும் துன்பமுமடைவானாயின், அதனை நீக்குதற்கு ஏனைய செங்குந்தர்கள் முனைவதைவிட்டு "அவனுக்கு வேண்டியதுதான். இரண்டு காசு அகப்பட்டதென்று துள்ளிக் குதித்தானே. எல்லாம் கொட்டின வாயில் அடங்கிவிட்டதா?" என்று இகழ்ந்து பேசி, மீண்டும் எந்தக் காலத்திலும் அவன் தலை யெடுக்க வொட்டாது செய்கின்ற ஒரு தீய குணம் அநேகரிடத்தில் குடிகொண் டிருக்கிறது. அன்றியும், எவனாவது ஒருவன், தன் சொந்த முயற்சியால் சிறிது முன்னுக்கு வருவதாகக் காணப்பட்டால் அவனைப் பார்த்துப் பார்த்து வயிறெரிந்து சாகின்ற பொறாமைக் குணம் இவர்களிடத்தில் அளவு கடந்து பொதிந்திருக்கின்றது. இப்படி ஒருவரை யொருவர் தாழ்த்தப்பார்த்து தங்களுக்குத் தாங்களே தாழ்வைத் தேடிக்கொள்ளுகிறார்கள். 'அழுக்காறென ஒரு பாவி திருச்செற்றுத் தீயுழி யுய்த்துவிடும்' என்ற பொய்யா மொழியாரது மொழியை உய்த்துணர்கின்றார்களில்லை?

இந்தத் தீயகுணம் இருப்பது போதாதென நம்மவர்களுக்குள் ஒவ்வொரு ஊரிலும் (இரண்டு வீடுகளே இருப்பினும் சரி) பல கட்சிகள் தோன்றி இவர்களைப் படுகுழியில் ஆழ்த்தி வருகின்றன. இவர்கள் கட்சிப்பேயின் வசப்பட்டவுடன் தன்னை மறந்து, தன் செயலை மறந்து அண்ணன் என்றும் தம்பி என்றும் கருதாமல், மாமன் என்றும் மைத்துனன் என்றும் நினையாமல் 'அவனை எப்படியாவது கோர்ட்டில் கைகட்டி நிற்கச் செய்கிறேன்; இவனுக்கு எப்படியாவது அபராதம் போட்டு வைக்கிறேன். இவன் என்ன பெரியவன் கோயில் மணியம் பார்க்க' என்று வீரம் பேசி, தான் கெடுவதைச் சற்றும் ஓராமல் பிறருக்குக் கெடுதி தேடுவதிலேயே கண்ணுங் கருத்துமா யிருக்கிறார்கள். இந்த வீராவேசத்தால்—கட்சிப்பிணக்கினால் ஆங்காங்கு காணப்படும் ஒன்றிரண்டு செல்வந்தர்களும் விரைவில் வறுமை வாய்ப்பாட்டு இருக்குமிடந் தெரியாமல் மறைகின்றனர். இதன் உண்மையினை எவரேனும் காணவிரும்பினால் சென்னையிலுள்ள தேவஸ்தான தரும பரிபாலன ஆபீசில் ஒரு நாளைக்குச் சென்று அங்கு வரும் வழக்காளிகளின் உள்ளத்தைச் சிறிது தொட்டுப் பாருங்கள். அங்கு வருவோர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்கள் செங்குந்தர்களா யிருப்பதையும், அவர்கள் உள்ளத்திலிருந்து வெளிப்படும் வார்த்தைகள் மிக வெம்மை யுடையனவா யிருப்பதையும் நீங்கள் காண்பீர்கள். எழு இலட்சத்திற்கும் குறைவான ஜனத்தொகையினையுடைய நம்மவர்களின் வழக்குகளே தேவ

ஸ்தான ஆபீசில் வரும் வழக்குகளில் பெரும்பாலானவைகளாக இருப்பதிலிருந்தே நம்மவர்களிடத்திலுள்ள பொறாமைக் குணத்தையும் கட்சித் தகராறுகளையும் ஒருவாறு அறிந்து கொள்ளக் கூடும். இந்த இரு குணங்களும் என்று நீங்குகிறதோ அன்றுதான் இந்த சமூகத்திற்கு விமோசனம் ஏற்படுமென்று நாம் அபிப்பிராயப்படுகிறோம்.

---

# புதிய முறைத் திருமணம்

காலம் வெகு வேகமாய் மாறிக் கொண்டு போகின்றது. ஆனால், பழைய வழக்கங்களிலிருந்து அரை அங்குலமும் நகர இசையாது, அதிலேயே ஒட்டிக்கொண்டிருக்கும் பலர் இவர்களிடையே வாழ்ந்து வருகிறார்களென்பதும் உண்மை. காலத்தின் வேகத்தையும், உலக மாறுதலையும் காட்டுவதற்குரிய தாயுள்ள திருமண சம்பந்தமான ஒரு கார்டு நமக்கு அனுப்பப் பெற்றுள்ளது. அது ஓர் புது முறையாக இருப்பதால் அதனைக் கீழே குறித்திருக்கிறோம். அன்பர்கள் அதைக்கெண்டு உலகத்தின் அதி தீவிரமான வேகத்தினை உணர்வார்களாக.

## திருமணம் என்னும் வாழ்க்கைத்துணை

### ஒப்பந்த உறுதி மொழி

எனது அன்புள்ள காதலி தோழர் **கனகாபாய்**! நான் இன்று உங்களை எனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டேன்.

இன்று முதல் நம் இருவரது கூட்டு வாழ்வில் உள்ள இன்பம், துன்பம், செல்வம், வறுமை யாவற்றிலும் நம் இருவருக்கும் சம சுதந்திரத்தோடு கூடிய சரிபாகம் உண்டு. மற்றும் உங்களிடமிருந்து நான் என்னென்ன கடமைகளையும் உரிமைகளையும் எதிர்பார்க்கின்றேனோ அவ்வளவையும் என்னிடமிருந்து எதிர்பார்க்க தங்களுக்கும் பாத்தியம் உண்டு என்ற உறுதி மொழிகூறி இம் மண மாலையை நன்மகிழ்ச்சியோடு இச்சபையோர் முன் உங்களுக்கு சூட்டுகின்றேன்.

A. சங்கரய்யா, ஈரோடு.

### மணமகள் உறுதி மொழி

எனது அன்புள்ள காதலர் தோழர் A. **சங்கரய்யா**! நான் இன்று உங்களை எனது வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக்கொண்டேன்.

இன்று முதல் நம் இருவரது கூட்டு வாழ்வில் உள்ள இன்பம், துன்பம், செல்வம், வறுமை யாவற்றிலும் நம் இருவருக்கும் சமசுதந்திரத்தோடுகூடிய சரிபாகம் உண்டு. மற்றும் உங்களிடமிருந்து நான் என்னென்ன கடமைகளையும் உரிமைகளையும் எதிர்பார்க்கின்றேனோ அவ்வளவையும் என்னிடமிருந்து எதிர்பார்க்க தங்களுக்கும் பாத்தியம் உண்டு என்ற உறுதிமொழி கூறி இம் மண மாலையை நன்மகிழ்ச்சியோடு இச்சபையோர் முன் உங்களுக்கு சூட்டுகின்றேன்.

கனகாபாய், ஈரோடு.

# ஜப்பானில் பத்திரிகைகளின் பெருக்கம்

இந்தியாவில் ஏதாவதொரு பத்திரிகை பத்தாயிரம் பிரதிகள் வரையில் வெளியிடப்படுகிறதென்றால் அது அனைவருக்கும் பேராச்சரியத்தை விளைவிக்கிறது. 'இவ்வளவு பிரதிகளா வெளியாகின்றன? இது பெரிய அதிர்ஷ்டந்தான்' என்று வியப்புடன் கூறுகிறார்கள். ஆனால், வெளிநாடுகளிலோ இந்த பத்தாயிரம் பிரதிகள் வெளியிடப்பெறும் பத்திரிகையை ஒரு பத்திரிகையாகவே மதிப்பதில்லை. அங்கு, லட்சக்கணக்கில் வெளியிடப்பெறும் பத்திரிகைகளே மதிப்பெய்துகின்றன. ஜப்பானிலுள்ள முக்கியமான தினசரிப் பத்திரிகைகள் தினந்தோறும் எவ்வளவு பிரதிகள் வெளிவருகின்றனவென்பதைக் கவனியுங்கள். அப்போது வெளிநாடுகளின் அதிவேகமான முற்போக்கு ஒருவாறு விளங்கக்கூடும். ஒன்றுக்குப் பத்து பத்திரிகைகள் படிக்காத மனிதன் அங்கு இருக்கமாட்டான் என்றே தெரிகிறது. பத்திரிகைகளை வேம்பென வெறுக்கும் புத்தி பெரும்பாலான மக்களுக்கு இந்தியாவில் இருக்கும்வரை இந்தியாவிற்கு விடுதலை கிடைப்பது அருமையேயாகும். ஜப்பான் பத்திரிகைகள் வெளியிடும் பிரதிகளின் எண்ணிக்கை வருமாறு.

| பெயர் | பிரதிகள் |
|---|---|
| ஓஸக்கா அஷாய் | 1,300,000 |
| ஓஸக்கா மைனிச்சி | 1,230,000 |
| டோக்கியோ நிச்சிநிச்சி | 780,000 |
| டோக்கியோ அஷாப் | 680,000 |
| யொமிராய் | 580,000 |
| ஹோச்சி | 380,000 |
| ஜிஜி | 280,000 |
| ஷின் அயிச்சி | 270,000 |
| வுக்குவோக்கா நிச்சி நிச்சி | 220,000 |
| நகோயா ஷிம்பன் | 160,000 |
| கொகுமின் | 130,000 |
| ஹொக்காய் டைம்ஸ் | 130,000 |
| மியாக்கோ | 100,000 |
| சுக்கோகு ஷிம்போ | 100,000 |
| ஓடாரு ஷிம்பன் | 80,000 |

---

# சமர்ப்பயாமி

நமது பிரசாரகர்கள் வெளியில் சென்று திரும்பியவுடன் ஒப்புவிக்கும் பாடங்களைக் கேட்டு உருகாத நெஞ்சம் இராது. அவர்களைப் பட்டினி போட்டு வதைக்கும் இடங்கள் எத்தனை? படுக்க இடந்தராது தவிக்க வைக்கும் ஊர்கள் எத்தனை? பிரசாரகர்களின் முகத்தினைக் கண்டும் காணாதவர்களைப்போல் மறைந்து, பிரசாரகர்களின் கால்களை வதைக்கும் குலாபிமானக் குரிசிலர்கள் எவ்வளவு பேர்கள். இவைகளை யெல்லாம் கேட்டு எமது உள்ளம் கருகிக் குன்றிவிடும். செவிகள் ஓய்ந்து சாய்ந்துவிடும். ஆனால், ஆங்காங்கு அத்தி பூத்ததுபோல் காணும் அன்பர்கள் — அறிஞர்கள் — குலாபிமானச் செல்வர்கள் காட்டுகின்ற அன்பும், புரிகின்ற ஒத்தாசையும் கேட்கும்போது குன்றிய எமது உள்ளம் மலர்கின்றது; சாய்ந்த செவிகள் நிமிர்ந்து நிற்கின்றன. பிரசாரகர்களின் உள்ளத்திலும் இன்பமும் எழுச்சியும் பெருகி, துன்பமும் துவற்சியும் ஓடுகின்றன.

பிரசாரகர்களின் துன்பங்களைக் கேட்டு நாம் வருந்துவது போன்றே உண்மை அபிமானிகள் பலரும் மிகுதியும் கவலைப்படுகிறார்களென்பதற்குக் கீழ்வரும் கடிதம் சான்று பகரக்கூடும். இக்கடிதம் எழுதியவர் நமது குலப்பெரியார்களில் ஒருவரும், ஈரோட்டில் நடைபெற்ற நமது முதல் மகாநாட்டு வரவேற்புத் தலைவரும், பிரபல வர்த்தகரும், சாரதா மில்ஸ் மானேஜிங் டைரெக்டருமாகிய திரு. V. S. செங்கோட்டையா அவர்களின் மூத்த சகோதரர் திரு. V. S. பழநியப்ப முதலியார் அவர்களே யாவர். இதனை ஊன்றி கவனித்து, ஒவ்வொரு ஊரிலுமுள்ள நாட்டாண்மைக்காரர்களும் பெரியதனக்காரர்களும் நமது பிரசாரகர்களுக்குத் தக்க உதவி புரிவார்களானல் நமது குலப்பணி மிக விரைவில் பெரும்பயன் தருமென்பது உறுதி. அவர்கள் கடிதம் வருமாறு:—

“நமக்கெனவே தோன்றி—நமது முன்னேற்றமே குறியாக்கொண்டு உழைத்துவரும் குலச்செல்வன்-செங்குந்த மித்திரன் சோர்வுறாதபடி ஆதரித்துப் போஷிக்க வேண்டியது நமது முதற்கடமையாகும். அவனுக்கு வேளா வேளைகளில் உணவளித்து, திடகாத்திர சரீரம் பெறும்படிச் செய்யவேண்டியது அவனது குலத்தினர்கள் ஒவ்வொருவருடையவும் இன்றியமையாக் கடமையாகும்.

மித்திரன் வளர்ச்சிக்குரிய உணவு சந்தாவேயாகும். நமது உடல் பூரிக்க, உள்ளம் குளிர, காதுகள் இன்புற, கண்கள் களிக்க அரும்பெரும் விஷய வுணவை கற்றறிந்த பெரியோர் பலரிடஞ் சென்று வருந்திப்பெற்று, மாதந்தோறும் நமக்குக் கொணர்ந்தளிக்கும் அருமை நண்பனுக்கு வேண்டிய சந்தாவுணவை அளிக்க நாம் தயங்கலாமா? தயங்கின் நன்றி மறந்தவர்களாகமாட்டோமா? மித்தி



ரன் நம்மைத் தேடிவந்து விஷய வுணவு தருவதே போன்று, நாம் அவனைத் தேடிச் சென்று சந்தா வுணவை அவனுக் களிக்கவேண்டியது மிகவும் நியாயமும், நன்றி மறவாத் தன்மையுமாகும். ஆனால், நாம் செய்வது என்ன? இதற்கு முற்றும் முரணாகவன்றோ நாம் நடந்து கொள்கிறோம்.

நாம் சந்தாவை உரிய காலத்தில் அனுப்பாத தோஷத்திற்காக காலத்தையும், பொருளையும் செலவழித்துக்கொண்டு சென்னையிலிருந்து நம்மைத் தேடி பிரசாரகர்கள் வருகிறார்கள். அவ்வாறு வரும்போதாவது யாதொரு தடையுமின்றி சந்தாவைச் செலுத்திவிடவேண்டியது உசிதமா யிருக்க, அப்போதும் வாய்தா சொல்லும் அன்பர்களை என்னவென்று சொல்வது? சந்தா செலுத்துவது ஒரு புறமிருக்க, வருகின்றவர்களை தக்கபடி வரவேற்று உபசரிக்காத புண்ணிய சீலர்களைப்பற்றி எண்ணும்போது என் மனம் அடையும் வேதனை இங்கு எழுதுவதற் குரியதன்று. வருகின்றவர்கள் ஊருக்குப் புதியவர்கள்; எங்கு தங்குவது, எவ்வாறு குலப்பணி யாற்றுவது என்பது அவர்களுக்குத் தெரியாது. எனவே, எல்லா வகையிலும் அவர்களுக்கு உதவி புரிந்து குலநலம் போற்றவேண்டியது செங்குந்தனாய்ப் பிறந்த—செங்குந்த இரத்தம் ஓடப்பெற்ற ஒவ்வொருவருடைய பிறப்புரிமையாகும்.

உறவின்முறையார்களே! நாட்டாண்மை, பெரியதனக்காரர்களே!

குலப்பணி யாற்றும் தொண்டர்கள் நமது ஊர்களில் வந்து வருந்துவதா? யாது செய்வதெனத் தோன்றாது திகைப்புறுவதா? இது நமது குலமாட்சிக்கு பங்கம் தருவ தல்லவா? இனி இவ்வாறின்றி பிரசாரத்திற்கென வருகின்றவர்கள் மன மகிழுமாறு அவர்களை கௌரவமாய் வரவேற்று உபசரியுங்கள்; அவர்களுக்கு மதிப்பும் பெருமையும் தாருங்கள்; வேண்டிய சகல உதவிகளும் செய்து அடுத்த ஊர்களுக்கு அனுப்பி குலப்பணி செவ்வனே நடக்கத் துணை புரியுங்கள். நீங்கள் அவர்களிடம் காட்டும் அபிமானத்திலேதான் குலமுன்னேற்றத்தின் வேகம் அடங்கி இருக்கிறது. எனவே, இனி வரும் பிரசாரகர்கள் யாதொரு கஷ்டமுமின்றி தொண்டாற்றுவதற்கு நீங்களனைவரும் உறுதுணையாய் நின்று உதவி புரியுமாறு உங்களனைவரையும் வேண்டிக் கொள்ளுகின்றேன் நமது அறுமுகப்பெருமான் அனைவருக்கும் வளம்பல வழங்குவானாக. சுபம்.

இங்ஙனம்,

வா. செ. பழநியப்ப முதலியார், சென்னிமலை.

---

**சுருக்கமா யில்லாத கிளைச்சங்க அறிக்கைகள் இனி கண்டிப்பாய் பிரசுரிக்கப்பட மாட்டாதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்· (ப-ர்.)**

# மதிப்புரை

### கௌமார சிலேடைப் பதிகங்கள்
### மொழி நெறி யெழுபா
## சரவணம் பாக்கம் முருகன் தோத்திரத் திரட்டு

ஸ்ரீ முருகப் பெருமானிடத்து அன்பு பூண்டொழுகும் அடியவர் மனத்தை உருக்கவல்ல இத்திரட்டின் பிரதி யொன்று கிடைக்கப் பெற்றோம். இதிலுள்ள பரிதி குகனென பதிகம், சிவன் குணனென பதிகம், சத்திருசனென பதிகம், திருமால் செவ்வேளான பதிகம், ஆனைமுகன் அறுமுகனென பதிகம், சுப்பிரமணியம் பரமான பதிகம், பரமகுருநாதன் பதிகம், கந்தனைத் திருடனென்ற பதிகம், குகனை நல்லவனென்ற பதிகம் என்னும் ஒன்பது அரிய பதிகங்களும், சூரியன், சிவன், அம்பிகை, விட்டுணு, கணபதி, முருகன் என்னும் மூர்த்திகளையும் அவற்றின் மேற்போந்த அதீத நெறிக்கு லக்ஷியமாய் விளங்கும் பொதுப்பொருளையும் முன்னிலைப்படுத்தி அகவற்பாக்களால் ஆக்கப்பெற்றுள்ள மொழிநெறி யெழுபா என்னும் அரிய நூலும் வண்ணச்சரபம் ஸ்ரீலஸ்ரீ திருவாமாத்தூர் தண்டபாணி சுவாமிகளால் இயற்றப் பெற்றவை. உலகமறிந்த சுவாமிகள் செய்தருளிய நூல்களின் சிறப்பைப்பற்றி யாமெடுத்துக் கூறுவது மிகையாகுமென்றே கருதுகிறோம். எல்லா அழகும் பொருந்தி யிருப்பதோடு பக்தி ரசமும் ததும்புகின்றன.

மேற்கூறிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளது குமாரரும், மாணாக்கருமாகிய திரு. தி. மு. செந்திநாயகம் பிள்ளை யவர்களாலும், பிள்ளையவர்கள் குமாரர் திரு. தி. செ. முருகதாசப் பிள்ளை யவர்களாலும், கோவை சிரவணபுரம் கௌமார மடாலயம் ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகளாலும் சரவணம்பாக்கம் முருகக்கடவுள்மீது இயற்றப்பெற்ற 'முருகன்.தோத்திரத்திரட்டும்' இப்பிரதியில் சேர்க்கப்பெற் றிருக்கிறது. சரவணம் பாக்கம் மணியம் திரு. மு. கதிர்வேல் முதலியார் அவர்கள் இப்பகுதியின் சில கவிகளில் சிறப்பித் தோதப் பெற்றுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது.

சிவநேயச் செல்வராகிய இக் கதிர்வேல் முதலியார் திருவெண்ணெய்நல்லூரையடுத்த சரவணம்பாக்கம் என்னும் ஊரிலுள்ள விநாயகப்பெருமான் கோயிலில் வள்ளிதேவசேனா சமேத சுப்பிரமணிய மூர்த்தம் அமைத்து அவ்வாலயத்தின் நித்திய நைமித்யாதிகளுக்கு வேண்டிய ஏற்பாடும் செய்துவைத்த புண்ணிய சீலராவர். இம்மூர்த்திகளின் மீதே ஷை தோத்திரத்திரட்டு பாடப்பெற்றுள்ளது.

இதனை அச்சுவாகனமேற்றி எங்கும் பரவச் செய்த சிவ புண்ணியத்திற்கு உரியவரும் திரு. கதிர்வேல் முதலியார் அவர்களேயாவர். இவர் சமயாபிமானம் மிகவும் போற்றத்தக்கது.

---

# அதிசயம், அற்புதம், ஆச்சரியம்

### 3 அடி நீளமுள்ள புட்பம்

சுமத்ரா தீவில், ஒரு செடி, 3 அடி நீளமுள்ள ஒரே புட்பம் புட்பிக்கிறது. பூவின் நிறை 15 ராத்தல். இந்த ஒரு பூவைத் தவிர செடியில் வேறு பூவோ இலைகளோ கிடையாது.

### கடிதம் 1 க்கு 1000 பவுன்

நியூயார்க்கில் வசித்து வரும் ஸ்ரீமதி டபுல்டே என்ற விதவையை அமெரிக்கக் கோடீசுரரான ஹெரால்டு மாக்கார் மிக் என்பவர் காதலித்து, அது சம்பந்தமாக 50 கடிதங்கள் வரையில் எழுதியிருந்தார். ஆனால், விவாகம் எப்படியோ தடைப்பட்டு விட்டதால் டபுல்டே கோடீஸ்வரர் மீது நஷ்ட ஈடு வழக்குத் தொடர ஏற்பாடு செய்தார். இதை அறிந்த கோடீஸ்வரர் அதனால் தன் பெயருக்கு அபகீர்த்தி உண்டாகுமென நினைத்து கடிதம் 1 க்கு 1000 பவுன் வீதம் 50000 பவுன் கொடுத்து அவளிடமிருந்த எல்லாக் கடிதங்களையும் திருப்பி வாங்கிக்கொண்டார்.

### மூளைக்குள் பேனாக்கத்தி

நியூயார்க் வாசியாகிய ஜேம்ஸ் பி. ஹெஷ்ரி என்பவர் 15 வருடமாக மூளையில் ஏற்பட்ட ஒருவித உபத்திரவத்தால் கஷ்டப்பட்டு வந்தார். சமீபத்தில் ஆபரேஷன் செய்து பார்த்ததில் மூளையில் ஒரு சிறிய கத்தி இருக்கக்கண்டு ஆச்சரியப் பட்டனர்.

### முகத்தைச் சிருட்டிக்கும் டாக்டர்

வார்ஜினியாவில் கார்லண்டு ஸ்னப்பர் என்பவர் ஒரு குழியில் தவறி விழுந்து விட்டதால் மூக்கு உடைந்து, முகத்தில் பல காயங்கள் ஏற்பட்டு முகமே விகார மாகிவிட்டது. ஆகவே, தன் முகத்தைப் புதுப்பிக்க அவர் எண்ணங் கொண்டார். ஒரு டாக்டர் அவருக்குப் புது மூக்கு, புது காதுகள் முதலியவை வைத்து முகத்தை அழகுபடுத்த ஒப்புக்கொண் டிருக்கிறார்.

### 50 அடி உயரமுள்ள பலகாரம்

ஆஸ்திரேலியாவில் விக்டோரியா மாகாணத்தின் நூற்றாண்டு வைபவத்தை சிறப்பாகக் கொண்டாடத் தீர்மானித்திருக்கிறார்கள். அப்போது ஒரு பெரிய 'கேக்' (தோசை) ஒன்றை வெட்டி விற்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதில் 100 பவுன்களை வைத்திருக்கிறார்கள். இதைச் செய்து முடிக்க 36000 முட்டைகள், $4\frac{1}{2}$ டன் பழ வகைகள், $1\frac{1}{2}$ டன் வெண்ணெய், $\frac{3}{4}$ டன் பருப்பு வகைகள், $1\frac{1}{2}$ டன் மாவு

செலவாகி இருக்கிறது. நூற்றாண்டு வைபவத்தில் அதை 25000 துண்டுகளாக வெட்டி விற்பார்கள். அதிர்ஷ்ட வசமாக பவுன் கிடைக்கப் பெறுவோர் அடுத்த நூற்றாண்டு வைபவத்தின்போது அதைக் கொடுப்பார்களானால் பவுன் 1 க்கு 100 பவுன் வீதம் தருவார்கள். கேக் 50 அடி உயரமும், 300 அடி சுற்றளவும் உள்ளது

## இறந்த நாய் பிழைத்தது

இறந்த மனிதர்களை உயிர்ப்பிப்பதில் அநேக ரஸாயன நிபுணர்கள் முயற்சி செய்து வருகிறார்கள். அவர்களில் ஒருவராகிய ரஷ்ய பண்டிதர் வி. எஸ். ஸ்மிர்னோவ், இறந்து 30 நிமிஷம் கழித்த பின் ஒரு நாய்க்கு 'பொடாஸியம் கலீஸியம்' என்ற மருந்தை இருதயத்தில் இஞ்ஜங்ஷன் செய்து உயிர்ப்பித்தார். பொதுவாக உயிர் பிரிந்த உடலில் பல மணி நேரம் இருதயம் துடித்துக்கொண்டு இருப்பதால் உடனே உயிர்ப்பிக்கக் கூடு மென அவர் கூறுகிறார்.

## மனைவியின் பற்களை உடைக்கும் புருடர்கள்

சுமத்ரா தீவில் ஆடவர்கள் பெண்களின் பற்க ளழகைக் கொண்டே அவர்களை மணக்கிறார்கள். மணந்த பின், அவர்கள் மீது சந்தேகங் கொண்டு பிற ஆடவர்களை பல் லழகினால் மயக்கிவிடா திருக்கும்படி அறங்களால் தமது மனைவிகளின் பற்களை ராவி சிறிதாக்கிவிடுகிறார்களாம். சிலர் பற்களை உடைத் தெடுத்துவிடுகிறார்களாம்.

## குழந்தைகள் ஓட்டக் கூடிய விமானம்

ப்ரான்ஸிலுள்ள 4 பண்டிதர்கள் செய்து வந்த ஆராய்ச்சியின் பயனாக ரேடியோ மூலம் ஓட்டக் கூடிய விமானத்தைக் கண்டுபிடித்துள்ளார்கள். விமானத்தை மேலே கொண்டு போவதற்கும், நேராகச் செலுத்துவதற்கும், கீழே இறக்குவதற்கும் விமானி குறிப்பிட்ட பொத்தான்களைத் திருப்ப வேண்டியதே. எனவே விமானிகள் இல்லாமலே சிறு குழந்தைகளும் இந்த விமானங்களைச் செலுத்தலாம்.

## வாயினுள் அடங்கும் போட்டோ காமிரா

வாயில் போட்டு ஒருவன் எளிதாய் விழுங்கிவிடத்தக்க அளவு சிறிதாகவுள்ள போட்டே காமிரர கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இரைப்பையின் உட்புறத் தோற்றங்களைக் காட்டும் 16 படங்களை ஒரேசமயத்தில் அந்த காமிராவால் எடுக்க முடிகிறது. இரண்டு அங்குல உருண்டைக் குழாயில் அந்தக் காமிராவும், படம் பிடிக்கும் தாள் சுருளும், மிக நுண்ணிய வெளிச்சக் குமிழும் அடைத்து வைக்கப் பட்டிருக்கின்றன. அதன் உதவியால் இரைப்பையின் உட்புறத்தில் தோன்றும் புண்கள், கட்டிகள் முதலியவைகளின் நிலைமைகளை எளிதில் அறிந்து கொள்ளுகிறார்கள்.

# ரங்கநாயகி

பலராமன் ஒரு சந்நியாசி; வயது முப்பதிருக்கலாம்; மகா கோபிஷ்டி; எவருடனும் கலகலப்பாகப் பேசமாட்டான். பெரிய "முசுடு". கைலாசநாதர் கோவிலுக்குத் தினந்தோறும் செல்லுவான். போனால் யாரோடேனும் பேசுவதுண்டா? அதுதான் கிடையாது. பெருங் கூச்சம். கோபுர வாயிலில் நின்றுகொண்டு, போகிறவர் வருகிறவர் யாரையும் வெறித்துப் பார்த்துக்கொண்டிருப்பான். தனக்குத்தானே இரைந்த குரலில் தர்க்கம் புரிந்துகொண்டு செல்லுவான்.

பலராமனுக்கு வயது முப்பதென்றால், நல்ல வாலிப மல்லவா? முப்பதென்றால், இருபதாம் நூற்றாண்டு இந்தியர் சம்பந்தப்பட்டமட்டில் "பேரன், பேத்தி" எடுக்கத்தக்க கிழப்பருவமே என்பதை நான் மறுக்கவில்லை. எனினும் முப்பது வயதென்றால் முறுக்கான வாலிபந் தானே?

கோவிலுக்குத் தினந்தோறும் ஏராளமான ஜனங்கள் வருவதுண்டு; பல இள நங்கையரும் வருவார்கள். அவர்களில் ரங்கநாயகியின் மேல் பலராமன் பார்வை விழுந்தது. இளமை தன் இயற்கையை விடுமா? எனினும் ரங்கநாயகி வரும்பொழுதெல்லாம் பலராமன் ஊமையாகிவிடுவான்.

என்றாலும், இவர் தன்னைக் காதலிக்கிறார் என்பது ரங்கத்திற்கு எவ்வாறோ விளங்கிவிட்டது.

பரஸ்பரம் அளவு கடந்த காதல்தான். பலராமனின் காதல் எவ்வளவுக் கெவ்வளவு வெம்மையுடன் வளர்ந்து வந்ததோ, அவ்வளவுக் கவ்வளவு அவனுடைய கூச்சம் என்ற வேலியும் வலுத்துவிட்டது.

அன்றைய தினம் தமிழ் வருஷப்பிறப்பு; வழக்கம்போல் ரங்கம் கோவிலுக்கு வந்தாள். எப்படியாவது மனதைத் திடம் செய்துகொண்டு, ரங்கநாயகியுடன் ஒரு வார்த்தையாவது பேசிவிடுவது என்று தீர்மானம் செய்துகொண்டான் பலராமன். ஆனால் தவறிவிட்டான். ரங்கத்தின் முகத்தில் அன்று சிடுசிடுப்பு குடிகொண்டிருந்தது.

அவனைப் போல் அவஸ்தையடைந்த மூடர்கள் என்ன செய்வார்களோ, அதையே அவனும் கைக்கொண்டான். உட்கார்ந்தான். யோசித்து வரிந்து வரிந்து பல கடிதங்களை எழுதினான். ஒன்றும் திருப்திகரமா யில்லை. இறுதியில் நிதான மிழந்து 'கிறு கிறு' வென்று இரண்டுவரிகளை எழுதினான். அது எழுதி முடிப்பதற்குள் ஒரு நாள் முழுதும் சென்றுவிட்டது. அந்தக் கடிதம் என்ன, சின்ன விஷயமா? முடிந்தது. உறைக்குள் போட்டான்.

ரங்கத்திற்குக் கடிதம் கிடைத்தது. அதை, அவள் கணவனும், சகோதரனும் படித்தனர். சிறிது நேரம் நிசப்தம் குடிகொண்டிருக்

தது. இருவரும் கலந்து ஏதோ முடிவிற்கு வந்தனர். அன்றும் வழக்கம்போல் ரங்கம் கோவிலுக்குப் போனாள். பலராமனும் அவளைக் காணத் தவறவில்லை.

வீட்டிற்குச் சென்றதும், ரங்கம் ஒரு துண்டுக் காகிதத்தில் இரண்டுவரிகள் கிறுக்கினாள். உடனே வேலைக்கார முனியனைக் கூப்பிட்டாள்.

“முனிசாமி! இதை, பெரிய ஆலயம் பலராமனிடம் கொடுத்து வா!” என்றாள்.

“அந்தப் பலராம பரதேசியிடமா?” என்று ஆச்சரிய முற்றான் முனியன்.

“என்ன தாமதம்” என்று உறுத்துவிழித்தாள் ரங்கம். இனிப் பயனில்லை என்று கிளம்பினான் முனியன்.

வெள்ளெழுத்து மறைந்து இருளும் கவிழ்ந்துகொண்டது. கோவிலில் பலராமனைத் தவிர வேறு ஒரு குஞ்சுகூட கிடையாது. குலை நடுக்கத்துடன் உள்ளே நுழைந்தான் முனிசாமி. பலராமன் படிக்கட்டில் நின்றுகொண்டு, கீர்த்தனங்களைப் பாடிக்கொண் டிருந்தான். முனிசாமி மெதுவாகக் கடிதத்தை நீட்டினான். கடிதத்தைப் பார்த்ததுதான் தாமதம். பலராமன் ஒரே பாய்ச்சலில் ரங்கநாயகியின் முன் நின்றான். அப்பொழுது இரவு மணி ஒன்பதிருக்கலாம்.

பலராமன் அங்குமிங்கும் உலாத்திக்கொண் டிருந்தான். அவனுக்குப்பின் சிறிது தூரத்தில் இரண்டு கரிய உருவங்கள் அசைந்துகொண் டிருந்தன. திடீரென்று அவ்வுருவங்கள் பலராமன்மீது பாய்ந்தன. துணி உருண்டை அவன் வாய்க்குள் நுழைந்தது. பேச்சுக் குரலிலிருந்து அவ்விருவரும், ரங்கநாயகியின் தம்பியும், கணவனும் என்று தெரியவந்தது.

சிறிது நேரத்தில் பலராமன் அங்கிருந்த தூணில் கட்டப்பட்டான். தயாராக இருந்த சாய டப்பிகளிலிருந்து வர்ணமடிக்கப்பெற்று வெளியே தள்ளப்பட்டான்.

மிகவும் மானியான பலராமன் மறுநாள் அவ்வூரில் காணப்படவில்லை! பல ஆண்டுகள் கடந்தும் அவன் உயிருடன் இருக்கிறானா என்பதே எவருக்கும் தெரியவில்லை.

நேயர்களே! உங்கள் கண்களுக்கு நீங்கள் கடுமையான உத்தரவு போட்டுவையுங்கள். இல்லையேல் உங்களைப் படுகுழியில் ஆழ்த்த அவை சற்றும் அஞ்சமாட்டா.

---

# “கருணையே தோழன்”

[கரவெட்டி, ச. கந்தையா]

ஒருமொழி யன்னை வரம்பிலா ஞான முற்பவ காரண னென்றுந்
தருமமே துணைவன் கருணையே தோழன் சாந்தமே நலனுறு தாரம்
அரியதிண் பொறையே மைந்தன் மற்றிந்த அறுவருமல்லதா ருறவென்
றிருவரி லிளையான் மொழிந்தனன் தன்பே ரிதயமா மலர்க்கிடை
யெடுத்தே.—பாரதம்

குலமாட்சி யில்லாரும் குன்றுபோ னிற்பது நலமாட்சி நல்லாரின் சேர்க்கையாலேயே. ஆயின், மொழியா மன்னை, ஞானமாந் தந்தை, தருமமாந் துணைவன், கருணையாந் தோழன், சாந்தமாந் தாரம், பொறையாம் புதல்வனாகிய சுற்றத்தின ரறுவரின் உறவை யடையப் பெற்றோனே ஆன்ம ஈடேற்ற மெய்து மருளாளியாவன். மேற்போந்த வறுவருள்ளும் கருணையாகிய தோழன் உயிர்க்கு இருமையினுந் துணை புரியும் அருமை நண்பனாவ னெனக் கூறல் சாலப் பொருந்தும். அரசன் முதல் ஆண்டி யீறாக வுள்ள அனைவருக்கும் கருணையே ஓர் சிறப்புடை யணிகலனாய்க் கொள்ளத் தக்கது. நம் பண்டைத் தமிழரசர்கள் பலர் கருணையே யுருவாகத் தோன்றித் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்த் திகழ்ந்து செய்த வருஞ் செயல்கள் பல. அவற்றுட் சிலவற்றை ஈண்டு ஆராய்வாம்.

நால்வகைப் படை யணிகளை யுற்றவனும், ஆண்மையையும் அருளையும் ஒருங்கே பெற்றவனும், வரையா தீயும் வள்ளலுமான மாரியன்ன பாரியாம் மன்னர்பிரான் வனத்தகத்துத் தேர்மேற் செல்கையில் கொழு கொம்பின்றித் தத்தளித்துக் கிடந்து சக்கரத்திற் சிக்கிய முல்லைக் கொடிக்குத் தனது தேரையே கொழு கொம்பாக அமைத்துவிட்டுப் பாதசாரியாய் பட்டினத்திற்குச் செல்கிறான். “எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்.” அசரப் பொருளாகிய வம் முல்லையும் சகோதரத்துவ முடைய ஓர் ஜீவ னென்பதுவே அன்பு குன்றாப் பாரி வேந்தன் அபிப்பிராயமாகும். இணையற்ற வன்புடன் இரப்போரை ஓம்பின இவனது தண்ணளி நிறைந்த தரும சிந்தையின் மகிமைதா னென்னே? இம் மன்னனுக்குச் சிறப்பையும், சிவ பதத்தையும் கருணையாகிய தோழனே அளித்தான். கற்ற பேரறிஞர்க்குக் கருணையே தோழன்.

இன்னும் மேகமன்ன பேகனின் கருணைச் சிந்தையும் கற்றோராற் போற்றத் தகும் பான்மை யுடைத்து. மலைக் காட்சியை மகிழ்வுடன் காணவேண்டிச் சென்ற சமயத்தில், அகஸ்மாத்தாய் மழை “சோ” வென வருஷிக்கிறது. தன்னிடத் துள்ள ஒரே யொரு போர்வையை எடுத்துத் தன்னைப் போர்த்திக்கொண்ட போதில், குளிரினால் நடுங்கிப் பதைத்த ஓர் மயில் அகவுகிறது. அப் பரிதாபக்

காட்சியைக் காண வாற்றாது தன் போர்வையை எடுத்து மயிலுக்குப் போர்த்திவிட்டு மழையில் நனைந்த வண்ணம் அரண்மனையை யடைகிறான். இம் மன்னனது கருணைச் செயலாகிய விதுவும், கண்டோர் கேட்டோர் ஆகிய அனைவரது மனத்தினைக் கரையச் செய்யு மென்பதி லாட்சேப மென்னை? கற்ற பேரறிஞர்க்குக் கருணையே தோழன்.

அவனி வேந்தருள் அருளே உருவான—சிவ பக்தி பூண்ட—தன்னுயிர் போல் மன்னுயி ரோம்பும் தகைமையினனான சிபிச் சக்கரவர்த்தி, ஓரற்ப ஜெந்துவான புறாவின் பொருட்டு தனது தேகத்தைத் தியாகம் செய்ய முன் வந்த வீரச் செயலை நினைக்குந்தோறும் தேகம் புளகாங்கித முறுகிறதே! உண்மை ஞானியான இவ் வேந்தன் சர்வாந்தர்யாமியான கடவுளொருவரை புன் கண்ணுற் காண உதவியவன் கருணையாகிய தோழ னன்றோ! கற்ற பேரறிஞர்க்குக் கருணையே தோழன்.

பிரசைகட்கு, தன்னால், தன் பரிசனத்தால், ஊன மிகு பகைத்திறத்தால், கள்வரால், உயிர்தம்மாலான பய மைந்துந் தீர்த்து அறங்காப்போனும், கோணச் செங்கோல் கொண்ட வேந்தனும், வரையாது கொடுக்கும் வள்ளலுமான குமண ராஜன், எண்ணிறந்த ஜீவன்களின் தலைகள் தன் பொருட்டு துண்டிக்கப்படுவதை, பெருந் தலைச் சாத்தனா ரெனப்படும் புலமை மிகு புலவரா லறிந்த க்ஷணமே பரிதாபப்பட்டுத் தனது தலையை அப் புலவர் பெருமானுக்குப் பரிசளிக்க ஒருப்படுகிறான். இவனது தயாள சிந்தையைக் கண்ட மெய்ப் புலவர் வேந்தனை மீட்க முயற்சி யெடுத்து ஜயமடைகிறார். ஆபத்துக்காலத்தி லரசைத் தந்த ஆப்த நண்பன் கருணை யன்றோ! கற்ற பேரறிஞர்க்குக் கருணையே தோழன்.

மண்ணில் வாழுகின்ற மன்னுயிர்கட்கெல்லாம் கண்ணு முயிரும் போன்றவனும், சூரிய குல முதல்வனும், அனபாய சோழன் வழித்தோன்றலுமான மனு நீதி கண்ட சோழன், புதல்வனாற் கொல்லப்பட்ட பசுங்கன்றின் பொருட்டு துக்க சாகரத்தி லாழ்ந்தவனாய், தாய்ப் பசுவின் துயர் களைவான்வேண்டி மைந்தனைப் படுக்கச் செய்து அவன் மேலே தன் தேரை ஊர்கிறான். மன்னனது நீதி கண்டு வானவர் பூ மழை பொழிகின்றனர். முனிவரர் ஆசி கூறி வாழ்த்துகின்றனர். இறந்த கன்றும் எழுந்தது. அவ்வாறு அதனை எழுப்பியதும் கருணையே! அரசனின் ஊனக் கண்ணினுக்கு இறைவன் தோற்றி வர மளிக்க ஏதுவா யிருந்ததும் கருணையே! கற்ற பேரறிஞர்க்குக் கருணையே தோழன்.

அரசர்கள் பகைவர்மேல் மிக வலிமையோடு போர் செய்தல் ஆண்மையே யாயினும், மாற்றலர்க்குத் தாழ்வு வந்துழி அவர்மாட்டிரக்க மெய்தி அன்பு பாராட்டுதலே ஆண்மைக்கு அணியாகும். தன் படைக்கல மிழந்து தனியனா யகப்பட்ட இலங்கையர்கோனது வலியற்ற நிலை கண்ட இராம வீரன் கருணை பூண்டு "இன்று போய்ப் போர்க்கு நாளை வா" வென்று சொல்லி யனுப்பினான்.



சென்ற இலங்கை வேந்தனி னேழ்மை நிலையைப் போர்க்களத்தில் கண்டும் ஒறுக்க நினையாத உத்தம புருடனுக்கு அமரில் ஜயமடைய உதவியவன் கருணைத் தோழனன்றோ! கற்ற பேரறிஞர்க்குக் கருணையே தோழன்.

இன்னும் பாரதத்தில் படைத் தலைவனான கர்ணனும், வில்லின் வீரனான விஜயனும் சமரிழைத்த சமயத்தில், தன் படைக்கல மிழந்து "மயிரோடும் சிறகிழந்த போகில்போல"த் தத்தளித்துத் தனிமையாய் நின்ற கர்ணனை விஜயன் பார்த்து "இன்று போயினி நாளை வா" வென்று கூறிய இரக்கத் தன்மையை என்னெனப் புகழ்வது.

இத் தயாள சிந்தையே விஜயனின் வெற்றிக் கறி குறியாய் அமைந்தது. கற்ற பேரறிஞர்க்குக் கருணையே தோழன்.

---

அமெரிக்காவில் செய்யப்பட்டு வரும் மின்சாரக் கடிகாரத்தின் மணி காட்டும் முள்ளின் நீளம் 27 அடி. கடிகாரத்தின் உயரம் 240 அடி. அகலம் 150 அடி. உலகத்திலேயே இதுதான் மிகப் பெரிய கடிகாரம்.


## தெய்வீக ஜோதிஷம்

உங்கள் ஜனன கால விவரம் அல்லது ஜாதக நகல் ஏதாவதொன்றை குறிப்பிடவும்; அல்லது கடிதம் எழுதும்போதுள்ள நேரமும், சுமார் வயதும் தெரிவித்தால் எதிர்காலத்தில் நடைபெறப்போகும் பலன்களை சாஸ்திரீயமாக எழுதி அனுப்புகிறோம்.

| | | |
|---|---|---|
| ஒரு வருஷம் மாதவாரி பலன் எழுத | ... ரூ. | 2-0-0 |
| 5-வருஷங்களுக்கு மாதவாரி | ... ரூ. | 7-8-0 |
| ஒரு வருஷம் வாராந்திர பலன் | ... ரூ. | 10-0-0 |
| எதிர்கால சம்பந்தமான 5-கேள்விகளுக்கு பதில் எழுத | ... ரூ. | 1-0-0 |
| மேல் ஒவ்வொரு கேள்விக்கும் | ... ரூ. | 0-4-0 |
| வி. பி. செலவு | ... ரூ. | 0-4-0 |

சென்னை ஆந்திர பத்திரிகை எழுதுவதாவது :—"இவரது ஜோதிஷத் திறமையை நாம் மனப்பூர்வமாக விஞ்ஞாபனம் செய்துகொள்ளுகிறோம்."

சென்னை சுதேசமித்திரனில் ஸ்ரீமான் மணி எழுதுவது:—"எதிர்காலத்தை அறிந்து சொன்ன இந்த ஜோதிஷருக்கு வர்தனம் செலுத்தவேண்டும்."

வெளி நாடுகளுக்கு முன் பணம் அனுப்பிப் பெறவும்.

ஹனுமத் உபாசி வி. கே. சடகோபாச்சாரியார்

ஹனுமான் ஜோதிஷ ஆபீஸ், திருத்தணி, S. இந்தியா.

# இரண்டு ஷில்லிங் கூலிபெற்ற ராய்

## 2½ லக்ஷம் பவுன் சம்பாதிக்கின்றார்

ஒரு கிராமத்தில் சில்லரைக் கடை வைத்துக் கடைசியில் கோடீசுவரரான ஒருவர் கதையைக் கேட்க யார்தான் விரும்பமாட்டார்கள்.

அவருடைய தலைமைக் காரியாலயத்தில் இப்பொழுது 900 பேர் வேலை செய்கிறார்கள்.

அவருடைய வருட வருமானம் சுமார் இரண்டரை லக்ஷம் பவுன்.

அவருடைய பண்டகசாலை 33 வருஷங்களுக்குமுன் கட்டப்பட்டது. நார்போல்கு போர்ட்ஸ் கிராம மத்தியில் இருக்கிறது.

அவருடைய வேலையாட்கள் எல்லாம் குடும்ப சகிதம் அந்தக் கிராமத்திலேயே வசித்து வருகிறார்கள்.

அந்தக் கோடீசுவரர் கதை பின்வருமாறு :

நார்போல்கு மாகாண சந்தை ஸ்தலமான ரீமஹாம் கிராமத்திலே 40 வருஷங்களுக்கு முன் ராய் என்னும் பெயருடைய ஒரு தச்சன் இருந்தார்.

தச்சத் தொழிலுடன் துணைத் தொழிலாக அவர் ஒரு சில்லரைக் கடையும் நடத்தி வந்தார்.

அவருக்கு ஆர்னல்டு ராய் என்னும் பெயருடைய ஒரு மகன் இருந்தான். அவன் இளவயதில் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளவில்லை. அவன் பிற்காலத்தில் சமர்த்தன் ஆவானென்று எவரும் எதிர்பார்க்கவுமில்லை.

## ஆரஞ்சு விற்பனை

நார்போல்கு வீதிகளில் ஆரஞ்சுப் பழம் விற்கும்படி ஆர்னல்டு ராயை அவனது தந்தையார் ஏற்பாடு செய்தார். அப்பொழுது அவனுக்கு வயது 14. அதற்காக அவனுக்கு வாரம் 2 ஷில்லிங் சம்பளம் கொடுக்கப்பட்டது.

சில காலத்துக்குப் பின் நார்போல்கு தையல்கடை ஒன்றில் ஆர்னல்டு ராய் வேலைக்கு அமர்ந்தான். அங்கே வருஷம் ஒன்றுக்கு 15 பவுன் அவனுக்குச் சம்பளம் கிடைத்தது. தரை பெருக்கும் வேலையும் அவன் செய்து வந்தான்.

19-வது வயதில் லண்டனுக்குச் சென்று ஒரு பண்டகசாலையில் வாரம் 7 ஷில்லிங் சம்பளத்தில் வேலைக்கு அமர்ந்தான்.

அவன் மிகச் சிக்கனமாக வாழ்ந்து மீதம் பிடித்து வந்தான்.

என்ன செலவு செய்தாலும் சரி; அதை ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறித்து வைத்து வந்தான். ஒரு பெனிக்கு ஒரு துண்டு ரொட்டி வாங்கினாலும் குறித்து வைக்க அவன் தவறுவதில்லை.



ஒரு நாள் ஆக்ஸ்போர்டு வீதியிலுள்ள ஒரு பெரிய பண்டகசாலையைக் கண்ணுற்று அவன் மிக்க வியப்படைந்தான். உடனே அதைப் போன்ற ஒரு பண்டகசாலைக்குத் தானும் முதலாளியாகப் போவதாக அவன் அந்த பண்டகசாலையின் முன் நின்றுகொண்டே சபதம் செய்தான்.

லண்டன் பண்டகசாலையிலிருந்தால் தனக்குக் கதிமோக்ஷமுண்டாகாதென்று தெரிந்துகொண்டவுடனே, நார்போல்குக்குத் திரும்பிச் சென்றான். அப்பொழுது அவனது தந்தையார் தன் தொழிலை நிறுத்தி ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார். ஆகவே, ரீமஹாமுக்குச் சில மைல் தூரத்திலுள்ள கால்ட்டிஷாவில் ஒரு பலசரக்குக் கடை வைக்கத் தேவையான கைம்முதலை தந்தையார் தன் மகனுக்குக் கொடுத்தார்.

எனவே 26-வது வயதில் ஆர்னல்டு ராய் தன் புதுத் தொழிலில் புகுந்தார்.

## உலக மதிப்பு

பகற்பொழுதில் அவர் கடையிலிருப்பதே கிடையாது. காலை 5 மணிக்கு ஒரு குதிரை வண்டியில் அவர் வீட்டைவிட்டுப் புறப்பட்டு அந்த வட்டகையிலுள்ள கிராமங்களுக்கெல்லாம் செல்வார். தினம் 20 மைலுக்குக் குறையாமல் பிரயாணம் செய்வார். ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு சாமானை கொள் விலைக்குக் குறைவாக விற்பார். சர்க்கரை, தேயிலை, ஆரஞ்சு முதலியவைகளில் எதையாவது வாரந்தோறும் கொள் முதலுக்குக் குறைவாக விற்பது வழக்கம். எனவே அந்த வட்டகையில் அவரது பெயர் பிரசித்தமாயிற்று. அந்த வட்டகையிலுள்ளவர்களின் நன் மதிப்பை வெகு சுளுவாகப் பெற்றுக்கொண்டார்.

முதல் வருஷம் முடிந்ததும் தன் தந்தையார் தனக்குக் கொடுத்த கடனைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

தன்னைப்பற்றி ஜனங்கள் அதிகமாகப் பேசுவதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் அவர் வெகு சாமர்த்தியமாகச் செய்து வந்தார்.

யாருக்காவது ஒரு சட்டையை விற்றால் அந்தச் சட்டைப் பைக்குள் ஒரு சிகரட்டுப் பெட்டியை மெதுவாகத் திணித்து வைத்துவிடுவார். சட்டை வாங்கின மனிதன் அதைக் கண்டதும் அதைப்பற்றி எல்லாரிடத்தும் பிரமாதமாகப் பேசத் தொடங்குவான்.

## பொன்னான யோசனை

ஒரு நாள் அவர் ராக்ஸ்ஹாமுக்குச் சென்றார். போர்ட்ஸ் பிராந்தியத்துக்கு அந்தக் கிராமத்தைத் தலைமைஸ்தானமாக்கிக் கொள்ளலாமென்று ஆர்னல்டு ராய் உணர்ந்தார். அங்கே மரத்தினால் கட்டப்பட்ட ஒரே ஒரு கடையிருந்தது. அதை 600 பவுனுக்கு விலைக்கு வாங்கினார்.

ஒரு கிராமத்தாருக்குத் தேவையான சாமான்கள் எல்லாம் அக்காலத்தில் லண்டனி லிருந்தே வந்துகொண் டிருந்தன.

அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அவர் கிராம ஜனங்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார். "உங்களுக்குத் தேவையான சாமான்களை யெல்லாம் என்னிடம் வாங்குங்கள். நல்லதா கெட்டதா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டாம். உங்களுக்குப் பிடிக்காத சாமான்களை நான் திரும்ப வாங்கிக் கொள்கிறேன்"

அந்தப் பொன்னான யோசனையினால் நல்ல பலனுண்டாயிற்று. ராய்ஸ்ஹாம் சந்தைக் கடை வார விற்பனை 20 பவுனிலிருந்து 150 பவுனாக உயர்ந்தது.

ஜனங்கள் வாங்கிய சாமான்களில் ஒன்று அல்லது இரண்டு சதமானம் சாமானே திரும்பி வந்தன.

முதல் வருஷ முடிவில் தன் கடையை பெரிதாகக் கட்டினார். அப்பால் தமது கடையை விசாலப்படுத்தவும், அந்தப் பிரதேசத்தில் புகழ் பெறும்படி செய்யவும் அவர் முயற்சி செய்யலானார்.

இங்கிலாந்து முழுதுமுள்ள வியாபார ஸ்தலங்களி லிருந்து கணக்கற்ற டைரக்டரிகளை வரவழைத்தார். வருஷந்தோறும் 5 லக்ஷம் பேருக்குக் குறையாமல் தனது விளம்பர அறிக்கைகளும் அனுப்பத் தொடங்கினார். இப்பொழுதும் விளம்பர அறிக்கைகள் அனுப்பிக் கொண்டே இருக்கிறார்.

வர்த்தகம் விருத்தி யடையவே புதுக்கடைகளும் கட்டத் தொடங்கினார். அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள வயல்களி லெல்லாம் அவர் கடைகள் கட்டினார். அப்பால் கிராமத்தை விருத்திசெய்யத் தொடங்கினார். கிராமாபிவிருத்திக்காக கிராம சபை, பணம் செலவு செய்யத் தேவையில்லை யென்று அவர் சொல்லிவிட்டார். தெருக்களில் எல்லாம் விளக்கு ஸ்தம்பங்கள் நாட்டி அந்த ஸ்தம்பங்களில் தன் பெயரையும் பொறித்து வைத்தார்.

அப்பால் சுற்றுக்கிராமங்களிலுள்ள ஜனங்களையும் தன் வாடிக்கைக்காரராக்கிக்கொள்ள அவர் முயற்சி செய்தார். கடைசியில் அந்த முயற்சியிலும் வெற்றி பெற்றார்.

## யோசனைப் பெட்டி

இன்று அவரது நாற்பது வண்டிகள் கிராமங்கள் தோறும் ஓடிக் கொண்டிருக்கின்றன. கிராம ஜனங்களுக்குத் தேவையான சாமான்களெல்லாம் அந்த வண்டிகளில் கொண்டு சென்று வீடு வீடாய் விற்கப்படுகின்றன. ஒவ்வொருவரும் தம் யோசனைகளைத் தெரிவிக்க ஒவ்வொரு வண்டியிலும் ஒரு யோசனைப்பெட்டி வைத்திருக்கிறார். கிராம ஜனங்கள் தத்தம் யோசனைகளை ஒரு காகிதத் துண்டில் குறித்து அந்தப் பெட்டிக்குள் போடுவார்கள். எனவே ஒரு வருஷத்துக்குள் கிராம விற்பனை இரட்டிப்பாகி விட்டது.



அவருக்கு இப்பொழுது 5 லக்ஷம் வாடிக்கைக்காரர்கள் இருந்து வருகிறார்கள்.

மூன்று வருஷங்களுக்கு முன் ஒரு பெரிய கடை கட்டினார். அதன் நீளம் 460 அடி. விஸ்தீரணம் 20,000 சதுர அடி. 100 பேர் அந்தக் கடையில் வேலை செய்கிறார்கள். நார்போல்கு மாகாணத்திலுள்ள ஜனங்கள் எல்லாம் அந்த கிராமத்துக்கு வந்தே சாமான்கள் வாங்குகிறார்கள். ஆனால், ராயின் கடை ஒரு மூலையி லிருப்பதால் எல்லாருக்கும் அங்கு வந்து சாமான்கள் வாங்க முடிவதில்லை.

ஆகவே 40 சரான் கார்களை அவர் வாங்கினார். இந்தக் கார்கள் கிராமங்கள்தோறும் சென்று சாமான்கள் விற்கின்றன.

## கூட்டுறவாளரோடு போர்

எந்த எதிர்ப்புகளுக்கும் ராய் அஞ்சுவதில்லை. கூட்டுறவுச் சங்கத்தார் அவருக்கு எதிரிடையாக கடைகள் திறந்தபோது அவர்களை எதிர்த்துப் போராட ஆரம்பித்தார்.

உடனே அவரும் கூட்டுறவுக் கடைகள் திறந்தார். தன்னிடம் இருந்து சாமான் வாங்குகிறவர்களுக்கு ஒரு ஷில்லிங்குக்கு ஒரு பெனி வீதம் கூட்டுறவுப் பாங்கிகளில் அவர் சேர்த்து வைத்தார். ஒரு விலை ஜாபிதா அச்சிட்டுத் தன் கடை விலை, இதர கடை விலைகளைவிட மலிவாயிருப்பதைப் பொது ஜனங்களுக்கு நிரூபித்துக் காட்டினார்.

கூட்டுறவாளர் கடை தோன்றிய பிறகு ராயின் வருமானத்தில் 50 சதமானம் உயர்ந்திருக்கிறது. "இந்தியா"

---


## விளம்பர விகிதம்

5000-க்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதும், இந்தியா முழுவதும் மட்டுமன்றி இலங்கை, இரங்கூன், பினாங்கு, தென்னாப்பிரிகா முதலிய வெளிநாடுகளிலும் சென்றுலவுவதுமாகிய உயர்ந்த தமிழ் மாதப்பத்திரிகை 'செங்குந்த மித்திர'னில் உடனே உங்கள் வியாபாரத்தைப்பற்றி விளம்பரஞ் செய்யுங்கள்.

ஒரு தடவைக்கு முழுப்பக்கம் ரூ. 10
அரைப்பக்கம் ரூ. 5 கால்பக்கம் ரூ. 3

செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
பவழக்காரத் தெரு, சென்னை.

# ஸ்விஸ் தேச சுதந்திர வீரன்

[ஈ. வே. சோமசுந்தரம், கோவை.]

## கொடுங்கோலரசனை எதிர்த்து நின்ற தீரன் கதை

சுமார் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன், ஆஸ்திரிய நாட்டு ராஜன் (ட்யூக்) ஸ்விஸ் தேசத்தைத் தன் ஆட்சிக்குள் அடக்கி, அங்கு தன் பிரதிநிதியாக கவர்னரை வைத்திருந்தான். அக்காலத்தில் ஸ்விட்ஜர்லண்டு தேசத்திலுள்ள அல்டாரப் என்னும் நகரத்தின் கடைவீதியில், ஒரு நாள், மகா திடகாத்திர தேக முள்ள ஒரு வீரன் புகுந்தான். அவன் ஆஜானுபாகுவாய், விசாலமான நெற்றியும், பரந்த மார்பும், உயர்ந்த தோளும், நீண்டு உருண்ட உருப்புகளுமுடையவனாய் அனைவரையும் கவரத்தக்க அழகினனாக இருந்தான். கம்பீரமான சந்தோஷப் பார்வையுடனும், பிரகாசமான இனிய முகத்துடனும், தாராளமாகக் கலகலவென்று தனக்கு அறிமுக மானவர்களை யெல்லாம் வாழ்த்தி பிரியத்துடன் குசலம் விசாரித்துக்கொண்டு செல்வதைக் கண்டோர் யாவரும், 'அதோ! பர்க்லென் வனத்து வில் வீரன் வில்லியம் டெல் போகிறான்' எனக் கூவினர்.

ஸ்விட்ஜர்லந்து தேசத்திலேயே சிறந்த வில் வீரனான அவன், மலைத் தொடர்ச்சிகள் நிறைந்த அந்நாட்டில், மலைச்சாரலில், ஒரு மலை வீட்டில், தன் மனமொத்த மனைவியுடனும், அன்பான குழந்தைகளுடனும் சந்தோடமாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்து வந்தான். வேட்டையாடியும், அதனால் மிஞ்சும் தோல் முதலியவைகளை விற்றும் விவசாயம் சிறிது செய்தும் கிடைக்கும் ஊதியங்கொண்டு காலங் கழித்து வந்தான்.

இன்றும் தான் வேட்டையாடின மான்களின் தோலை, அல்டாரப் மார்க்கட்டில் விற்றுவிட்டுப் போகவே வந்திருந்தான். அவ்வாறே அவைகளை விற்றுவிட்டு ஒரு மணி நேரத்தில் தன் மலைச்சாரல் வீட்டை நோக்கி உல்லாசமாகப் பாடிக்கொண்டு சென்று இருப்பான்.

ஆனால், அவன் அல்டாரப் மார்க்கட்டில் தான் வேட்டையாடிப் பெற்ற மான் தோலை விற்கப் போகும் சமயம், திடீரென ஆஸ்திரிய தேச சிப்பாய் ஒருவன் அவனைப் பிடித்தான். தக்ஷணம் மற்ற சிப்பாய்களும் சூழ்ந்துகொண்டனர்.

'மார்க்கட்டின் நடுவே உயர்ந்த கம்பத்தின் மேல் மாட்டியிருக்கும் ராஜ கிரீடத்தின் சின்னத்தை வணங்கிச் செல்லாதவன் ராஜநிந்தனைக்காக கொல்லப்படுவான் என்று அறிந்தும் நீ ஏன் வணங்கவில்லை?' என்று ஒரு சிப்பாய் உரத்த குரலில் கேட்டான்.



வில்லியம் டெல் முகம் சிவந்துவிட்டது. கம்பத்தில் மாட்டியிருந்த தொப்பியைப் பார்த்துவிட்டுத் தன் கையைப் பிடித்துநின்ற சிப்பாயின் முகத்தை முறைத்துப் பார்த்து 'சட்ட விரோதமாக யான் ஒன்றும் செய்யவில்லையே' என்று மெதுவாகக் கூறினான்.

'நீ ட்யூக் அவர்களின் ஆட்சிக் குறியை அவமதித்து விட்டாய்'

ஒரு சட்டைக்கோ, கால்சராய்க்கோ கொடுப்பதைவிட ஒரு காலித் தொப்பிக்கு ஒரு மனிதன் ஏன் அதிக மரியாதை செய்ய வேண்டும்?' என்றான் வில்வீரன்.

அச்சமயம், அந்த நாட்டு கவர்னரான கொடுங்கோலன் கெஸ்லர் கூட்டத்தின் பின்புறமிருந்து வந்தான். அவன் பொதுஜன உரிமையைக் காலின்கீழ்த் தேய்த்து தன்னிஷ்டத்திற்கு மாறாக நின்றோர் பலரையும் கொலை செய்தும், சிறை செய்தும் அக்ரமஞ் செய்ததோடு நில்லாமல் கடைசியாகக் காட்டு மிராண்டித்தனமாக மார்க்கெட்டு மத்தியிலுள்ள கம்பத்தின்மேல் ஒரு தொப்பியை மாட்டி அதை வணங்காதவர் இறக்கவேண்டும் என்று திட்டமிட்டான்.

வில்லியம் டெல் எம்மனிதனுக்கும் பயந்தவனல்ல. ஒருவராலும் அவன் திடசித்தத்தையும் கம்பீரத்தையும் அசைக்க முடியாது. அவன் கவர்னரை உற்று நோக்கினான். இச்சம்பவத்திற்கு முன்னரே அவன் தனது மலை வீட்டிலிருந்து, தன் தாய் நாட்டைக் கட்டுப்படுத்திய அடிமைத் தளையைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்துத் தனது நண்பர்களிடம் அதை எதிர்த்துப் போராட யோசனையும் செய்திருந்தான். 'அக் கொடுங்கோல் எதிரிகளின் ஆட்சிக்கு ஒருபோதும் தலை வணங்கேன்' என உறுதி பூண்டிருந்தான்.

கவர்னர் கிட்ட நெருங்கி, 'நீ, அரசாங்கச் சின்னத்தை அவமதித்துக் கேலி செய்கிறாயா?' என்று வில்லியம் டெல்லைக் கேட்டான். அதே சமயம், கூட்டத்தின் மத்தியிலிருந்து 'அப்பா! அப்பா!,' என்ற சிறுவன் குரல் ஒன்று கேட்டது. கூட்டம் திரும்பித் தம்முள் பிளந்து வழிவிட, தகப்பனுக்குத் தெரியாமல் மார்க்கட்டுக்கு வந்திருந்த டெல்லின் குமாரன் தந்தையை நோக்கிப் பாய்ந்தோடி வந்தான். கவர்னர் அப்பையன் கையைப் பிடித்து நிறுத்தி, 'இந்தத் துணிகரமான ராஜத் வேஷியின் புத்திரனா இவன்?' எனக் கேட்டான்.

'அவனை இம்சிக்காதே; அவன் என் ஜேஷ்ட குமாரன்', என்றான் டெல்.

'ஓ! நான் அவனைத் துன்புறுத்த மாட்டேன்'; அவனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் அது என்னாலல்ல—உன்னால்தான் நேரும்,' என்று கூறித் தன் சிபாய்களில் ஒருவனைப் பார்த்து, 'இதோ! இந்தப் பையனைக் கொண்டுபோய் அந்த மரத்தின் அடிமரத்துடன் பிணித்து அவன் தலையில் ஒரு ஆப்பிள் பழத்தை வை', என்றான்.

'இவ்வேற்பாடு எதற்கு?' என்று கேட்டான் டெல். 'உன்னைப் பர்க்லென் வனத்து வில் வீரன் என்றழைப்பதாகக் கேள்விப்பட்

டேன். உன் வில் வித்தையின் சாமர்த்தியத்தைப் பார்க்க விரும்புகிறேன். உனது உயிர் ராஜ துரோகத்திற்காக இப்போது பறிமுதல் ஆகியுள்ளது. ஆனால் உன் உயிரை மீண்டும் பெற உனக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கிறேன். இப்போது நிற்கும் இவ்வளவு தூரத்திலிருந்து உனது பையன் தலையின்மேலுள்ள பழத்தை நீ அம்பினால் இரு பாதியாகத் தெறித்து விழும்படிச் செய்தால், உன்னை சுதந்திரமாய்ப் போக விட்டுவிடுவேன். அவ்வாறின்றி நீ எய்யத் தவறினால், அல்லது உனது சிறுவனைக் கொன்றால் நான் இந்த க்ஷணம், இதே இடத்தில் உன்னை சிரச்சேதம் செய்யச் சொல்வேன்', என்றான் கெஸ்லர்.

கோபத்தால் பொங்கித் துடித்த டெல், 'உனக்குக் கருணையில்லையா? என் உயிரைக் காத்துக்கொள்ள, எனது புத்திரனுடைய ஆவியை ஆபத்துக்குள்ளாக்குவேன் என்று நீ நினைக்கிறாயா?' என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

'நான் உனக்கு மிகத் தயாளம் காட்டுகிறேன். யோசித்துப் பார். ஒரே அம்பு! குறி தவறாமல் எய்துவிட்டு, உன் உயிரையும் காப்பாற்றிக் கொண்டு சுகமே வீடுபோய்ச் சேரலாமே' என்று அலட்சியமாகக் கூறினான் கெஸ்லர்.

புத்திர வாஞ்சை மேலிட்ட டெல் நடுங்கிய கையை நீட்டி, 'ஐய, தன் மகவை அன்புடன் நேசிக்கும் ஒருவன், எங்ஙனம் அவனுடைய குழந்தையின் கண்ணிற்குமேல் ஒரு அங்குலத்திற்குக் குறிபார்த்துத் தயங்காமல் அம்பெய்ய முடியும்? ஆ! இதோ இக்குழந்தையைச் சற்றுப் பாரும்! குற்றமற்ற இவன் அழகிய முகத்தைப்பாரும்! இந்த அன்பினிய உயிரையா நான் ஆபத்துக்குள்ளாக்குவது?' என்று உருக்கமாகக் கூறினான்.

கெஸ்லர் மிருகத்தனமாக நகைத்து 'சரி, அம்பு எய்கிறாயா? அல்லது மடிகிறாயா?' என்று கேட்டான்.

'அப்படியானால் இறந்துவிடத் தயார்,' என்றான் டெல்.

'உன் கண் எதிரிலே உன் குழந்தையின் கழுத்துத் திருகி எறியப்படுவதைப் பார்த்த பின்னர்' என்றான், கொடும்பாவி.

மலைவாசியான டெல் அடக்கமுடியாத—அளவு கடந்த ஆத்திரத்தால் துடிதுடித்தான். 'சரி என் வில்லைக்கொடு' என்றுகூறி 'தயையாக ஒன்று கேட்கிறேன். அக்குழந்தையின் முகத்தை மறுபக்கம் திருப்பி வை; அவன் கண்கள் என்னை உற்று நோக்காமலிருக்கட்டும்;—நான் அம்பு எய்கிறேன்' என்று கோரினான். அவன் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

உடனே வில்லியம் டெல் இரண்டு அம்புகளைப் பொறுக்கி எடுத்துக்கொண்டான். ஒன்றைத் தன் இடுப்புக் கச்சையில் சொருகிக் கொண்டான். மற்றொன்றை வில் நாணில் பொருத்திக் குறி பார்த்தான். 'விர்' என்ற சப்தம்—அம்பு முன்னோக்கிப் பாய்ந்தது தான்



தெரியும்—மரத்தின் பட்டையில் அது அழுந்தப் பதிந்ததைக் கண்டார்கள். பையனுடைய தலையின் இருபுறமும் ஆப்பில் பழம் இரு சமபாகமாகத் தெறித்து விழுந்தது. இதைக்கண்ட ஜனங்களின் சந்தோஷ ஆரவாரம் வானம் பிளக்கும்படி கிளம்பியது.

கெஸ்லர் டெல்லைப் பார்த்து 'ராஜத் வேஷியே! நீ அம்பு எய்தது சரிதான். ஆனால் இரண்டு அம்புகளை நீ ஏன் பொறுக்கியெடுத்தாய் என்பதைச் சொல்?' என்றான்.

டெல், கபடமற்று தீரமுடன் தன் கச்சையிலிருந்த அம்பைத் தொட்டுப் பார்த்துக்கொண்டே, 'முதல் அம்பு என் மகவைக் காயப்படுத்தியிருந்தால், இந்த இரண்டாவது அம்பு இந்நேரம் உன் ஹிருதயத்திற்குள் ஊடுருவிச் சென்றிருக்கும்,' என்றான்.

'ஓஹோ! அப்படியானால் என் உயிரே ஆபத்திலிருந்ததோ? இருந்தபோதிலும் நான் என் வார்த்தைப்படி நடப்பேன். நீ கொல்லப்படமாட்டாய். உன் உயிரை உனக்கு அளிக்கிறேன். ஆனால் உன் ஜீவிய காலம் முழுவதையும் எனது கோட்டையின் பாதாள இருட்டுச் சிறையில் கழிப்பாயாக. அதனால் உனது மாறாத குறியுள்ள அம்பும் எனக்கு ஆபத்து விளைவிக்காமலிருக்கும்' என்றான் அந்த கவர்னர்.

உடனே டெல்லை மறுபடியும் சிப்பாய்கள் பிணித்து வேகமாக இழுத்துச் சென்று, துறைமுகத்தில் ஏரிக்கரையோரத்தில் நிறுத்தியிருந்த் கவர்னர் கப்பலில் சேர்த்துத் தங்களுடன் கைதியாகக் கொண்டு சென்றார்கள்.

ஆனால், கப்பல் ஏரியைக்கடந்துகொண்டிருக்கும்போது திடீரென்று எதிர்பாராத ஒரு கொடிய கடூரமான புயல் எழும்பியது. அனைவரும் அப்புயலினால் கப்பலுடன் கவிழ்ந்து, நீரில் மூழ்கிச் சாக வேண்டிவரும்போலிருந்தது. அந்த ஆஸ்திரிய மாலுமிகளால் கப்பலைச் சரிவர நடத்திச் செல்ல இயலாமல் நம்பிக்கை முற்று மிழக்கலாயினர். அக்கலவரத்தில், அந்த ஏரியில் திறமையாகக் கப்பலோட்ட உலகத்திலேயே சிறந்த மாலுமி டெல்தான் என்ற விஷயம் அவர்கள் ஞாபகத்திற்கு வந்தது. தங்கள் கவர்னரிடம் ஓடிப்போய் இதைக் கூறினர். கெஸ்லர் 'அவனைக் கட்டவிழ்த்து விடுங்கள். அவன் நம்மைக் காப்பாற்றட்டும்' என்றான்.

டெல் கப்பலின் சுக்கானைப் பிடித்தான். அவன் கையால் வலித்து நடத்தப்பட்டதும் சிறிது நேரத்தில் அச்சிறு கப்பல் நேராகிவிட்டது. ஆனால், கரையை நோக்கி அவன் கப்பலை ஓட்டிச்சென்றபோது, அவன் கெஸ்லரைப் பற்றியாவது, அந்த ஆஸ்திரிய சிப்பாய்களையும் அவர்களுக்கு இருந்த ஆபத்தையும் பற்றியாவது சிந்திக்கவேயில்லை. தனது விடுதலையையும், தன் தாய் நாடான ஸ்விட்ஜர்லண்டு தேசத்தின் சுதந்திரத்தையும் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தான்.

ஆகையால், கப்பலைக் கரையிலிருந்து குறுக்கே ஏரிக்குள் நீண்டு நின்ற ஒரு பாறைக்கருகே செலுத்தினான். கப்பல் அதைத் தாண்டும்போது சடாலெனப் பாறையின்மீது தாவி, மடமடவென்று குன்றுகளைத் தாண்டி, மலைகளைக்கடந்து சென்றான்.

மறுபடியும் கெஸ்லர், புயலிலிருந்து ஒரு வேளை தப்பித்துக்கொண்டால் போகவேண்டிய பாதை எதுவோ அப்பாதையில், புதர்களுக்குள்ளே டெல் மறைந்துகொண்டு, அம்பை நாணேற்றி, தன் ஸ்விஸ் தேசத்தை கொடுங்கோலனிட மிருந்து விடுவிக்க திடசித்தத்துடன் காத்திருந்தான். பொழுதும் சாய்ந்தது; மலைகளும் இருளடைந்தன. அப்போது ஆட்கள் நடந்துவரும் காலடிச்சத்தம் கேட்டது. உற்று கவனித்தான். 'நான் உயிருடன் அல்டாரப் நகரத்திற்குத் திரும்பிப் போய்ச்சேர்ந்தால், அந்த ராஜத்துரோகி டெல்லையும், அவன் மனைவி மக்களையும் பூண்டோடு ஏககாலத்தில் நிர்மூலமாக்கிவிடுவது முக்காலும் சத்தியம்!', என்று சொல்லியது டெல்லின் காதில் விழுந்தது.

மறைந்திருந்த டெல், 'அல்டாரப்புக்கு நீ ஒருகாலும் உயிருடன் திரும்பிப் போய்ச் சேரப்போவதில்லை'! என்று தனக்குள் சொல்லிக்கொண்டு அம்பெய்யத் தயாராய் நின்றான். சிப்பாய்கள் வரிசையாகக் கடந்து சென்றதும் கெஸ்லர் கடக்கும்போது அவனுடலில் அம்பு பாய்ந்தது. கெஸ்லர் பிணமாக மண்ணில் விழுந்தான்.

வில்லியம் டெல், பின்னர் ஸ்விஸ் தேச ஜனங்கள், ஆஸ்திரியரான அந்நியர் ஆட்சியினின்றும் விடுபட்டுச் சுதந்திரமடையக் கிளர்ச்சி செய்தான். மூண்டு எழுந்த உணர்ச்சியினால் ஸ்விட்ஜர்லண்டு தேசம் விரைவில் சுதந்திர மடைந்தது!

**நம் நாட்டவரும் அத்தகைய சுயமரியாதை உணர்ச்சியுடனும், கௌரவமான கம்பீரத்துடனும், தேசத்தின் — தேசமக்களின் பேரில் உண்மையான பற்றுடனும் உழைத்துத் தேசவிடுதலை பெற முயற்சிப்பார்களாக.**


**தென்னிந்திய மகாஜன புத்தகசாலை**

**எல்லாப் புத்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்**

**வேண்டியவற்றிற்கு எழுதுங்கள்**

**செங்குந்த மித்திரன் ஆபீஸ்,**

**151, பவழக்காரத் தெரு சென்னை.**


208499

# இளைஞர்களின் கடமை என்ன?

**பம்பாயில், இளைஞர் சகோதரச் சங்கத்தில், திருமதி சரோஜனி தேவியார் "இளைஞர்கள் சமூக சேவை செய்யவேண்டும்" என்று வற்புறுத்திப் பேசிய வீராவேசமான மொழியினை ஒவ்வொருவரும் ஊன்றிப் படிக்கவேண்டும். அதன் சாராம்சத்தைக் கீழே தருகிறோம்.**

## சமதர்மம்

பரோபகாரத் திருப்பணியின் உத்தம லட்சிய மென்னவெனில், ஒரு தேசத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் ஒரு சமுதாய வாழ்வைப்போல நடந்து, எல்லாருக்கும் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அளிப்பதேயாகும். ஒரு சிலர் மற்றவர்களை ஆட்டி வைப்பதென்பது கூடாது. அடிமைத் தளைகள் கல்வியிலோ, மதத்திலோ, அரசியலிலோ அன்றிப் பொருளாதாரத்திலோ எங்கே யிருந்தபோதிலும் அவைகளை உடைத்தெறிந்து, சமதர்மத்தை நிலைநாட்ட வேண்டியது இளைஞர்களின் கடமையும் லட்சியமுமா யிருத்தல் வேண்டும். உங்கள் சேவை ஒரு யுத்தமாகும். உங்கள் சமாதானம் வெற்றியாயிலங்கவேண்டும். தற்கால உலகம் இளைஞர்களின் உலகமா யிருக்கிறது. இளைஞர்கள் சிந்திக்கிறார்கள்; சேவை செய்கிறார்கள்; தீர்மானிக்கிறார்கள்; அற்புதக் காரியங்களைச் செய்து முடிக்கின்றனர். முன்னோர்கள் செய்த தவறுகளை யெல்லாம் இளைஞர்கள் போக்கி, உலகத்தைத் திறம்பட நடத்துகின்றனர்.

## இறந்த காலமும், நிகழ்காலமும்

காலத்திற்குப் பொருத்தமற்ற—உபயோகமற்ற, முன்னேற்றத்தைப் பாதிக்கின்ற, பகுத்தறிவை யழிக்கின்ற இறந்தகால மூடப் பழக்கங்கள், வழக்கங்கள், ஆசாரங்கள், நம்பிக்கைகள் முதலியவைகளின் பிடிப்பிலிருந்து நிகழ்காலத்தில் இளைஞர்கள் விடுதலை பெற்று, சுயேச்சையாய், சுயஅறிவுடன், சுய நிர்ணயத்துடன் தங்கள் மூளையின் பகுத்தறிவைச் செலுத்தி நடந்துவருகின்றனர். வயோதிகர்கள், முன்னோர்கள், முன் தலைமுறைகளில் வாழ்ந்தவர்கள் இளைஞர்களைப் பாதுகாப்பதற்காக அவர்களைப் பஞ்சு வஸ்திரங்களாலும், கம்பளிப் போர்வைகளாலும் போர்த்துச் சுருட்டி, அவர்கள் பகுத்தறிவை யடையாதவாறு தடுத்து வந்தார்கள். பெரியோர்கள் என்பவர்கள் சிறியோர்களைத் தங்கள் இஷ்டப்படி ஆட்டி வைத்துத் தங்கள் கட்டளைப்படி இளைஞர்கள் நடக்கவேண்டும் என்பதைப் பெரிதாக எண்ணினார்களே யல்லாது, இளைஞர்கள் அறிவு ஆராய்ச்சிகளைப் பெறவேண்டும் என்பதை அவர்கள் எண்ணவில்லை. ஆனால் முதியோரின் ஆதிக்கத்தை யுடைத்து, அவர்கள் வகுத்த எல்லையையும் வேலியையும் இளைஞர்கள் தாண்டி, சுயேச்சை பெற்று, சுய அறிவுடன் முற்போக்

தென்னும் பாதையில் செல்ல ஆரம்பித் திருக்கின்றனர். இளைஞர்களின் எண்ணம், சிந்தனை, லட்சியம் ஆகியவைகள் பெரிதும் விசாலமடைந்து, வயோதிகர்களின் குறுகிய மனப்பான்மையை எதிர்த்துத் தாராள நோக்கத்துடன் நடந்து செல்கின்றன.

## இளைஞர்களின் தீவிரம்

இளைஞர்கள் தற்பொழுது தீவிர எழுச்சி பெற்றிருக்கின்றனர். பெற்றோர்கள் அல்லது பெரியோர்கள், உபாத்திமார்கள் அல்லது குருமார்கள் இளைஞர்களை மூக்காங் கயிறு போட்டு இழுப்பதை இளைஞர்கள் வெறுக்கின்றார்கள். முதியோரின் "பாதுகாப்புக்கு" இனி அவசியமில்லை என்று அவர்கள் கருதுகின்றனர். இப்படி வேண்டப்படாத ஆதிக்கத்தைத் தொலைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்கள் தங்களை முற்போக்கு அடையவொட்டாமல் தடுத்துவரும் வயோதிகர்களுக்கும் புத்தி புகட்டி, அவர்களை நல்வழிப்படுத்தி, நவீன நாகரீகத்தின் தேவைக்கேற்றவாறு நடக்கும் பயிற்சியைக் கொடுக்கும் பொறுப்பையும் ஏற்றுவருகின்றனர். இளைஞர்களின் பிரசாரத்தின் எதிர்ப்பின் பயனாய், முதியோர்களின் மனப்பான்மை சிறிது தாராளமாகவும் சுதந்தரத்தை யாதரிக்கும் முறையிலும் திருந்தி வருகின்றது.

## கொடுங்கோன்மையும், கட்டுக் கடங்காமையும்

நெடுங் காலமாக முதியோர்களைக் கொடுங்கோன்மையாளர்கள் என்று இளைஞர்கள் குறைகூறி வந்திருக்கின்றனர். இதற்கு மரியாதை செய்யும் முகமாய் முதியோர்கள் இளைஞர்கள் கட்டுக் கடங்காதவர்களாகவும், அடங்காப் பிடாரிகளாகவும் இருந்து வருகிறார்கள் என்று பதிலளித்து வருவதை யாவரும் உணர்வார்கள். இளைஞர்கள் பழைய கட்டுத் திட்டங்களை மீறி நடக்கிறார்கள் என்பது இளைஞர்கள் பெறும் முதல்தரமான நற்சாட்சிப் பத்திரமாக நான் மதிக்கிறேன். ஏனெனில், இளைஞர்கள் சுயமாகவே காரிய காரணங்களையும், பொருத்த நிமித்தங்களையும் ஆராய்ச்சி செய்து, தங்கள் அறிவாற்றல்கள் காட்டும் மார்க்கத்தில் செல்லும் யோக்கியதையைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதற்கு இஃதோர் பெரிய அத்தாட்சி யாகும்.

## மந்திரங்களும், வேற்றுரைகளும்

மந்திரங்களும் சுலோகங்களும் நல்லவைகளே; அவைகள் மக்களின் இருதயங்களி லிருந்து நேரே வெளிவருகின்றன. ஆனால், அவைகளை உரிய காலத்திலும் அகாலத்திலும் எவ்வித நியதியுமின்றி, அர்த்தமின்றி, அவசியமின்றிக் கிளிப்பிள்ளைகளைப் போல் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டே வந்தால் அவைகள் வேற்றுமைகளாகி விடுகின்றன. அவைகளின் கௌரவமும் மதிப்பும் மலையேறி விடுகின்றன.



சுதந்தரம், சுதந்தரம் என்று நாம் முழக்கி வருகிறோம். அடிமையில் மூழ்கித் தவிக்கும் நாம் சுதந்தரம் என்கின்றோம். நாம் நமது உரிமையை இழக்கின்றோம் எனினும், உரிமை உரிமை என்று மட்டும் உளறிக் கொட்டுகின்றோம். நாம் நமது பிறப்புரிமையை விற்கத் தயாராயிருக்கின்றோம் எனினும், விடுதலை விடுதலை என்று கர்ஜிக்கிறோம். இப்படி இம் மகா மந்திரங்களையும் சுலோகங்களையும் சொல்லிச் சொல்லி, இப்பதங்களையே நாம் சுதந்தரம் என்றும் விடுதலை என்றும் எண்ணி ஏமாந்துபோகின்றோம். நாம் கோரும் சுதந்தரம் என்பது என்ன? எம்மாதிரியான சுதந்தரத்திற்கு நாம் உழைத்து வருகிறோம்! ஆங்கிலேயர்கள் சுதந்தரம் என்று சொல்லும்பொழுது பொருளாதார சுதந்தரத்தையே எண்ணிப் பேசுகின்றார்கள். ஆனால், நாம் கோரும் சுதந்தரம் அந்தக் கருத்தை யுடையதன்று. இந்தியர்கள் எல்லாவிதமான அடிமைகளி லிருந்தும் விடுதலையடைய வேண்டும்; அன்னியர் ஆதிக்கம், சமூகக்கொடுமை, பொருளாதார அடிமை, எல்லாவற்றிற்கும் பிறரை நம்பியிருக்கும் மனப்பான்மை ஆகிய எல்லாவற்றையும் ஒழித்து சுதந்தரமாய் வாழவேண்டும் என்பதே இந்தியர் கோரும் சுதந்தரத்தின் அர்த்தமாகும். அன்னியர் ஆதிக்கத்தின் பெரிய துன்பம் என்னவெனில் அது நமது மூளையை யொடுக்கிவிடுவதே யாகும். இந்த விஷம், நம்மையும் அறியாமலே நம் உள்ளத்தில் புகுந்து நம்மைப் பரம அடிமைக ளாக்கிவிடுகின்றது. மேனாட்டு மூளைக்கு நாம் அடிமைப்படாம லிருப்பதே, நாம் கோரும் முதன்மையான சுதந்தரமாகும்.

'தனவணிகன்'

---

# அது என்ன?

1. பச்சைப் பசத்திருக்கும், பந்தலிலே வந்து நிற்கும்
   இச்சை கொளச்செய்யும், இலையென்று பேர்படைக்கும்
   — அது என்ன ?
2. கன்னங் கறுத்திருக்கும், கல்யாண வாசல் புகும்
   தின்னத் திகட்டாது தேடுவார் கையிருக்கும்— அது என்ன ?
3. நான்கு காலில் நிற்பான், நடக்கத் தெரியாது
   காலுக்கு இடங்கொடுக்கான், கயிறுகளைப் போருகொள்வான்
   — அது என்ன ?
4. தாடி சடை வளர்ப்பான், தையல் சுமை எடுப்பான்
   பாடித் திரிவார்க்குப் பக்கத் துணை இருப்பான் — யார் ?
5. தண்ணீர் குடிப்பான், தலைச்சம் பிள்ளை பெறுவான்
   மண்ணிலே நின்றிருப்பான், மக்களால் மாய்ந்திடுவான்
   — யார் ?
6. கன்னங் கறுத்திருக்கும், காம்பு மேலே இருக்கும்
   கிண்ணம்போல் கீத்திருக்கும், கீழே மறைந்திருக்கும்
   — அது என்ன ?

# செங்குந்த யாத்திரைவாசி

அங்கு கூடியிருந்தவர்கள் சொல்ல வேண்டியவற்றை யெல்லாம் சொல்லி முடித்துக் கடைசியாக தீர்ப்பு சொல்லவேண்டிய பெரும் பாரத்தை என்மேல் தள்ளிவிட்டார்கள். ஆனால், விவாதத்திற்கிடமான இம்முக்கிய விஷயத்தைப் பற்றித் தீர்ப்பு கூற எனக்குமாத்திரம் கொஞ்சம் பயந்தான். என்றாலும், 'இது ஒரு கிராமந்தானே, இங்கு மறுத்துப் பேசுவோர் யாரிருக்கப் போகிறார்கள்' என்ற தைரியத்தால் ஒருவாறு துணிவு கொண்டேன். அதுதான் கிராமமென்றால் இப்போது என்ன செய்கிறது. நமது மித்திரன் உலகமுழுதும் சுற்றி வருகிறான். ஆகவே என் தீர்மானத்தைப் பற்றிப் பல அறிஞர்கள் கட்டாயம் பலவிதமாகப் பேசுவார்கள் என்பதை அறிந்து அஞ்சுகிறேன். என்றாலும், உண்மையை மறைத்துப் பேசுவது என் வழக்கத்திற்கு விரோதமாகையால் உள்ளதை உள்ளபடியே சொல்லிவிடுகிறேன். குற்றமிருப்பின் பெரியோர்கள் மன்னிப்பார்களாக. என் தீர்மானத்தின் சாராம்சம் கீழ்வருமாறு:—

பெரியதனக்காரர் அவர்களே! மற்றுமுள்ள சகோதரர்களே! இப்போது நாம் பேசிக்கொண்டிருந்த குருக்கள்மார் விஷயமாக என் அறிவுக் கெட்டியவாறு தீர்ப்பு சொல்லுகிறேன். நீங்கள் முன்பின் அறியாத ஒரு வழிப்போக்கன் யான். என் தீர்மானமும் ஒருபோக்காகத்தானிருக்கும். அது உங்களை எவ்வளவு தூரம் கட்டுப்படுத்தும் என்பதை அறியேன். ஆனால் உங்கள் அனைவரையும் கட்டுப்படுத்த வேண்டுமென்பது என் கோரிக்கை யல்ல. ஆழ்ந்து யோசியுங்கள். பொருத்த மெனத் தோன்றினால் கொள்ளுங்கள். இல்லையேல் தள்ளுங்கள். கவனித்து மாத்திரம் கேளுங்கள்.

வயோதிகர்கள், பழைய கொள்கைகளே மக்களுக்கு இகபர சாதனங்களைக் கொடுக்கவல்லன, பெரியோர்களால் ஏற்படுத்தப் பெற்ற அவற்றை மாற்றவே கூடாது என்று எண்ணுகிறார்கள். வாலிபர்களோ, பழைய கொள்கைகள் தற்காலத்திற்குப் பொருத்த மற்றவை, அவற்றை அடியோடு களைந் தெறியவேண்டு மென்றும், அவையே நம் நாட்டின் தற்காலப் பிற்போக்கிற்குக் காரணம் என்றும் சொல்லுகிறார்கள். பழங்காலத்திற்கும் இக்காலத்திற்கும் வித்தியாசம் இல்லாமற் போகவில்லை. எது எப்படி இருந்தாலும், இரு பக்கத்தாரும் மக்கள் க்ஷேமங் கருதியே இம்மாறுபட்ட கொள்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். சுயநலம், பிடிவாதம் முதலியவை யின்றிப் பொதுநலங் கருதியோர் பொருத்தமான தீர்மானத்தை ஒருக்காலும் நிராகரிக்கவே மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். ஆகையால் நியாயத்திற்கும், ஒழுங்கிற்கும் கட்டுப்படுபவர்களாகிய இருபக்கத்தாரையும் ஒன்று படுத்துவது சுலப சாத்தியமேயாகும். சுயநலமோ பிடிவாத குணமோ யாரிடமாவது இருக்குமாயின் அவர்களை ஒன்றுபடுத்த யாராலும் இயலாது.

ஆகவே சகோதரர்களே! யான் கூறுவதை உற்றுக் கேளுங்கள். பொருத்தமானதாயின் ஏற்றுக்கொண்டு ஒற்றுமைப்படுங்கள். மனம்



ஒன்றுபட்டபோதே எக்காரியமும் சித்திபெறும். அது விரிந்து பல முகப் பட்டால் எடுத்த காரியம் சிதைவுண்டு அபஜெய முண்டாகும். ஜீவன், பேத புத்தியை ஒழித்து சிவத்தோடு இரண்டறக் கலந்தபோதே பேரின்ப முண்டாகிறது என்று கோஷிக்கின்றன ஞான நூல்கள். பேத புத்தியுள்ள வரையில் ஜீவன் அளவிறந்த துன்பத்தை அனுபவிக்கிறான் என்பதை நாம் அனைவரும் அறிவோ மல்லவா? அதுபோலவே லௌகிக வாழ்க்கையிலும், ஒற்றுமையுடைய மக்கட் கூட்டத்தவரே எல்லாவகையிலும் மேம்பட்டு விளங்குகிறார்கள். சகோதரர்களே! ஒற்றுமையே மக்கள் வாழ்க்கைக்கு அஸ்திவாரமென்பதை நீங்கள் உங்கள் மனதில் அழுத்தமாகக் கொண்டிருத்தல் வேண்டும். இதுதான் வாழ்க்கையின் ரகசியம். உங்களூரிலுள்ள பிரிவிற்கும், மற்ற ஊர்களிலுள்ள கக்ஷிகளுக்கும் பெரு வித்தியாசமுண்டு. கோயில் வழக்குகளும், அடி தடி சண்டைகளும், தாய் வீட்டிற்குப் போன பெண் தாய் வீட்டிலும் மாமி வீட்டிற்குப் போன பெண் மாமி வீட்டிலும் தங்கிவிடுதலும், வயதுக்கு வந்த பெண்களும், பிள்ளைகளும் ஒற்றுமையை எதிர் பார்த்துப் பார்த்துத் திருமண மாகா திருத்தலும், இவைபோன்ற பிற கஷ்டங்களும் உங்களூரிலில்லை. என்றாலும், உங்கள் ஒவ்வொரு வீடும் இரண்டுபட்டிருக்கிறது. இது ஊர் கக்ஷி யல்ல. காலச் சக்கரத்தால் இளையோருக்கும் முதியோருக்கும் ஏற்பட்டுள்ள அபிப்பிராய பேதமாகும். இதில் பெண்களும் வயோதிகர்களும் ஒருபக்கம், வாலிபர்கள் மாத்திரம் மற்றொரு பக்கம். வாலிபர்கள் தொகையிற் குறைந்தவர்களா யிருப்பினும் அவர்களே பல முள்ளவர்கள். ஆகவே, வெற்றி அவர்களுடையதாகவே இருந்திருக்கவேண்டும். ஆனால், வாலிபர்கள் இதுவரையில் வெற்றி யடைந்ததாகத் தோன்றவில்லை. எனக்குப் பட்டவரையில் அதற்கு இரண்டு காரணங்களுண்டு. முதலாவது, வாலிபர்களுக்குச் சரியான வழிகாட்டி நடத்த வல்ல தலைவருமில்லை, அவர்களுக்குப் போதிய மனோதிடமுமில்லை. இரண்டாவது, பெண்மணிகள் வாலிபர்கள் பக்கமில்லை. பெண்கள் மனப்பூர்வமாக ஆதரிக்காத எந்த சீர்திருத்தமும் ஈடேறாது என்கிற உண்மையை நீங்கள் என்றும் மறக்கலாகாது. பகுத்தறிவையும், ஆராய்ச்சி புத்தியையும் தரவல்ல கல்வி கற்காத பெண்மணிகள் ஒருநாளும் எவ்வகைச் சீர்திருத்தத்தையும் சுலபத்தில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, பெண்களுக்கு மேற்கூறிய கல்வி அவசியம் வேண்டும். தெளிந்த அறிவுள்ள ஒரு தலைவர் அவசிய மிருக்கவேண்டும். நெடுங்காலமாக நிலைத்துள்ள கொள்கைகளையெல்லாம் அடியோடு அழித்துவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் புகுத்த வேண்டிய புதிய கொள்கைகளைத் தகுந்தபடி ஸ்தாபிக்க சக்தி யில்லாதவர்கள் தலைவர்களாக இருக்க யோக்கியதை யற்றவர்களே யாவார்கள். சீர்திருத்தம் அவசியமென்றாலும் ஆப்கன் அரசனாயிருந்து நாடுகடத்தப்பட்ட அமனுல்லாவைப் போல் அவசரப்பட்டு, வரும்பயனைக் கருதிப்பாராது தலைதூக்க முயல்வதும் மிகவும் ஆபத்தானது. பொதுமக்களின் மனதில் வேரூன்றி யுள்ள சில முக்கியமான கொள்கைகளைத் தேவையான அளவு திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டுமே யொழிய அதனை அடியோடு அழிக்க முயல்வது அறிவுடைமை யாகாது.

(தொடரும்)

# இந்திய பொருளாதார கஷ்டம்

[அ. பழனியப்பன், காரமடை]

இப்பொழுது உலகத்தின் ஒவ்வொரு முக்கிய தேசங்களும் பொருளாதாரக் கஷ்டத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம் ஒவ்வொரு தேசத்திற்கும் வெவ்வேறா யிருந்தபோதிலும், எல்லா தேசங்களுக்கும் சில காரணங்கள் பொதுவா யிருக்கின்றன. 1914-ம் வருஷத்திய மகாயுத்தம் முதலாவது காரணமாகவும், மனிதனின் தேவைக்கு மீறின சாமான்களை உற்பத்தி செய்தல் அதற்கடுத்த காரணமாகவும் கூறப்படுகிறது. இவ்விரண்டு காரணங்களும் மற்ற தேசங்களை பாதிப்பதுபோலவே நம் இந்தியாவையும் பாதிக்கின்றன.

தற்போது அநேக கவர்ன்மெண்டுகள் தங்கள் செலவுக்குத் தக்க வரவை அடைய முடியாமல் தயங்குகின்றன. ஐரோப்பிய யுத்தத்திலீடுபட்ட தேசங்கள் அமெரிக்கா போன்ற தேசங்களிலிருந்து யுத்தம் நடத்துவதற்கு வேண்டிய ஏராளமான கடனைப் பெற்றிருந்தன. அக்கடனை பல தவணைகளாக வட்டியும் சேர்த்துச் செலுத்தவேண்டியிருப்பதால் அதிக செலவேற்பட்டன. உற்பத்தி செய்யும் சரக்குகளுக்குச் சரியான தேவை யில்லாமையால், தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை. தொழிலாளிகள் கஞ்சி யின்றி கலங்குகிறார்கள். இக்காரணங்களால் ஐரோப்பிய நாடுகள் கஷ்டமடைந்துள்ளன. அதே சமயத்தில் நம் இந்திய தேசம் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்று பார்ப்போம்.

இந்திய தேசம் யுத்தத்தினால் எவ்விதம் பாதிக்கப்பட்டதென்று பார்க்குமுன், யுத்தத்திற்கு முன்பு இந்தியாவின் பொருளாதார நிலைமையைச் சற்று கவனிக்கவேண்டும். இப்பொழுது எவ்விதம் விலைவாசிகள் குறைந்திருக்கின்றனவோ, அப்படியே யுத்தத்திற்கு முன்பு வெகு காலமாக விலை குறைந்தே யிருந்தன. அவ் விலைகளுக் கேற்றபடியே பூமிகளின் விலைகளு மிருந்தன. அதற்குத் தகுந்த கூலியையே கூலியாட்களும் பெற்றுக்கொண்டு, குடியானவனும் கூலியாட்களும் ஜீவனம் நடத்தி வந்தனர். இதுவும் தவிர வெளி நாட்டு சரக்குகள் இப்பொழுது இறக்குமதியாவது போல் இறக்குமதி யாகவில்லை. இறக்குமதி குறைந்தால் ஜனங்கள் தேவை குறையும். தேவை குறையும்பொழுது பணமும் அதிகமாக மிஞ்சும்.

1914-ம் வருஷம் ஐரோப்பாவில் யுத்தம் ஆரம்பித்தது. யுத்தத்தில் அநேக தேசங்கள் ஈடுபட்டன. ஈடுபட்ட தேசங்கள் தங்கள் விவசாயம், கைத்தொழில் முதலியவைகளை விட்டுவிட்டு தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, ஏராளமான யுத்த தளவாடங்களையே உற்பத்தி செய்தன. விவசாயம், கைத்தொழில் முதலியவைகளை விட்டுவிட்டபடியால், உணவுப் பொருள்களை வெளி தேசத்தி லிருந்து அவை



எதிர்பார்த்தன. நமது இந்திய தேசம் விவசாய தேசமானபடியால், யுத்தத்தில் ஈடுபட்டிருந்த தேசங்களுக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்து அனுப்பத் தலைப்பட்டது. வெளி நாட்டி லிருந்து ஏராளமான தேவை யிருந்தபடியால் விளைபொருள்களின் விலை அதிகமாக ஏறியது. யுத்தத்திற்கு முன்பு இருந்ததைவிட இரட்டித்தது. அப்பொழுது குடியானவர்கள் அதிக வட்டிக்குக் கடன்கள் வாங்கி, அதிக ஆட்களை நியமித்தும், ஏராளமான பூமிகளை விலைக்கு வாங்கியும் அதிக உற்பத்தி செய்யத் தலைப்பட்டனர். விளைபொருள்களின் விலைக்கேற்றபடியே, பூமிகளின் விலைகளும் இரட்டித்தன. குடியானவர்கள் தங்கள் சரக்குகளை அதிக விலைக்கு விற்றமையால் வட்டியை சரிவரக் கட்டமுடிந்தது.

மகா யுத்தம் 1919ஹு முடிந்தும் ஐரோப்பிய நாடுகள் சண்டையால் ஏற்பட்ட நாசங்களை சீர்படுத்திக்கொண் டிருந்தன வாகையால் விலைவாசிகள் யுத்தத்தின்போது விற்ற விலைகளாகவே யிருந்தன. சில வருஷங்களுக்குப் பின் அந்த தேசங்கள், தங்களுக்கு வேண்டிய பொருள்களைத் தாங்களே உற்பத்தி செய்யவும், அல்லது தங்களுக்கு அருகாமையி லிருந்த தேசங்களி லிருந்து தருவிக்கவும் தொடங்கின. அதனால், இந்தியாவில் வெளிநாட்டு கிராக்கி குறைந்தது. ஆனால், விளைபொருள்களோ அச்சமயம் அதிகமாக உற்பத்தியானபடியால், அவைகளை முன் விற்ற விலைக்கு விற்க முடியவில்லை. விலைகள் யுத்தத்திற்கு முன்னிருந்த அளவுக்குக் குறைந்துவிட்டன. அப்பொழுது குடியானவன் முன் செலுத்தியபடி அதிக வட்டியும், முதலும் செலுத்த சக்தி யற்றவனாகி கஷ்டப்பட்டான். விலைகள் குறையவே குடியானவன் பூமிகளும் அதற்குத் தக்கபடி மதிப்பில் குறைந்தன. இதனால் கடன் கொடுத்தவனும் கஷ்டப்படவேண்டி நேர்ந்திருக்கிறது.

இந்தியாவி லேற்பட்ட கைத்தொழில்களும் சண்டைக்குப் பின் பலமாக பாதிக்கப்பட் டிருக்கின்றன. யுத்தத்தில் கடன்பட்ட தேசங்கள் தங்கள் கடன்களை தீர்ப்பதற்காகப் போட்டி போட்டுக்கொண்டு யந்திரங்களின் உபயோகத்தால் எல்லாவிதமான சாமான்களையும் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றன. தேசங்கள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டு ஏராளமான சரக்குகள் உற்பத்தி செய்வதால், வியாபாரத்திலும் பலத்த போட்டி ஏற்பட்டு விலையும் தலைகீழாய்க் குறைந்துவிட்டது. இதனால் இந்திய சாமான்கள் விற்பதற்கே இடமில்லாமற் போயிற்று.

இவ்வித காரணங்களினால் இந்தியாவில் பொருளாதாரக் கஷ்டம் ஏற்பட்டது. இப்பொழுது இங்கே ஜப்பானும், லங்காஷயரும் நெசவுத் தொழிலில் பலத்த போட்டி போட்டுக்கொண்டு வியாபாரம் செய்வதால், இந்திய மில் துணிகளும் கைத்தறித் துணிகளும் விலையாகாமல் தேங்குகின்றன. இதைப்போல் இன்னும் அநேக காரணங்க ளிருக்கின்றன.

# தும்—பம்—தீம்—தோம்

(J. ரவூல் இலேர், புதுவை)

சிங்காரமே நிறைந்த சென்னையம்பதியில் மரிணா கடற்கரையில் மாலை வேளைகளைக் கழிக்கும் வாலிபர்களில் பஞ்சாக்ஷரமும் ஒருவன். இந்திய சர்வ கலாசாலைப் பட்டங்களுக்குத் தற்போது மதிப்பில்லை யென்று (Oxford) சர்வ கலாசாலைக்கேகி எம். எ. பட்டம் பெற்றுத் தேர்ந்தவன். இவன் ஆக்ஸ்போர்டில் வாசிக்கும்போதே இவன் தாய் தந்தைய ரிறந்துவிட்டனர். படிப்பை முடித்துக்கொண்டு சென்னை திரும்பியவன் திரண்ட செல்வத்துக் கதிபதியா யிருந்த போதிலும் மிகுந்த சலிப்புடன் தனிமையாய் இருந்துவந்தான்.

ஒரு நாள் இயற்கை அன்னையின் ஆண்மையில் லயப்பட்டவனாய் வழக்கத்துக்கு மாறாக மணி ஏழாகியும் கடற்கரையில் உட்கார்ந்த இடத்தைவிட்டு அவன் நகரவில்லை. திடீரென்று சற்று தூரத்தில் ஏதோ ஒரு உருவம் கடலில் குதித்ததுபோல் இருந்தது. அத்திசையை நோக்கி ஓடோடிச் செல்ல அங்கு பெண்ணொருவள் தண்ணீரில் மூழ்கி மூழ்கி எழுவதைக் கண்டு பிரமித்துப் போனான். சில நிமிடங்களில் ஆதரவற்ற உயிரொன்று தவிக்கிறது, அதைக் காப்பாற்றவேண்டியது தன் கடமை என்ற ஒரே கருத்துடன் தண்ணீரில் பாய்ந்து சாமர்த்தியமாய்ப் பெண்ணை கரை சேர்த்து மூர்ச்சை தெளிவித்தான்.

உருவம், உருவத்திற்கேற்ற பருவம் இவ்விரண்டும் அமைந்திருந்த அவ்விளங் கொடியை, அவள் அணிந்திருந்த சேலை சரியாய் மறைக்கா விட்டாலும், இந்தியத் தாய்மாருக்கு இயல்பாயுள்ள நாண மென்கிற ஆடை அவளைச் சரியாய்ப் போர்த்தி நின்றது.

பஞ்சாக்ஷரம்:—பெண்ணே! என்னபேதைமை, நீ இவ்விதக் காரியம் செய்யத் துணிந்தது ஏனோ? உன் உயிர் உனக்கே சொந்தம் என நினைத்தனைபோலும்.

பெண்:—ஐயா, புருஷோத்தமரே! அநாதையான என்னைக் காப்பாற்ற முற்பட்ட உம்முடைய காருண்ய சித்தத்துக்காக உமக்கு என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். எனினும், நான் உயிர் தப்பியது, என் துரதிர்ஷ்டமே. அதற்காக என் விதியை நான் நொந்துக் கொள்கிறேன் என்று பதிலிறுத்து ஆவலுடன் தன் முந்தானையிலுள்ள ஒரு முடிச்சியைத் தேடினாள். அது இருப்பதைக் கண்டு ஒருவாறு திருப்தி பட்டுக்கொண்டாள்.

பஞ்சாக்ஷரம்:—பெண்கள் நாயகமே! உன் வரலாற்றை நான் அறியலாமா?

பெண்:—என் வரலாற்றை யார் அறிந்தும் ஒன்றும் செய்யப் போவதில்லை. எனினும், உம்மைப்போ லொத்த புண்ணிய புருடரிடம் அதைத் தெரிவிப்பதால் குற்றமொன்று மில்லை. நான் ஒரு செல்வச் சீமானின் புத்திரி. என்னை விஜயாளென் றழைப்பார்கள். நான் சிறு வயதா யிருக்கும்போதே என் தாய் இறந்து விட்டாள். அவ் வம்மையாரின் அற்ப ஆயுளுக்குக் காரண பூதர் என் தந்தையேயாவர். குணவானாகிய அவருக்கு சகவாச தோஷத்தால் கொஞ்சம் மதுவில் விருப்ப மேற்பட்டது. நாளடைவில் இது வேரூன்றியது. எனது தாயாரின் சற்போதனைகள் விழலுக் கிறைத்த நீராயின. இந்தக் கவலையால் அவர்கள் வாழ்நாள் குறுகிற்று. தாயார் இறந்ததும் என் தந்தை தன் னடக்கத்தை முழுதும் இழந்தார். குடி வெறியால் அவர் செய்யும் அட்டூழியங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் அளவில்லை. குடி அவர் கண்ணை மறைக்கிறது. உயர்ந்த பங்களாக்க ளெல்லாம் போய், தற்போதைய இருப்பிடம் குடிசையாயிற்று. இன்று என் அப்பாவானவர் என் முந்தானையில் முடிந்திருக்கும் இக்கடிதத்தைத் தந்து சில குறிப்புகள் சொல்லி அக்குறிப்புள்ள இடத்தில் சேர்த்துவிடும்படி ஆக்யாபித்தார். நமது செல்வி சிறுவளாயிற்றே, அதுவும் தனிவழியாயிற்றே என்று யோசித்தாரில்லை. அவர் கோபத்துக்குப் பயந்து கால் எடுத்து வைக்கவும் சக்தியற்றவளாய் நான் புறப்பட்டேன். வழியில் என் சாபல்யமற்ற வாழ்க்கையின் கஷ்டங்கள் என் நெஞ்சைப் பிளந்தன. நேரே இவ்விடத்தை நண்ணி சிறிதும் யோசியாமல் ஜலத்தில் குதித்தேன். பெண்ஜென்மம் புண்ஜென்மம் என்ற கூற்று என் விஷயத்தில் பொருத்தமே.

பஞ்சாக்ஷரம்:—அவர் கொடுத்த கடிதத்தை நான் படிக்கலாமா?

விஜயாள்:—ஒருவர் கடிதத்தை அன்னோர் அநுமதி யில்லாமல் வாசிப்பதும், ஒருவர் பேசுவதை மறைந்திருந்து கேட்பதும் உயர்ந்தோர் செய்கை அல்லவென்பது நான் சொல்லாமலே தாங்கள் அறிவீர்கள்.

பஞ்சாக்ஷரம்:—உண்மையே. ஆனால், உன் தந்தை மதுபானியாகையால் சுய அறிவை இழந்து ஏதாவது எழுதியிருக்கலாம். அது பின்னால் என்ன கேட்டை விளைவிக்குமோ?

விஜயாளின் சம்மதத்தின் பேரில் பஞ்சாக்ஷரம் தன் கையிலிருந்த டார்ச் லைட் உதவியால் நனைந்திருந்த கடிதத்தை மிகுந்த கஷ்டத்துடன் வாசித்தான். அது பின் வருமாறு:—

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

மேலே கூறப்பட்டுள்ள பொருளாதாரக் கஷ்டத்தை ஒருவாறு சரிப்படுத்துவதற்கு அமெரிக்கா போன்ற தேசங்கள் பலத்த முயற்சி செய்கின்றன. அநேக சட்டங்களையும் பிறப்பித் திருக்கின்றன. அம்மாதிரியே, நம் இந்திய கவர்ன்மெண்டாரும் சில முயற்சிகள் செய்கின்றனர். அம்முயற்சிகள் எவ்வளவு தூரம் பயன்படுமென எதிர் பார்க்கப்படுகின்றன.

ஆருயிர் நண்பனே,

என்ன கஷ்ட மிருந்தாலும் என் வழக்கத்தை நிறுத்தி வைக்கக் கூடவில்லை. சாராய தாகம் தொண்டையை வறட்டுகிறது. இக் கடிதம் கொண்டுவரும் ரூபவதியை விற்றாவது பணம் சேகரித்து வா. தங்கசாலை இதற்கேற்ற இடம். உன்னை மறந்துவிடமாட்டேன்.

இப்படிக்கு :
உன் பிரியன்,

............................

திடுக்கிட்டாள் பெண். அலைவாய்ப் பட்ட துரும்புபோல இருவர் மனமும் தத்தளித்தது. பஞ்சாக்ஷரம் அப் பெண்மணிக்குத் தைரியம் கூறி, ஒரு பத்து ரூபாய் நோட்டொன்றை அளித்து, இதை அவன் கடிதம் கொடுத்தவர் கொடுத்ததாகச் சொல்லிக் கொடுத்துவிடும்படியாய்ச் சொன்னான். தவிரவும், இனி அவள் தற்கொலை செய்து கொள்ள முற்படுவதில்லை என்ற வாக்குறுதியை அவளிட மிருந்து வாங்கிக்கொண்டு, அவளது இல்லத்தில் அவளைக் கொண்டு சேர்த்து அகன்றான். பத்து ரூபாய் நோட்டைக் கண்டதுதான் தாமதம். பறந்தார் அவள் தந்தை சாராயக் கடைக்கு.

பிறகு மூன்றாவது தினம் மாலை பெண்ணொருவள் விஜயாளிடம் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள். அதில் கீழ்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

"இக் கடிதத்தை வரைவோன் உன்னைக் கடலி லிருந்து காப்பாற்றியவன். என் மனம் உன்னையே சார்ந்து நிற்கிறது. இதற்குக் காரணம் உன் எளிய வாழ்க்கையில் நீ நடத்தும் தூய நெறியே. கேவலம் 'காதல்' என்ற ஒன்றுக்கு இரையாகி இதை எழுதுவதாய் நினைக்க வேண்டாம். உன் கருத்து இசையுமானால் (இசைந்தால் மட்டுமே) உன் பிதாவின் சம்மதி பெற்று காரியங்கள் நடைபெற வேண்டும். ஆனால், உன் பிதாவுக்குப் பகுத்தறிவாகிய விசேஷ அறிவு இப்பொழுது மங்கி யிருக்கிறது. அவர் முதலில் குடிப் பழக்கத்தை விட வேண்டும். இதற்கொரு சிறு உபாயம் சொல்லுகிறேன். இக் கடிதம் கொண்டுவரும் பெண்ணிடம் நான் சேகரித் தனுப்பி யிருக்கும் சிறு கூழாங்கற்களை அவர் சாராயம் குடிக்கும் புட்டிகளில் ஒவ்வொன்றிலும் ஒன்று பிரதி தினமும் போடு. இதை நீ நிரம்ப யூகமாய்ச் செய்ய வேண்டும். நீ செய்யக் கூடியவ ளென்று மறிவேன். கடவு ளனுக்கிரகத்தால் அவர் சீக்கிரம் திருந்துவது நிச்சயம். சக்கிமுக்கிக் கல்லானது பல நாள் தண்ணீருக்குள் முழுகி யிருந்தாலும், வெளியே எடுத்து உரைத்த மாத்திரத்தில் பளிச்சென்று வெளிச்சம் கொடுப்பதுபோல் இப் பழக்கம் நீங்குமாயின், நீ முன் சொல்லியது போல் அவர் குணவானாகவே விளங்குவார். உன் பரிசுத்தமான மனதில் கடவுளின் நினைவை எப்போதும் ஒரு புறம் வைத்துக்கொள்ள மறவாதே. விவாக விஷயம் உனக்குச் சம்மதமானால் இக் கடிதத்தை வைத்துக் கொள். அல்லாவிட்டால் இக் கடிதம் கொண்டுவருபவ ளிடமே



இதைக் கொடுத்தனுப்பிவிடு. ஆனால், நான் சொன்ன குடியை விலக்கும் உபாயத்தையும், ஈசுர சிந்தையையும் மறந்துவிட வேண்டாம்."

கடிதம் கொண்டுவந்தவள் வெறுங் கையோடு சென்றாளென்பதிலிருந்து வாசகர்கள் கடிதத்தின் முடிவை ஊகித்துக்கொள்ளலாம்.

நாட்கள் சில சென்றன. இன்பமும், துன்பமும் ஒரு வழி நில்லாதன்றோ? காதலர் கருத்தும் கை கூடுவதாயிற்று. விஜயாளின் தந்தை பஞ்சாக்ஷரத்தின் உபாயத்தால் குடிப் பழக்கத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் விட்டுவிட்டார். குடிப் பழக்கம் போகவே, தன் மானங் கெட்ட செயலும் அதனால் தன் குடும்பம் எவ்வளவு தாழ்ந்த நிலைமைக்குக் கொண்டுவரப்பட்ட தென்றும் உணர்ந்தார். தன் கடமையை அறிந்து விஜயாள் உட்கருத்துக் கிசைந்தார். கலியாண முஸ்தீப்புகள் ஆரம்பித்தன.

இனி, விஜயாளிடம் கடிதம் கொண்டு வந்தவள் யாரெனில் விஜயாளின் சகோதரனே. அவன் பெண் போல மாறு வேடம் பூண்டு வந்தான். விஜயாள் மிகச் சிறிய குழந்தையா யிருக்கும் போதே தந்தை குடி மயக்கத்தால் செய்யும் தொந்தரவைப் பொறுக்க மாட்டாமல் வீட்டை விட்டு ஓடியவன். பஞ்சாக்ஷரத்தினிடம் ஒரு குமாஸ்தாபோல் இருந்து வந்தான். பழம் நழுவிப் பாலில் விழுந்தது. விஜயாளின் கலியாண மண்டபத்தில் கோஷித்த **தும் பம் தீம் தோம்** என்கிற மேள சத்தம் விஜயாள் மனதில் **துன்பம் தீர்ந்தோம், துன்பம் தீர்ந்தோம்** என்று ஒலித்தது.

விஜயாளும், பஞ்சாக்ஷரமும் அன்புருவங்களாய் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். விஜயாளின் தமையன், தன் தந்தையின் தீய பழக்கங்கள் அடியோடு தொலைந்து அனைவரது மதிப்புக்கும் பாத்திரமாய் விளங்குவதைக் கண்டு பெரு மகிழ் வெய்தி, பஞ்சாட்சரத்தை வாழ்த்தி தந்தையுடன் சுகமாய் வாழ்ந்து வருவானான்.

---

**வஸந்த விகடன்**

(ஓர் உயர்தர ஹாஸ்ய மாதப் பத்திரிகை)

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கட்டுரைகள், கதைகள் படங்கள் அடங்கியதோர் மாதப் பத்திரிகை. சந்தா ரூ. 1 தனிப்பிரதி அணா 1½ ஒவ்வொரு ஆங்கிலமீ 20-ந் தேதி வெளிவரும்.

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்குத் திறமை வாய்ந்த ஏஜண்டுகள் தேவை. நிபந்தனைக்கு உடனே எழுதுக.

மானேஜர், 'வஸந்த விகடன்' ஆபீஸ், மதுரை.

# விகடத் துணுக்குகள்

புரோகிதர்:—(மணமகனிடம்) 'கல்யாணப் பெண்ணே, கல்யாணப் பெண்ணே' சொல்லேண்டா.

மணமகன்:—ஊஹூ, நான் சொல்லவே மாட்டேன்.

புரோகிதர்:—ஏண்டா சொல்லமாட்டாய்?

மணமகன்:—என் தமையன், தன் மனைவியிடம் மெதுவாகப் பேசுவதைப் பார்த்தாலும் சீறி விழும் என் தாயார், இவ்வளவு பெரிய கூட்டத்தில் நான் என் மனைவியிடம் பேசுவதைப் பார்த்தால் சும்மா விடுவாளா?

—ஏ. முனுசாமி, கலவை.

* * *

தீய்ந்த ரொட்டியும், அழுகிய பழமும் தின்று வயிற்று வலியால் அவஸ்தைப்பட்ட ஒருவன் வைத்தியரிடம் போக, அவர் கண்ணுக்கு மருந்து போட்டார்.

வயிற்று வலிக்காரன்:—என்ன சார்! வயிற்றுவலி என்றால் கண்ணுக்கு மருந்து போடுகிறீர்கள்?

டாக்டர்:—கண் நன்றாயிருந்தால் இந்தக் கெட்டுப் போனவற்றைத் தின்னமாட்டா யல்லவா? அதற்காகத்தான் கண்ணை சுத்தப் படுத்துகிறேன்.

—K. காசி, புதுவை.

* * *

ஒரு நடுவழியில் ஸ்ரீதேவியும் மூதேவியும் யார் அழகில் மிக்கவள் என்பதைப்பற்றி சண்டையிட்டுக்கொண் டிருந்தனர். அச்சமயம் ஒரு செட்டியார் அந்த வழியே வர அவரிடம் தங்கள் வழக்கைச் சொல்லிக்கொண்டனர்.

செட்டியார்:—நீங்கள் இருவரும் கொஞ்ச தூரம் போய் வாருங்கள்.

இருவரும் அவ்வாறே போய் வந்தனர்.

செட்டியார்:—மூதேவி போக்கும், ஸ்ரீதேவி வருகையும் மிக அழகாயிருக்கிறது.

—M. நாகேஸ்வரன், ஆரணி.

* * *

நண்பன்:—நான் நேற்று உன் மனையாளைச் சந்தித்தேன்.

ராமு:—அவள் என்ன சொன்னாள்?

நண்பன்:—அதிகமாக ஒன்றும் சொல்லவில்லை.

ராமு:—அப்படியானால் அவள் என் மனைவியாக இருக்கமாட்டாள்.

—A. தர்மலிங்கம், சங்கரன்கோயில்.

* * *



ஜப்பானிய பள்ளிக்கூடத்தில் சீனரின் ஜனத்தொகையைப் பற்றி படிப்பிக்கும்பொழுது உபாத்தியாயர் 'ஒவ்வொரு சுவாசத்திற்கும் ஒரு சீனன் இறக்கின்றான்' என்று கூறும்போது மூலையிலுட்கார்ந்திருந்த சேனாதிபதியின் மகன் களைத்தவன்போல் விரைவாக மூச்சு விடத் தொடங்கினான்.

உபாத்தியாயர்:—என்னடா, அது?

மாணவன்:—இடைவிடாது மூச்சு விடுவதால் அநேக சீனர்கள் இறந்துவிடுவார்கள். அப்போது என் தகப்பனாருக்குக் கஷ்டம் குறையும்.

—T. வேலுப்பிள்ளை, கொழும்பு.

* * *

தகப்பனார்:—வைகுந்தா! சின்னப்பா எங்கே?

வைகுந்தன்:—அதோ தூக்கில் பாருங்கோ.

தகப்பனார்:—(திடுக்கிட்டு) என்னடா, அது?

வைகுந்தன்:—மெய்தாம்பா. நான் படுத்திருந்த சின்ன பாதானே, அதோ சுருட்டி தூக்கில் வைத்திருக்கிறேன்.

—M. R. பத்மநாபன், விநாயகபுரம்.

* * *

ஒரு காட்டான் இருபத்தைந்து ரூபாய் மணியார்டர் அனுப்புவதற்குத் தபாலாபீசுக்குப் போனான். தபாலதிகாரி அதைப் பெற்றுக்கொண்டு ஒரு சிறு காகிதத் துண்டைக் கொடுத்தார்.

காட்டான்:—என்னை மடையன் என்று நினைத்தாயா? என் காசைப் பறித்துக்கொண்டு இந்தக் காகிதம் கொடுத்து என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா? என் ரூபாயைக்கொடு.

—K. துரைசிங்கம், யாழ்ப்பாணம்.

* * *

பையன்:—செட்டியாரே! நாலணாவுக்கு சில்லரைதாரும்.

செட்டியார் காலணா குறைவாகக் கொடுத்தார்.

பையன்:—என்ன செட்டியாரே! காலணா குறைவாகக் கொடுத்திருக்கிறீர்?

செட்டியார்:—காலணா வட்டம்.

பையன்:—அதுகூட எனக்குத் தெரியாதா? காலணா வட்டம் தான். சதுரமென்று யார் சொன்னது? காலணாவைக்கொடும்.

—T. M. செங்கோடன், திருச்செங்கோடு.

* * *

மனைவி:—இந்தப் பாழும் வீட்டில் எல்லாம் முட்டுகிறது. நான் என் தாய் வீட்டுக்குப் போகிறேன்.

கணவன்:—என்னடி உளறுகிறாய்? உன் பயந்த குணத்துக்காகத் தான் நான் ஆடு மாடுகூட வாங்கவில்லையே.

மனைவி:—இந்த வீட்டில் உப்பு மிளகாய் சாமான்களே முட்டுகின்றன. இதற்குமேல் ஆடுமாடு வேறேயா?

—N. R. கிருஷ்ணன், ஆரணி.

வைத்தியர்:—செட்டியாரே! உமக்கு உடம்பு சௌக்கியமாகி விட்டதே. தாங்கள் சொன்ன மருந்து கூலியைத் தரக்கூடாதா?

செட்டியார்:—ஐயா! நீர் மருந்து கொடுக்கும்போது 'சத்தியந் தவறினாலும் பத்தியந் தவறாதே' என்று சொன்னீர்கள். எப்படியோ கொஞ்சங்கூட பத்தியம் தவறாமல் இருந்து விட்டேன். உடம்பும் சௌக்கியமாகி விட்டது. முன்பு தாங்கள் சொன்னபடி சத்தியந் தவறினாலும் பரவாயில்லை யல்லவா? கையிலும் காசு இல்லை; என்ன சொல்கிறீர்? போய் வருகிறீர்களா?

—K. A. சாம்பசிவ முதலியார், காஞ்சி.

* * *

நடேசன்:—லட்சுமணா! ஜட்ஜ் என்னைக்கண்டு அவரோடு வரும்படி வற்புறுத்தினாரே.

லட்சுமணன்:—எதற்காகடா?

நடேசன்:—அவருடைய கார் வந்தபோது ரோட்டில் குறுக்கே ஓடினேன். உடனே அவர் காரை நிறுத்திக் கீழே இறங்கி என்னையும் கோர்ட்டுக்கு வரும்படி அழைத்தார்டா.

—G. கதிர்வேலு, ஆரணி, சைதாப்பேட்டை.

* * *

ஆசிரியர்:—பிள்ளைகளே! கைகளால் நமக்கு ஏற்படும் உபயோகங்கள் யாவை?

மாணவர்களில் ஒருவன்:—கடன் வாங்கவும், திரும்பக்கேட்டால் குத்துவிடவும், விட்டவுடன் கையில் இரும்புக் காப்பு போட்டுக் கொள்ளவும் கைகள் உதவும், சார்.

—N. R. கிருஷ்ணன், ஆரணி, சைதாப்பேட்டை.

* * *

கிட்டு:—மாமா! உங்கள் வீட்டில் குழந்தை பிறந்திருப்பதாக கேள்விப்பட்டேன். அது வாஸ்தவமா?

மாமன்:—ஆமாம்.

கிட்டு:—பிறந்தது உங்களுக்கா, எனக்கா?

மாமன்:—(கோபமாக) சீசீ கழுதை, போ.

கிட்டு:—என் மாமா! ஆணானால் உங்களுக்கு, பெண்ணானால் எனக்கு, கோபம் என்?

—N. கிருஷ்ணசாமி, கடலாடி.

* * *

எஜமானி:—ஏண்டா! அந்தக் கல்லைத் தூக்கிக்கொண்டு போய் வெளியேபோடு என்றால் அரைமணி நேரமாய் குறுக்கவும் நெடுக்கவும் ராஜாமாதிரி உல்லாசமாய் நடக்கிறாயே!

வேலைக்காரன் :—(மிகச் சாவதானமாய்) அம்மா! கோவிச்சிக் காதேயுங்கோ. நேற்று நீங்கதானே 'அடிமேலடி வைத்தால் அம்மியும் நகரும்' என்று சொன்னீங்க. அதனால்தான் நான் அடிமேலடி வைத்து நடக்கிறேன். கல்லு கொஞ்ச நேரத்துக்குள் வெளியே நகர்ந்து போய்விடும்.

—போ. சிவராமலிங்கம், கரவை.

* * *

நாட்டுப்புறத்தான்:—ஏன் டாக்டர் சார்! பல் சுத்தமாக என்ன போட்டு பல் விளக்கவேண்டும்?

டாக்டர்:—பல்பொடி போட்டு விளக்கு.

நா. புறத்தான்:—ஒரு பல் என்ன விலையாவுங்க?

டாக்டர்:—பல் விலை ஏன் கேட்கிறாய்?

நா. புறத்தான்:—நீங்கள் தானே பல்லை பொடி செய்து பல் விளக்கச் சொல்கிறீர்கள்.

—K. V. R. திருமுடி, பழனி.

* * *

ஒருவன்:—தம்பி! உங்க வீட்டில் நாயிறைச்சி தின்கிறதாமே!

மற்றவன்:—வெறுப்புடன், சீ, ஆர் நாயிறைச்சி தின்கிறது?

ஒருவன்:—(சிரிப்புடன்) தம்பி! ஏன் கோபிக்கிறாய், உங்கள் வீட்டு நாய், இறைச்சி தின்கிறதில்லையோ?

—க. குழந்தைவேலு, சிலோன்.




இனாம்! இனாம்

ஒரு வருட சந்தா இனாம்.

ஒரு வருட முன் பணத்துடன்

ஐந்து புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து

அனுப்புவோர்க்கு

ஒரு வருட செங்குந்த மித்திரன்

இனாமாக அனுப்பப்படும்

இந்த அரிய சந்தர்ப்பத்தை இழக்காதீர்கள்

# இயற்கையைத் தன் அடிப்படுத்தும் மனித வுயிரின் மாண்பு

(M. கந்தசாமி, தமிழ் மாணவன், ஔவைத் தமிழகம், திருவத்திபுரம்.)

"எண்ணரிய மறவிதனில் மானுடப் பிறவிதான் யாதினு மரிது அரிதுகாண்", என்றும், "வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்", என்றும் நம் பெரியோர்கள், மனிதப் பிறவியின் பெருமையைப்பற்றிப் புகழ்ந்து கூறினர். இந் நாளினும் பெரியோர்கள் பலர் கூறி வருகின்றனர். தற்காலத்தில் அறிவுநெறியில் ஒழுகும் அறிஞர்கள், "நம் முன்னோர் மொழிந்த மொழிஉருவே கொண்டு, அவற்றின்படி நிற்றல் நேரிய முறையாகாது; அவர் கூறியவற்றுள் நல்லதன் நன்மையும், தீயதன் தீமையும் உள்ளவா றறிந் தொழுகுதலே முறை" என்றும், "அவற்றைச் சீர்தூக்கிக் காண்டற்பொருட்டே பரமன் நமக்கு மன வுணர்வைத் தந்தருளி யுள்ளான்" என்றுங் கூறுகின்றனர்.

மன வுணர் வென்பது ஐம்பொறிகளினாலும் உணரப்படும் பொருள்களை யுள்ளத்தே ஆராயுங் கருவியாகும். அப்பொருள்கள் கட்புலனும்பொருள், செவிப்புலனும்பொருள் முதலாக ஐவகைப்படும். அவை உலகியற் பொருள்களே யாகும். அதனால், மன வுணர்வாவது, உலகத்தை யாராய்ந்து நல்லவற்றைக் கோடற்கும், தீயனவற்றை விலக்குதற்கும் வேண்டும் கருவியாம் என்பது பெறப்படும். இதுபற்றியே, ஆசிரியர் திருவள்ளுவனாரும் "சுவை யொளி யூ றோசை நாற்றமென் றைந்தன், வகை தெரிவான் கட்டே யுலகு" என்றார். இக்கருவியால், உலகை யாராய்ந்து காணுமுகத்தால், உலகம் தன்னேவலைச் செய்யுமாறு ஆளுமாற்றால் மனித வுயி ரடையும் சிறப்பே "இயற்கையைத் தன் னடிப்படுத்தும் மனித வுயிரின் மாண்பு" என்பதன் கருத்தாகும்.

இனி, இயற்கை யென்பது உயிருள்பொருள், உயிரில் பொருள் என்ற இருவகைப் பொருளின் கூட்டமாம். இவ் விருவகைப் பொருளும் தோன்றுதல், நிலவுதல், ஒடுங்குதல் என்ற மூவகைத் தொழில் நிலையில் இயலும் தன்மை யுடையனவாம். இவை, கண் முதலிய பொறிகளுக்குப் புலனாவதால் தோன்றுதலும், எங்கும் வியாபித்துப் பண்டும், இன்றும் நின்று நிலவுதலால் நிலவுதலும், தோன்றாது மறைதலால் ஒடுங்குதலும்



அறியப்படும். படவே, இவை தொழில் நிலையுள் இயலும் இயல்புகொண்டு இயற்கைப்பொரு ளென்று கூறப்படுவன வாயினவாம். இயலுதலும் ஒரு தொழிலாதலால், ஒரு தொழில் மற்றொரு தொழிலில் இயலுமோ எனத் தருக்கநெறியில் ஐயம் பிறக்கலாம். ஆனால், குறுகுதல் தொழிலில் இயலுதலும், முற்றுதல் தொழிலில் இயலுதலும் கண்டு, பெரியோர் அவ் வியற்கையினையுடைய எழுத்துக்களைக் குற்றியலுகரம், குற்றியலிகரம், முற்றியலுகரம் என வழங்குகின்றனர். ஆகலின், தொழில்நிலையில் ஒருவினை மற்றொரு வினையில் இயங்குதல் உண்டென்று அவ்வையம் தீர்தல் வேண்டும். இங்ஙனம், முத்தொழிலினும் இயலும் இயல்பின வாகிய இயற்கைப் பொருளைத் தற்கால அறிஞர்கள் "இயற்கை" என்று சுருங்கிய வாய்பாட்டால் சொல்லிவிடுவர். இதனால் இயற்கையாவது ஒருவராலும் செய்யப்படாதது என்று கூறுவார் கூற்றுச் சிறப்பன் றென்பது தோன்றும். ஆயினும், இயற்கைக்கு மறுதலை யாவது செயற்கை என்பது தோன்ற "இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்" என, ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியது, காரண காரியக் கூட்டரவால் இயலுகின்றவற்றுள், காரணந் தோன்றா வகையில் இயலுவன இயற்கை என்றும், காரணந் தோன்ற இயலுவன செயற்கை என்றும் கூறுதற்கென அறிக. இது பற்றியே "ஆக்கந்தானே காரண முதற்றே" எனச் செயற்கைக்குரிய ஆக்க வினையை, இவற்றை அடுத்து வரும் இச்சூத்திரத்தே விளக்குவாராயினர். இஃது இன்னும் விரிப்பின் பெருகும்.

இனி, மனித வுயிருக்குப் பெருமை கூறுகின்றவர் அஃது ஓரறிவுயிர் முதற்கொண்டு எல்லா வுயிர்களையும் தன் னேவலின் வைத்து ஆளுகின்ற மாண்புடையது என்பர். இதுபற்றியே மனிதனை ஆள் என்று கூறுகின்றன ரென்று மேற்கோளும் காட்டுவர். "இனம் இனத்தைச் சேரும்" என்ற சற்காரிய முறைப்படி ஓருயிர் மற்றோர் உயிரைச்சேர்ந்திருத்தல் இயற்கை முறை யாதலால், மனித வுயிர் என்னும் ஓருயிர் தனக்கு இனமான உயிர்களைக் கீழ்ப்படுத்தி ஆளுவது கொண்டு மாண்புடைமை கூறல் அதற்குத் தூய மாண்பாகாது.

"உயிர் உணர்தற் றன்மைத்து" என்பர் பெரியோர். ஆகலின், உணர்வுடைய உயிரெல்லாம் பிறவற்றின் குறிப்பையும் தம் குறிப்பையும் உணரு மென்பது தானே விளங்கும். ஓரறிவுயிர் எனக் கருதப்படும் மரஞ் செடி கொடி முதலியனவும் மனிதவுயிராகிய நாம் இன்பமென நுகரும் இசையினைத் தாமும் கேட்டு மகிழ்தலும் பிறவும் செய்கின்றன என சர் ஜகதீஸ சந்திர போஸ் என்பார் கூறுகின்றார். ஒத்த உணர்தற் றன்மையுடையன

தத்தமக்குள் இங்ஙனம் ஒத்தொழுகுதலால் அவற்றிற்கு உயர்வு கூறுதல் நீதி நெறிக்கு மாறாகு மன்றோ ?

இனி, எறும்பினங்களிற் சில தம் மினமான பிற உயிர்களைத் தம் மேவல் செய்விக்கின்றன என்பது உயிர் நூல் வல்லார் நன்கறிந்ததே. அதனால் அவை மாண்புடையன என்பது எவ்வாறு பொருந்தும்? மாண்பாவது, குணம் செயல்களால் தோன்றுவதாகலின், உணர்தற்றன்மையும் பிறவற்றை ஆளுந் தொழிலும் பற்றியே உயிர்களின் மாண்பு உணர்தல் வேண்டும். இவ்வண்ணம் உயிரினங்கள் ஒன்றையொன்று ஆளுதலும் உணர்வுடையனவாய்த் தோன்றுவதும் காணின், இவை யெல்லா உயிருக்கு மிருத்தலின் மனித வுயிருக்குப் பிற உயிர்களை யாளுதல் பற்றி மாண்பு கூறுவது சிறப்பன்று என்பது விளங்கும். விளங்கவே, பிற வுயிர்கள் போல (ஈக்களுள் அரச ஈ என்றும், தொழில்புரி ஈ என்றும் இருந்து ஒன்றின் ஏவலை மற்றொன்று புரிதல் போல) ஆளுதலும் ஆளப்படுதலும் பெற்றிருப்பினும், ஏனை உயிர்களால் செய்ய முடியாத செயல் செய்யுமாயின், மனிதவுயிர் மாண்புடைய தென்றல் பொருந்தும்.

ஏனைய உயிர்கள் மற்றை உயிர்களை ஆளுதல் போல ஏனை உயிர்களை ஆளுதலே யன்றி, உயிரில் பொருளையும் நம் மேவல் வழி நின்று நமக்குரிய நன்மையைச் செய்வித்தலே மனித வுயிர்க்கு மாண்பு தருகின்றதெனக் கூறுதலே அறிவுக்கு ஒத்ததாகும்.

## சிறுகதைப் பரிசுகள்

தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்டவல்ல சிறுகதைகளுக்கு அவ்வவற்றின் தரத்திற் கேற்றபடி ஐந்து ரூபாய் வரையில் பரிசளிக்கப்படும். கதைகள் சொந்தக் கற்பனையாகவும் இரசனை நிரம்பியதாகவு மிருத்தல் வேண்டும். கதையின் அமைப்பு, தமிழ் நடை, இன்பச் சுவை இவைகளைக் கொண்டே பரிசுத்தொகை தீர்மானிக்கப் பெறும்.

## கதம்ப விநியோகம்

யூதர்கள் ரோமத்தின் பெயரால் சத்தியம் செய்வதை மிகப் புனிதமெனக் கருதுகிறார்கள்.

* * *

சகல சமுத்திரங்களிலு முள்ள தண்ணீரி லிருந்து தங்கம் எடுத்தால் உலகத்தி லுள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் சராசரி 4,500 ரூபா மதிப்புள்ள தங்கம் கிடைக்குமாம்.

* * *

ஐரோப்பாவிலும், இந்தியாவிலும் குதிரைப் பந்தயத்தில் அநேகர் பணத்தைச் செலவழிப்பது போல் சீனாவில் வெட்டுக்கிளி பந்தயத்திலும், ஸயாமில் மீன் சண்டையிலும், அல்ஜீரியாவில் விஷப் பாம்புச் சண்டையிலும் ஏராளமாகப் பொருளை விரயஞ் செய்கிறார்கள்.

* * *

ப்ரிட்டன் பாங்கிகளில் சொந்தக்காரர் இன்னாரெனத் தெரியாமல் 80,20,000 பொன் இருக்கிறது. இதன் சொந்தக்காரர்களைக் கண்டுபிடிக்க பாங்கிக்காரர்களும், போலீஸாரும் முயற்சி செய்ததில் 20,000 பொன்னுக்கு உரியவர்கள் இது வரை கண்டுபிடிக்கப்பட்டனராம்.

* * *

இங்கிலாந்தில் ஒல்வொரு ஞாயிற்றுக்கிழமையும் 1,70,00000 பத்திரிகைகள் விற்பனையாகின்றன.

* * *

இந்தியாவின் ஜுலை மாத இறக்குமதி ரூ. 990 லட்சம். ஏற்றுமதி ரூ. 1,285 லட்சம்.

* *

பாரிஸ் நகரி லுள்ள நாய்களின் மயானத்தில் இது வரையில் 20,000 நாய்களைப் புதைத்திருக்கிறார்களாம்.

* * *

இந்தியாவி லிருந்து சராசரி மாதந்தோறும் 1,54,000 உடும்புத் தோலும், 70,000 பாம்புத் தோலும் ஏற்றுமதியாகின்றன.

* * *

பாரிஸ் நகரில், ரெயில் வண்டிகளுக்காக காத்துக்கொண் டிருக்கும் யாத்திரை வாசிகளுக்காக வண்டிகள் வருவதற்கு முன்னுள்ள நேரத்தில் ஸினிமாப் படம் காட்டப்படுகிறது.

* * *

ப்ரிட்டனில் ஒரு வித வெள்ளைக் கற்களைக் கொண்டு வெடி மருந்தும், முகத்திற்குப் பூசும் பவுடரும் செய்து வருகிறார்கள்.

* * *

கடந்த 36 மாதங்களில் ஸ்பெயின் அரசாங்கம் 48 மந்திரிகளைப் பார்த்துவிட்டது. ஒவ்வொரு மந்திரிக்கும் 270 பவுன் பென்ஷனை வருடந்தோறும் கொடுக்கப் பெறும்.

# வர்த்தமானம்

## தமிழ்நாட்டு நிகழ்ச்சிகள்

சீரும் சிறப்பும் வாய்ந்த "தெண்ணீர் வயற்றொண்டைநன்னாட்டிலே, பற்பல அற்புதங்களைக் கொண்ட காஞ்சி மாநகர்க்குத் தென்றிசையிலே பாலாற்றின் தென்கரையிலே உள்ள ஐயங்கார் குளத்தில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சஞ்சீவி ராய சுவாமிக்கும், சீதா பிராட்டியார் சமேத ஸ்ரீ கோதண்ட ராமசுவாமி, இலட்சுமண சுவாமிக்கும், நித்தியபடிப் பூஜை சில நாளாய் நின்றிருந்ததால் அதை புதுப்பித்து 'ஆவணி௴ 6௳ அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பக்திமான்கள் பலர் வந்து தெரிசித்து நலனுற்றனர் என மேற்படி தேவஸ்தான டிரஸ்டி தணியம். அ. தணிகாசல முதலியார் தெரிவிக்கிறார்.

* * *

எட்டயாபுரம் நடுவிற்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பதினாலு கிராமத்திலுள்ள சவருமங்கலவம்சம் செங்குந்த முதலியார்களால் திருச்செந்தூரில் பனிரெண்டாம் திருநாள் மண்டபம் கட்டி முடிவுபெற்றிருப்பதால் ஷை மண்டபத்தில் நாளது 1110-ஞ பவ௵ ஆவணி௴ 24௳ ஞாயிற்றுக்கிழமை காலை மணி $7\frac{1}{2}$-க்கு நாழிகை $3\frac{3}{4}$-க்குள் கன்னியா லக்கினமும் பூர நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் கிரஹப்பிரவேச புண்ணியாவாசம் செய்யப் பெற்றது. ஏராளமான அன்பர்கள் வந்து கண்டு மகிழ்ந்தனர் என்று 14 நாட்டு அம்பலம் மூ. அ. வே. அய்யம்பெருமாள் முதலியார்' அறிவிக்கிறார்.

* * *

27-8 '34 முற்பகல் 10 மணிக்கு வாலாஜாபாத் இந்துமத பாடசாலையை, மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த முடிகொண்டான் பெருநிலக்கிழவர் உயர்திரு அப்பா அவர்களும், காஞ்சீபுரம் ஜவுளி வர்த்தகர் உயர்திரு அண்ணாமலை முதலியார் அவர்களும், காஞ்சீபுரம் மரமண்டிச் சொந்தக்காரர் உயர்திருவாளர் கச்சபாலய முதலியார் அவர்களும் பார்வை யிட்டனர்.

பின்பு திரு. அப்பா அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மாணவர்கள் அரிய சொற்போர்களும், விரிவுரைகளும், விகடவகுப்புகளும், தேசியப் பாடல்களும், ஆங்கில நாடகங்களும், தொடை விடையாடல்களும் குழுமியிருந்தோர் வியப்புறும் முறையில் நிகழ்த்தினார்கள். தலைவர் தமது முடிவுரையில், சிறு மாணவர்கள் செய்து காட்டிய அரியவற்றினின்றும் அப்பாடசாலையின் பயிற்சித் திறனும், ஊக்க மிகுதியும், உண்மை நோக்கமும் கண்கூடாகக் காணக் கிடக்கின்றனவென்றும், அப்பாடசாலைக்கு ஒவ்வொருவரும் தங்களாலான வகையில் உதவி செய்யவேண்டும் என்றும் கூறினார்கள். நன்றிகூறிய பின்னர் கொண்டாட்டம் இனிது நிறைவுற்றது.



மாஜி கவர்னர் சர் முகமது உஸ்மான் ஜஸ்டிஸ் கட்சியில் ஓர் மெம்பராகச் சேர்ந்தார். மெம்பர்கள் சேர்க்கும் கமிட்டியிலும், ஜஸ்டிஸ் மகா நாடு ஏற்பாட்டுக் கமிட்டியிலும் மெம்பராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

* * *

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலேயே மிகவும் மகத்தான தான மேட்டூர்—காவேரி அணையை கவர்னர் திறந்து வைத்தார்.

* * *

இந்திய சட்டசபைத் தேர்தலில் ராமநாத புரம், மதுரை, திருநெல்வேலி தொகுதிக்கு விருதுநகர் முனிசிபல் சேர்மன் ஸ்ரீ வி. ராமசாமி அவர்கள் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் அபேட்சகராக நிற்கின்றார்.

* * *

தேர்தல் பிரசாரத்தை முன்னிட்டுச் சென்னை நகரில் காங்கிரஸ் சார்பாக ஒன்று அல்லது இரண்டு தமிழ்த் தினசரிகள் தொடங்கப் பெறுமாம். ஜஸ்டிஸ் கட்சியாரும் 'திராவிடனை' மீண்டும் துவக்கப் போவதாகத் தெரிகிறது.

* * *

திருவாங்கூர் அரசருக்குச் சட்ட ஆலோசனை கூறுபவராகிய ஸர் ஸி. பி. இராமசாமி அய்யர் தமது மாத சம்பளத்தை ஐயாயிரத்திலிருந்து நாலாயிரம் ரூபாயாகக் குறைத்துக்கொண்டார்.

* * *

ஸ்ரீமதிகள் எம். ஏ. கிருஷ்ணம்மாள், எம். ஏ ஏடுகிரி என்ற இரு சகோதரிகள் சென்னை உயர்தர நீதிமன்றத்தில் அட்வகேட்டுகளாகப் பதிவு செய்துகொண்டனர். இவர்களது மூத்த சகோதரியும் கொஞ்ச காலத்திற்கு முன்புதான் அட்வகேட் ஆனார்.

* * *

சென்னை, கீழ்ப்பாக்கத்திலுள்ள ஒரு பங்களாவின் தோட்டத்தைத் தோண்டியபோது 5,000 வருடங்கட்கு முற்பட்டதான பாத்திரங்களும், வேறு சில சாமான்களும் அகப்பட்டன. 6 அடிக்கு மேல் நீளமுள்ள ஒரு சவப் பெட்டியும் கிடைத்திருக்கிறது.

* * *

சைதாப்பேட்டை முனிஸிபல் சபைக்கு ஸ்ரீ ஜயசந்திர நாயுடு உப-தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

* * *

மேற்படி ஊரில் காலஞ் சென்ற ஸ்ரீ V. S. சடையப்ப முதலியாரின் கௌன்ஸிலர் ஸ்தானத்திற்கு மேற்படியார் புதல்வர் ஸ்ரீ நடராஜ முதலியார் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார்.

* * *

இந்திய சட்ட சபைத் தேர்தல் விஷயமாக ஸெப்டெம்பர் முதல் தேதியிலிருந்து 14-ந் தேதி வரையில் வட ஆற்காடு ஜில்லாவிலும்,

15-ந் தேதி முதல் 25-ந் தேதி வரை கோவை ஜில்லாவிலும் டாக்டர், பி. வரதராஜுலு நாயுடு சுற்றுப் பிரயாணம் செய்வார்.

* * *

சென்னை கார்பொரேஷன் மாஜி ஸீனியர் உதவி-ரெவின்யூ ஆபீஸரும், சென்னை நகர கூட்டுறவு பாங்கியின் டைரெக்டருமான ஸ்ரீ பி. சிவபூஷண முதலியார் இந்தியா சட்ட சபைத் தேர்தலில் சென்னை நகரத் தொகுதிக்கு ஒரு அபேட்சகராய் நிற்கிறார்.

* * *

சென்னையில் 2-9-'34-ந் தேதி ஆரிய ஸமாஜிகளுக்கும், முஸ்லீம்களுக்கும் ஏற்பட்ட கலகத்தில் ஒரு முஸ்லிம் இறந்துவிட்டார். மற்றும் பலர் படுகாயமடைந்தனர். இதன் சம்பந்தமாக மூன்று ஆரிய ஸமாஜிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

* * *

மதுரை பப்ளிக் பிராஸிகூடரான ராவ் பஹதூர், வி. கிருஷ்ணன் நாயரின் உத்தியோக காலம் இன்னும் இரண்டு வருடங்கள் நீடிக்கப்பட்டுள்ளன.

* * *

சென்னை கார்பொரேஷனுக்கு தண்டையார்பேட்டை, முத்தியாலுப்பேட்டை, மயிலாப்பூர், எஸ்ப்ளனேட் இந்த நான்கு டிவிஷன்களுக்கும் முறையே ஸ்ரீ பி. எம். பாலசுப்பிரமணிய முதலியார், டாக்டர், யு. கிருஷ்ண ராவ், ஸ்ரீ டி, எஸ். இராமசாமி அய்யர், டாக்டர், பி. எஸ். மல்லய்யா இவர்கள் போட்டி யின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

## இந்தியச் செய்திகள்

பீகார் மாகாணத்தில் பூகம்பத்தால் ஏற்பட்ட சேதங்கள் போதாதென இப்போது வெள்ளத்தினால் மிக அதிகமான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. எழுநூறு கிராமங்களுக்குமேல் தண்ணீரில் முழுகி அடியோடு நாசமாகி விட்டன. அநேக இடங்களில் வீடுகள் இடிந்து விழுந்துவிட்டன. சுமார் 75 கிராமங்கள்வரை மிகச் சேதமடைந்தன. வெள்ளம் 15 அடி உயரம்வரை ஏறிவிட்டதால் அநேகர் உயர்ந்த மரங்களின்மீது ஏறிக்கொண்டு தங்கள் உயிரைக் காப்பாற்றினர்.

* * *

## ராஜாங்க கைதிகளுக்கு படி

### மாஜி மகாராஜாவுக்கு ரூ. 10,000

1918-ம் வருஷத்திய 3-வது ரெகுலேஷன்படி சிறைப்பட்டிருக்கும் 73 ராஜாங்க கைதிகளுக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும் சர்க்கார் கொடுத்துவரும் படிச் செலவு விவரங்க ளடங்கிய அறிக்கையை, உள்நாட்டு மந்திரி இந்திய சட்டசபையில் சமர்ப்பித்தார். அறிக்கையின் விவரமாவது:—



ராஜாங்க கைதிகளில் ஸ்ரீ சரத்சந்திரபோஸ் குடும்பத்திற்கே சர்க்கார் அதிகமான படிச் செலவு கொடுத்து வருகிறார்கள். அதாவது அவருடைய குடும்பத்திற்கு மாதம் 1500 ரூபாய்வீதம் கொடுத்து வருகிறார்கள். டாக்டர் கான்சாகிப் குடும்பத்திற்கு மாதா மாதம் ரூ. 500-ம், அவருடைய ஆங்கில மனைவிக்குப் பிறந்த குமாரனும், குமாரியும் இங்கிலாந்தில் கல்வி கற்று வருவதால் அவர்களுக்கு மேற்கொண்டு மாதம் 200 ரூபாயும் கொடுத்து வருகிறார்கள். அவர்கள் இங்கிலாந்திலிருந்துவரும் வரையில் மாதம் 200 ரூபாய் கொடுத்து வருவார்கள். அப்துல் கபூர்கானுக்கு (எல்லைப்புற 'காந்தி') 200 ரூபாய் மாதப் படிச்செலவு கொடுத்து வருகிறார்கள்.

மற்றவர்களைக் காட்டிலும் சர்தார் அப்துல் ரஹ்மான் கானுக்குத்தான் அதிக தொகை. அதாவது மாதம் ரூ. 600 வீதம் அவருடைய சொந்த செலவுக்காக செலவுத் தொகை கொடுத்து வருகிறார்கள்.

ஷை ஜாப்தாவில் நாபா மாஜி மகாராஜாவின் பெயரும் இருக்கிறது. அவருக்கு மாதத்திற்கு ரூ. 10,000 வீதம் கொடுத்து வருகிறார்கள். எனினும் அத்தொகையை நாபா சமஸ்தானத்திலிருந்தே கொடுத்து வருகிறார்கள்.

* * *

எல்லைப்புற காந்தியான ஸ்ரீ கபூர்கானையும் அவரது சகோதரரையும் 27-8-34-ந் உ இந்திய சர்க்கார் விடுதலை செய்துவிட்டார்கள்.

* * *

பண்டித ஜவஹர்லால் நேரு 23-8-34-ந் உ மீண்டும் சிறைக்கு அனுப்பப் பட்டார்.

* * *

இந்தியா சட்டசபையின் கூட்டம் ஆகஸ்டு௴ 31-ந்தேதியோடு முடிவுபெற்று கலைக்கப்பட்டது. இனி புதிய தேர்தல் நடந்த பின்பே கூடும்.

* * *

பசுவதையைத் தடுக்கும் பொருட்டு பண்டித ராமச்சந்திர சர்மா என்ற ஆர்ய சமாஜத்தவர் சாகும்வரை பட்டினி கிடக்கத் தீர்மானித்துள்ளார். அவருக்கு மகாத்மா அனுப்பிய தந்தியில் பட்டினி விரதத்தை விட்டுவிடும்படிக்கும், அதற்குப் பதிலாகக் கிளர்ச்சி செய்யும்படிக்கும் கேட்டிருக்கிறார்.

* * *

செந்தொண்டர்படை சம்பந்தமாக இந்தியா சட்டசபையில் சர். ஹாரி ஹெயிக் கூறியவற்றை ஆட்சேபித்து ஸ்ரீ அப்துல் கபூர்கான் கூறுவதாவது "எனது தொண்டர்கள் பலாத்கார காரியங்கள் ஏதாவது செய்தன ரென்பதை நிரூபிக்குமாறு நான் அறைகூவி அழைக்கின்றேன்".

* * *

மேட்டூர் அணை கட்டி முடிக்க 9 வருடங்கள் பிடித்தது. 6 கோடியே 80 லட்சம் ரூபா செலவாகி இருக்கிறது. இந்த அணையின் நீளம் ஒரு மைல். உயரம் 176 அடி. மதிலின் மேல் அகலம் 20½ அடி. அதில் 16 அடி அகலமுள்ள ரஸ்தா ஓடுகிறது.

மாக்னீஸ் கம்பெனிக்குச் சொந்தமான 'ஸிங்ளா' ஸ்டீம் லாஞ்ச் கப்பலும், ஸிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்குச் சொந்தமான 'நில்லா' கப்பலும் ஹூக்லி நதியிலே 31-8-34-ந்தேதி மோதிக் கொண்டதால் 'ஸிங்ளா' கப்பல் ஆற்றில் முழுகிவிட்டது.

* * *

## வெளி உலகப் போக்கு

ஸ்பெயினில் பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தக்கூடாதெனக் கடுமையான சட்டம் செய்திருக்கிறார்கள்.

* * *

ஜப்பான் 50 பொன் விலையுள்ள மோடார் செய்து முடித்திருப்பதாகவும், அதற்குக் கல்கத்தாவில் ஏஜண்டும் நியமித்திருப்பதாகவும் கேள்விப்பட்டோம். ஆனால், ஜெகொஸ்லாவேகியாவில் இதைவிட விலை குறைவான மோட்டார் தயாராகி வருகிறதாம். அதன் விலை 20 பொன்; அதாவது 270 ரூபாய். எனவே, இனி பைஸிகிலைவிட மோட்டார் அதிகமாகிவிடும் போலும்.

* * *

ஜெர்மனி தலைவர் தேர்தல் முடிந்துவிட்டது. முடிவான புள்ளி விவரம் கீழ் வருமாறு:—

| | |
|---|---|
| வாக்காளர்கள் மொத்தம் | 4,59,68,753 |
| ஓட் கொடுத்தவர்கள் | 4,34,38,378 |
| ஹிட்லரை ஆதரித்து ஓட்டு செய்தவர்கள் | 3,82,79,514 |
| அவருக்கு பாதகமாக ,, | 42,87,808 |
| செல்லுபடியாகாதவை | 8,71,056 |

* * *

மில்லில் ஏற்பட்ட தகராறினால் அமெரிக்காவில் 8,25,000-பேர் வேலை நிறுத்தஞ் செய்திருக்கிறார்கள்.

* * *

ஜார்ஜ் மன்னரின் 4-வது குமாரரான ஜார்ஜ் இளவரசருக்கும், கிரீஸ் இளவரசி மேரினாவுக்கும் விவாகம் நிச்சயமாகியுள்ளதை மன்னர் சந்தோஷமாக அங்கீகரித்துள்ளார். ஜார்ஜ் இளவரசருக்கு இப்போது வயது 31.

* * *

இங்கிலாந்தில் தங்கச் செலாவணி முறை கை விடப்பட்டது முதல் இது வரை 206½ கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

* * *

ஜெர்மனியில் இந்தியக் காப்பிக்கொட்டை இறக்குமதியைத் தடை செய்துவிட்டார்கள்.

* * *

ஜப்பானில் தயாரிக்கப்படும் 'பேபி' மோட்டார்கள் கூடிய விரைவில் இந்தியாவுக்கு வந்து சேரும். கல்கத்தாவில் ஏஜண்டுகளும் நியமித்தாகிவிட்டது. இது இந்தியாவில் 650 ரூபாய்க்கு விற்கக் கூடுமாம்.



ஹங்கேரியிலுள்ள ஸோல்ஜர்கள், போலீஸார், குதிரைப் பட்டாளத்தைச் சேர்ந்தவர்களனைவரும் கெய்ஸர்மீசை அதாவது முறுக்கிய குத்துமீசை வைத்துக்கொள்ள வேண்டுமென ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

* * *

பிரெஞ்ச் ஸர்க்கார் சிக்கனத்தை உத்தேசித்து தபாலாபீஸ்களிலுள்ள 10,000 உத்தியோகஸ்தர்களை விலக்கிவிட்டதால் 15 கோடி பிராங்குகள் மிச்சம் ஏற்பட்டிருக்கிறதாம்.

* * *

போலந்தில் சாண்டோபியர்ஸ் என்ற இடத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் 4 லட்சம் ஜனங்கள் வீடின்றி கஷ்டப்படுகின்றனர். ஜப்பானில் அநேக இடங்கள் பெரும் வெள்ளக் காடாய் இருக்கிறது. ஆனால் ஷிகூயி ஜில்லாவில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்காவில் அனல் காற்று அதிகமாய் வீசியதைச் சகிக்க முடியாமல் 400 பேர்கள் வரையில் இறந்துவிட்டனர். இந்த அனல் காற்றின் பின் பெருமழை பெய்து தெருக்களெல்லாம் தண்ணீர் நிறைந்திருக்கிறது. துறைமுகங்கள் அழிந்துவிட்டதால் அங்கிருந்த கப்பல்களை வெள்ளம் தெருக்களில் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. உலகில் பலவிடங்களிலும் வெள்ளம், அனல் காற்று, பூகம்பம், தண்ணீர்ப் பஞ்சம் முதலியவற்றால் இவ்வாண்டில் ஏராளமானவர்கள் மாண்டுவருகிறார்கள்.

* * *

இந்திய அரசியல் மசோதா பார்லிமெண்டில் டிஸம்பர் மாதத்திற்குள் தயாராகிவிடுமெனத் தெரிகிறது.

* * *

பூமிக்கு அடியில் சுரங்கங்களை வெட்டிக்கொண்டு போகும்போது நீர் ஊற்று அதிகமாகவிருந்தாலும், அதை இறைப்பதற்கு இயந்திர சாதனம் போதாமலிருந்தாலும், பூமிக்குள் குழாய்கள் செலுத்தப்பட்டு அவைகளின் மூலமாய் அந்நீர்ப்பகுதிகள் எல்லாம் பனிக்கட்டிகளாக உறையும்படி செய்யப்படுகின்றது. பின் அவை கற்களைப்போல வெட்டி வெளியேற்றப்படுகின்றன. இவ்வற்புத வேலை லண்டன் விஞ்ஞானக் காட்சியில் செய்து காட்டப்பட்டது.


## கொக்கோக வைபவம்

உண்மையான மர்ம விஷயங்கள் தெளிவாக விளக்கப்பட்டு, 64 மதன லீலாவிநோதப் படங்களுடன் அழகிய தாளில் காலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

தபால் செலவு இனம். விலை ரூபாய் 2.

"விநோத நேசன்" புக் டிப்போ,
திருவல்லிக்கேணி, சென்னை.

# நன்கொடைகள்

ஆரணி, வைத்தியர், ப. ச. கோவிந்தராஜு முதலியார் குமாரன் கதிர்வேலுக்கும், போளூர் தாலூக்கா, கீழ்ப்பட்டு, ரா. மாணிக்க முதலியார் புதல்வி பாக்கியம் அம்மாளுக்கும், ஷை கோவிந்தராஜு முதலியாரது இளவல் கிருஷ்ணப்ப முதலியாரது புதல்வன் ராஜுக்கும், மேற்படியூர் கடம்பராய முதலியார் புதல்வி கண்ணம்மாளுக்கும் ஆனி௴ 17௳ நடந்த திருமணங்களில் சங்கத்திற்கு வழங்கப்பட்ட நன்கொடை ரூ. 1 0 0

சென்னை திருவல்லிக்கேணி திருமிகு, தி. அ. சின்னு முதலியாரின் தமையனார் சிங்கார முதலியாரின் புதல்வர் திருநிறைச்செல்வர் சுப்பிரமணிய முதலியாருக்கும், திருமிகு கு. மா. பார்த்தசாரதி முதலியார் புதல்வி திருநிறைச் செல்வி லோகாம்பாளுக்கும் ஆவணி௴ 20௳ நடைபெற்ற திருமணத்தில் மணமகன் இல்லத்தார் சங்கத்திற்கு வழங்கிய நன்கொடை. 2 0 0

மணமகள் இல்லத்தார் வழங்கியது. ரூ. 1 0 0

வெண்ணந்தூர் ஜவுளிவர்த்தகர் கெ. ப. ஆறுமுக முதலியார் புதல்வி திருநிறைச் செல்வி பொன்னுத்தாய் என்கிற சிவகாமியம்மாளுக்கும், சேலம் டவுன் பென்ஷன் ஹெட் அக்கவுன்டெண்டு கெ. ராமசாமி முதலியார் குமாரர் அய்யாவு என்கிற மாணிக்க முதலியாருக்கும் வைகாசி௴ 19-ந் தேதி நடைபெற்ற திருமணத்தில் பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் சேர்ந்து வழங்கிய நன்கொடை. ரூ. 1 0 0

சேலம் ஜில்லா மோகனூர் காந்தமலை ஸ்ரீபால தண்டாயுதபாணி சந்நிதியில் ஆவணி௴ 11௳ பொன்னாண்டி முதலியார் குமாரர் சாமியப்ப முதலியாருக்கும் வே. க. பெரமாண்டை முதலியார் குமாரத்தி மீனாட்சியம்மாளுக்கும், மேற்படி பொன்னாண்டி. முதலியார் குமாரத்தி குழந்தையம்மாளுக்கும் செல்லாண்டி முதலியார் குமாரர் ஆறுமுக முதலியாருக்கும் நடந்த திருமணங்களில் வழங்கப்பட்ட நன்கொடை. ரூ. 0 8 0

பவ வருஷம் ஆனி மாதம் 11 தேதி செய்யாறு தாலூக்கா திருவோத்தூர் ஜவுளி வியாபாரம் கோடி பச்சைமுனிசாமி முதலியார் குமாரர் சிரஞ்சீவி ராமலிங்க முதலியாருக்கும், ஷை யூர், பட்டு ஜவுளி வியாபாரம் ஊ. ஆ. முனிசாமி முதலியார் குமாரத்தி, சௌபாக்கியவதி மீனாம்பாள் அம்மாளுக்கும் நடந்த திருமண காலத்தில் நமது தலைச்சங்கத்திற்கு பிள்ளை வீட்டார் அளித்த நன்கொடை. ரூ. 1 0 0

பெண் வீட்டார் அளித்த நன்கொடை. ரூ. 1 0 0

பவ வருஷம் ஆனிமாதம் 11 தேதி ஷையூர் ஜவுளி வியாபாரம் வே. மு. சின்னு முதலியார் குமாரன் சிரஞ்சீவி முருகப்ப முதலியாருக்



கும், ஷையூர் பட்டு ஜவுளி வியாபாரம் உள. ஆ. முனிசாமி முதலியார் குமாரத்தி சௌபாக்கியவதி, இரங்கநாயகி அம்மாளுக்கும் நடந்த திருமணகாலத்து நமது தலைச்சங்கத்திற்குப் பிள்ளைவீட்டார் அளித்த நன்கொடை. ரூ. 1 0 0

பெண் வீட்டார் அளித்த நன்கொடை. ரூ. 1 0 0

(இவ்விரண்டும் திரு. R. மாணிக்க முதலியார் வசூலித்து அனுப்பியவை.)

உன்னியூர் மிராசுதார் R. மாணிக்க முதலியார் புதல்வன் திருநிறைச் செல்வன் நல்லண்ணனுக்கும், வெங்கல் யூனியன் போர்ட் தலைவரும், வர்த்தகருமாகிய பாண்டமங்கலம் மு. பழநியப்ப முதலியார் குமாரத்தி செல்வி தங்கம்மாளுக்கும் ஆனி௴ 11௳ நடைபெற்ற திருமணத்தில் வழங்கப்பட்ட நன்கொடை. ரூ. 5 0 0

மல்லூர் கா. கு. கொளந்தா முதலியார் குமாரத்தி பார்வதி அம்மாளுக்கும், சேலம் அம்மாபேட்டை லட்சுமண முதலியார் குமாரர் கந்தசாமி முதலியாருக்கும் பவ ௵ வைகாசி௴ 3௳ நடந்த திருமணத்தில், ஷை கொளந்தா முதலியார் விலாசத்திற்கு அளித்த நன்கொடை. ரூ. 0 8 0

தாரமங்கலம் கா. அ. அங்கமுத்து முதலியார் குமாரன் மயில்வேலும் பெருமாள் முதலியாருக்கும், சேலம் வெ. அ. தங்கவேல் முதலியார் குமாரத்தி செல்வி, ராஜமாணிக்கம் அம்மாளுக்கும் பவ௵ வைகாசி௴ 12௳ நடந்த திருமணத்தில் சங்கத்திற்கு வழங்கப்பட்ட நன்கொடை. ரூ. 1 0 0

## மணவை, ச. நா. குமரகுரு முதலியார் மூலம், வசூலானவை

கோயம்புத்தூர் ஜில்லா, பள்ளிபாளையம் ஜவுளி நூல் வியாபாரம் கொ. நாச்சிமுத்து முதலியார் குமாரன், திருவளர் செல்வன் "குருசாமி"க்கும், சித்தோடு, ஆ. சின்னப்ப முதலியார், குமாரத்தி, திருவளர் செல்வி, "செல்லம்மாளுக்கும்', பவ௵ ஆவணி௴ 6௳ பெண் வீட்டில் நடந்த திருமண முகூர்த்தத்தில் பிள்ளை வீட்டாராலும், பெண் வீட்டாராலும் நமது சங்கத்திற்கு வரவு. ரூ. 0 8 0

கோயம்புத்தூர் ஜில்லா, ஈரோடு தாலுக்கா சித்தோடு கிராமம், M. S. கணபதி முதலியார் பிரதர்ஸ், மா. சுப்புராய முதலியார் குமாரர், செல்வன் மாரியப்பா அவர்களுக்கும், சென்னிமலை வா. செ. முருகேச முதலியார் குமாரத்தி செல்வி "சுப்புலக்ஷிமி" அம்மைக்கும், பவ௵ ஆவணி௴ 6௳ நடந்த திருமணத்தில் நமது சங்கத்திற்கு பிள்ளைவீட்டார் அளித்த நன்கொடை. ரூ. 1 0 0

பெண் வீட்டார் அளித்த நன்கொடை. ரூ. 1 0 0

கோயம்புத்தூர் ஜில்லா சென்னிமலை வா. செ. பழனியப்ப முதலியார் அவர்கள் பௌத்திரனும், V. S. சபாபதி முதலியார்

குமாரனும் ஆன, செல்வன் ராமநாதனுக்கு நிகழும் பவஞூ ஆவணிமீ 12உ நமது சங்கப் பிரசாரகர், ச. நா. குமரகுரு முதலியார் அவர்கள் "அக்ஷராப்பியாசம்" என்னும் வித்தியாரம்ப முகூர்த்தம் செய்வித்த காலத்தில் நமது சங்கத்தின் கல்வி நிதிக்கு நன்கொடை வழங்கிய ரூ. 1 0 0

---


உலகப் பிரசித்திபெற்ற

**வனமூலிகை ஆனந்த கல்ப காபி தூள்**

பல தேசங்களில் வசிக்கக்கூடிய நமது அருமை சகோதரர்கள் சகோதரிகள், சங்கீதக் கச்சேரி செய்கிறவர்கள், சிறுவர் சிறுமிகள், குழந்தைகள், வயோதிகர்கள், பலயீனமானவர்கள், அதிக உழைப்புள்ளவர்கள், உத்தியோகஸ்தர்கள் யாவரும் எக்காலத்திலும் உபயோகிக்கக்கூடியது. திரேகத்திற்கு அழகையும், புஷ்டியையும் தரும். யாதொரு கெடுதியும் செய்யாது.

இந்த காப்பித்தூளை உபயோகிப்பவர்களுக்கு மதுமேகம், நீரிழிவு, அதிதாகம், நாக்குவறட்சி, அஸ்திசுரம், பித்தமயக்கம், திரேக வெளுப்பு, இருமல், மல பந்தம், பசியின்மை தாது நஷ்டம், பலஹீனம், கைகால் அசதி, ஞாபகசக்தி குறைவு இன்னும் பல துர் வியாதிகளை நீக்கி தாதுவிருத்தியையும், ரத்த விருத்தியையும், போகவிருத்தியையும், சந்தான விருத்தியையும், நீண்ட ஆயுளையும் உண்டாக்குமென்பதில் சந்தேகமில்லை. இதை உபயோகித்தால் நரைத்த ரோமங்கள் கருத்து வளருவதும் தவிர, தேக காந்தியும் உண்டாகும். இது அநேகரால் நன்கு மதிக்கப்பட்ட மருந்து. 40 வேளை 20 நாள் வரக்கூடியது டப்பி 1-க்கு ரூபா 1.

(தபால் பாக்கிங் சிலவு வேறு).

விலாசம்:— தி. இராஜகோபால் முதலியார்,
பழைய மாம்பலம், சைதாப்பேட்டை.



குடும்ப நண்பன், சமய சஞ்சீவி

**கனகேசம் பாம்**

என்பதில் தடையென்ன? அதைத் தேய்த்தவுடன் எல்லாவித தலைநோய் இடுப்பு கை கால் வலி, வாதநோய்கள், வீக்கம், சுளுக்கு, ரணம், விஷக்கடிகள் ஆகியவை நீங்கள் ஆச்சரியப்படுமாறு பறந்து போகும்.

கனகேசம் & கோ., பவழக்காரத் தெரு, சென்னை.


# செங்குந்தர் கிளர்ச்சி

## தென்னாற்காடு ஜில்லா

### சின்ன சேலம்

15-8-34 காலை 7-½ மணிக்கு சிறந்த செங்குந்த குலாபிமானிகள், அவ்வூர் நாட்டாண்மை பெரியதனக்காரர்கள் வேண்டுகோளின்படி ச. மு. மதுரை முதலியார் எதிர் வீட்டில் கூடிய செங்குந்தர் கூட்டத்தில் சைவ சித்தாந்தத் தமிழ்ப்புலவர் ச. நா. குமரகுரு முதலியார் அவர்கள் "சமூகமுன்னேற்றம்" என்பதுபற்றி சுமார் 1½ மணிநேரம் பேசியபின் நல்லுபசாரத்துடன் 9-மணிக்கு, செங்குந்தமித்திரனை வாங்கி வாசித்தால், நன்கொடையீதல், சங்கம் ஸ்தாபித்தல் முதலிய தீர்மானத்துடன் கூட்டம் முடிந்தது.

## மதுரை ஜில்லா

### செங்குந்த இளைஞர் சங்கம், மதுரை

### ஒட்டக்கூத்தர் திருநாள்

மேற்படி சங்க ஆதரவில் 22-8-34-ந் தேதி தல்லாகுளம் விநாயகர் கோவிலில் கூத்தர் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அவரது திருவுருவப் படம் அலங்கரிக்கப்பெற்று ஆராதனை நடந்தபின், 300 ஏழைகள் வரை அன்ன மளிக்கப் பெற்றனர். கூத்தர் இயற்றிய ஈட்டி எழுபது வாசிக்கப் பெற்று திருப்புகழ் பாராயணத்துடன் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.

நா. ப. பழநிக்குமாரு முதலியார், தலைவர்.

## இராமநாதபுரம் ஜில்லா

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம், மண்டலமாணிக்கம்

21-8-34 இரவு 9 மணிக்கு இச்சங்கத்தின் அவசரக் கூட்டம் ஸ்ரீமான் ப. சி. மு. மூக்க முதலியாரவர்கள் தலைமையின்கீழ் கூடியது. திரு. இ. முனியப்ப முதலியாரவர்கள் கடவுள் வணக்கம் பாடியபின், காரியதரிசி சு. வெ. குருசாமி முதலியாரவர்கள் சென்ற கூட்ட நடவடிக்கைகளை வாசித்தார். ஷை காரியதரிசியவர்கள் தமதூரைவிட்டு பர்மா நாடு செல்வதால் திருவாளர். கதிர் வாழவந்தா பண்டாரமவர்களால் சங்கசார்பாக பிரிவு உபசாரம் கூறப்பட்டு பூமாலை சூட்டப்பட்டதும், கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறி இரவு 11 மணிக்கு வந்தனஉபசாரம்கூறி சந்தனதாம்பூலம் வழங்கி கூட்டம் இனிது கலைவுற்றது.

## தீர்மானங்கள்

1. காரியதரிசி யவர்கள் வியாபார நிமித்தமாய் இரங்கூன் செல்வதால் திரு. இ. முனியப்ப முதலியாரை காரியதரிசியாக ஏக மனதாய் தேர்ந்தெடுக்கப்பட்டது.

2. ஆவணிமீ 6உ ஒட்டக்கூத்தர் திருநாளை நமது பொது மடத்தில் நடத்த வேணுமென்று தீர்மானிக்கப்பட்டது.

3. தமிழ்நாடு ஆசிரியர். உயர் திருவாளர் டாக்டர். பி. வரதராஜுலு நாயுடுகாரவர்கள் இந்தியா சட்டசபைக்கு அபேக்ஷகராய் நிற்பதற்கு இச்சங்கம் முழுமனதுடன் ஆதரவு கொடுக்கின்றது.

## ஒட்டக்கூத்தர் திருநாள்

22-8-34௳ மாலை 4 மணிக்கு செங்குந்தர் அபிவிருத்தி சங்கக் கட்டிடத்தி லிருந்து ஒட்டக்கூத்தர் திருவுருவப் படத்தை அதி விமரிசையுடன் அலங்கரித்து மேளவாத்தியத்தோடும் ஜேகோஷ்ட முழக்கத்தோடும் ஊர்வலம்வந்து செங்குந்தர் மடத்தில் இறக்கி ஸ்ரீமான் அம்பலம் இ. மு. சித்திரவேலு முதலியாரவர்கள் தலைமையின் கீழ் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கடவுள் வணக்கம் திரு. க. ரா. பாதம்பிரியா முதலியாரவர்களால் பாடப்பட்டு, தலைவரவர்கள் முன்னுரைக்குப்பின் காரியதரிசி திரு. இ. முனியப்ப முதலியாரவர்களால் முன் கூட்ட நடவடிக்கை வாசிக்கப்பட்டபின், திரு. நா. சு. கு. நாகசுந்தர முதலியாரவர்கள் ஒட்டக்கூத்தர் சரித்திர வரலாறு பற்றியும், திரு. வெ. மு. கிருஷ்ண முதலியார், ஞா. சு. மு. பாதம்பிரியா முதலியார் இவர்கள் முறையே கைத்தொழில், சமூக சீர்திருத்தம் என்பதுபற்றியும் விரிவாகப் பேசினார்கள். பின் இவ்வூர் போர்டு ஆண் பாடசாலை மாணவர்கள், 1. தா. கணேசன், 2. பா. தருமலிங்கம் 3. நா. குருசாமி இவர்கள் முறையே ஆரம்பக்கல்வி, உயர்தரக் கல்வி, தொழிற்கல்வி முதலியவைகளைப்பற்றி எழுதி வாசித்தார்கள். தலைவரவர்களின் முடிவுரைக்குப் பிறகு வந்தன உபசாரங் கூறி. சந்தன தாம்பூலம் கற்கண்டு வினியோகம் செய்து இரவு 7 மணிக்கு கூட்டம் இனிது கலைவுற்றது.

**இ. முனியப்ப முதலியார், சேக்ரட்டரி.**

## செங்குந்தர் பொதுக்கூட்டம், பாம்பக் கோயில் சந்தை

23-8-34 மாலை 5-மணிக்கு சைவத்திருவாளர் ப. வ. வன்னியப்ப முதலியாரவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் தேவகோட்டை ஸ்ரீ முருகானந்த வைத்தியசாலை அதிபர் திருமிகு. V. P. S. P. வால சுப்பிரமணிய முதலியாரவர்கள், 'தலைச்சங்கத்தின் பெருமை, கிளைச் சங்கத்தின் கடமை' என்பதைப் பற்றியும், திருவாளர் V. சுப்பையா முதலியாரவர்கள் கல்வியின் பெருமை என்பதைப்பற்றியும், திருவினர் S. சேதுராமலிங்க முதலியாரவர்கள் வியாபாரமும் கைத்தொழிலும் என்பது பற்றியும் பேசினார்கள். தலைவர் அவர்கள் ஒற்றுமையும் ஊக்கமும் என்பதைப் பற்றி நீண்ட சொற்பொழிவாற்றிய பின் ஓர் சங்கம் ஸ்தாபனம் செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்று இரவு 8-மணிக்கு சபை நிறை வெய்தியது.

**P. V. S. வன்னியப்ப முதலியார், தலைவர்.**



# திருநெல்வேலி ஜில்லா

## சங்கரநயினார் கோவில், செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

4-8-34உ, மாலை மணி 5-க்கு தேவகோட்டை ஸ்ரீ முருகானந்த தரும வைத்தியசாலை அதிபர் சைவத்திருவாளர் S. P. V. P. வாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருவாளர் S. ஆறுமுக முதலியார் அவர்கள் சென்னை அரசாங்கத்தார் கல்வியில் பிற்போக்கான சமூக ஏழை மாணவர்களுக்கு இதுவரை கொடுத்து வந்த உபகாரச் சம்பளத்தில் சிக்கனம் செய்திருப்பதுபற்றி கண்டித்துப் பேசினார்.

மாணவர் T. M. சங்கரன், அரசாங்கமும்—உபகாரச் சம்பளமும் என்பது பற்றியும், மாணவர் S. சங்கரநாராயணன் அரசாங்கத்தார் வரவு செலவை நேர் செய்யும் பொருட்டு சிக்கனக் கோடாரியை உபயோகப்படுத்தும்போது அது மாணவர்கள் கழுத்தில் விழாதபடி பார்த்துக் கொள்ளவேண்டு மென்றும், அரசாங்கத்தார் கல்வியில் பிற்போக்கான சமூக ஏழை மாணவர்கள் கல்வி அபிவிருத்தி சம்பந்தமாகத் தீவிர சிரத்தை காட்ட வேண்டுமென்றும் பேசினார்கள்.

கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

கல்வியில் பிற்போக்குள்ள சமூக மாணவர்களுக்கு அரசாங்கத்தார் அளித்து வரும் உபகாரச் சம்பளத்தில் அடுத்த ஏப்ரல் மாதம் முதல் சிக்கனம் செய்வதாக பிறப்பித்துள்ள 1934-ம் வருடத்து 47-ம் நெம்பர் உத்தரவைக்கண்டு இக்கூட்டம் மிக வருந்துவதும் தவிர ஜீவனோபாயத்திற்கே வகையற்றுத் தத்தளிக்கும் இக்காலத்தில் பூராச் சம்பளம் கொடுக்க சாத்தியப் படாமல் ஏழை மாணவர்களை வரும் படிப்பை நிறுத்திவிட நேருமாதலின் மேற்படி உத்தரவை அடியோடு ரத்து செய்து வழக்கம்போல் உபகாரச் சம்பளம் வழங்கி வரவேண்டுமென சென்னை அரசாங்கத்தாரை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

இத்தீர்மானத்தை உரிய துரைத்தன அதிகாரிகளுக்கு அனுப்ப தலைவர் அவர்கள் வேண்டிக் கொள்ளப் பெறுகிறார்கள்.

6-8-34 மாலை மணி 3-க்கு சங்க நிருவாக சபைக்கூட்டம் சங்க நிலையத்தில் திருவாளர் S. P. V. P. வால சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் விதவாவிவாகம், ஒற்றுமைத் திருமணங்கள் தீவிரமாக நடைபெறுவதற்குரிய வழிகளைக் குறித்து ஆலோசிக்கப் பட்டது. வந்தனோபசாரத்திற்குப் பின் கூட்டம் இனிது கலைந்தது.

செங்குந்த குல திலகர் ஒட்டக்கூத்தர் திருநாள் ஆவணிமீ 6உ இரவு மணி 7-க்கு மங்களமாக நடைபெற்றது.

**S. M. திருவுடையான்**

## கோயம்புத்தூர் ஜில்லா

### சின்னப்பநாய்க்கன்பாளையம்

20-8-34 இரவு ஏழு மணிக்கு செங்குந்தர் இரவு இலவச பாடசாலையில் கூடிய கூட்டத்தில், தி. கா. கருப்பண்ண முதலியார் சொ. கா. செங்கோட முதலியார், T. R. மாரிமுத்து முதலியார் வந்தனோபசாரத்தின் பின் சங்கப் பிரசாரகர் ச. நா. குமரகுரு முதலியார் அவர்கள் "மாணவர் போதனை" என்பதுபற்றிப் பேசியபின், சுபாசுபங்களில் நமது சங்கத்திற்கு நன்கொடை வழங்க வேண்டுமென்றும், செங்குந்த மித்திரனை அனைவரும் ஆதரிக்க வேணுமென்றும் ஏகமனதாய் தீர்மானிக்கப் பெற்று 11-மணிக்கு கூட்டம் முடிந்தது.

### பள்ளி பாளையம்

24-8-34 பிற்பகல் 4-மணிக்கு, செங்குந்தர் வாலிபர் சங்கத்தின் கட்டிடத்தில் கூடிய செங்குந்தர் கூட்டத்தில், நமது சங்கப்பிரசாரகர், ச. நா. குமரகுரு முதலியார் "வாலிபர் கடமை" என்பது பற்றி விரிவாகப் பேசி செங்குந்த மித்திரனை நம்மவர் ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்க வேண்டுமென்னுந் தீர்மானத்துடன் 5½-மணிக்கு கூட்டம் முடிந்தது.

**பயங்கரமான நோய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்**

வெள்ளை, கொருக்கு, அரையாப்பு, சீழ்மேகம், லிங்கப் புற்று, யோனிப்புற்று, பித்தவெடிப்பு, மேகநீர்க் கட்டிகள், கை கால் பிடிப்பு, வாதநோய் முதலிய கொடிய வியாதிகளுக்கு எமது

சர்வமேக சஞ்சீவி எண்ணெய், வாய்வு எண்ணெய்களைச்
சாப்பிடுங்கள்

இரண்டொரு வேளைகளிலேயே குணப்படுத்திவிடும்.

கனகேசம் & கோ., பவழக்காரத் தெரு, சென்னை.

மாணவர்கள், வக்கீல்கள், நீதிபதிகள், பத்திராதிபர்கள் மற்றுமுள்ள மூளைவேலை அதிகமுள்ளவர்களுக்கு

**வென்லோட்**

ஓர் வரப்பிரசாதம் போன்றது.

அது: கண் எரிச்சல், கண் மங்கல், கை கால் எரிச்சல், அசதி, சொப்பன ஸ்கலிதம், எலும்புருக்கி, மூலச்சூடு, நீர்க்கடுப்பு முதலிய சூட்டினால் உண்டாகும் சகல வியாதிகளையும் நீக்கி, தேகத்திற்குப் பொன்னிறம் வழங்குவதில் நிகரற்றதென ... புகழப்படும் அரிய சஞ்சீவி.

கனகேசம் & கோ., பவழக்காரத் தெரு, சென்னை.



## மலையாளம் ஜில்லா

### கோல்லங்கோடு

S. சொக்கலிங்க௸ 1 8

### யாழ்ப்பாணம்-சிலோன்

வே. சபாபதி௸ 1 8
இ. சி. சிவபாக்கிய௸ 1 8

### ரங்கூன்

R. M. தியாகராஜ௸ 3 0

## வெளிநாடு

### கோலாலம்பூர்

K. தக்கவேல்௸ 2 0

### கெர்பான்

S. V. K. சுப்பிரமணிய௸ 8 0
(பெயர் தெரியவில்லை) 4 0

### சென்னை

T. M. காளியப்ப௸ 1 8
கு. கி. கோவிந்தராஜ௸ 3 0

## செங்கற்பட்டு ஜில்லா

### காஞ்சீபுரம்

பெ. நாகப்ப௸ 6 0
D. C. கந்தசாமி௸ 1 8

## வடாற்காடு ஜில்லா

### திருப்பத்தூர்

M. குப்புசாமி௸ 0 14

## திருச்சி ஜில்லா

### உன்னியூர்

ப. க. பழநியப்ப௸ 1 8

## சேலம் ஜில்லா

### சேலம்

A. சங்கர௸ 3 0

### மோகனூர்

கு. ல சடையப்ப௸ 1 0

### தாரமங்கலம்

P. M. வையாபுரி௸ 3 0

### எடப்பாடி

S. R. வையாபுரி௸ 3 0
ரு. க. கு. மாரிமுத்து௸ 4 8

### எடமணல்

S. சுப்பிரமணிய௸ 3 0

### கைக்கோளபாளையம்

ராக்கியண்ண௸ 1 8

## கொச்சின் எஸ்டேட்

### துன்னத்துப் பாளையம்

A. பழநியப்ப௸ 1 8
A. கிருஷ்ண௸ 1 8

## திருநெல்வேலி ஜில்லா

### தென்காசி

A. A. K. குத்தாலலிங்க௸ 1 8

## தஞ்சை ஜில்லா

### மாப்பிள்ளை குப்பம்

R. குமாரசாமி௸ 3 0
T. L. நாகமுத்து௸ 2 0
S சொக்கலிங்க௸ 6 12
T. A. முருகைய௸ 5 0

### மணக்குடி

ச. பா. சுப்பிரமணிய௸ 6 0

### சீர்காழி

அ. பூ. இராஜு௸ 1 8
சு. து வீ. சிங்கார௸ 1 8
வ. மு. வைத்தியலிங்க௸ 1 8
தி. ரா. நாகப்ப௸ 1 8

### மஞ்சட்கொல்லை

பெரி. நா. இராமசாமி௸ 4 8
ரு.ம. ச. ராமசாமி௸ 4 8
ரு.ம. பி. ராஜகோபால்௸ 6 0
திமு. அரு. தியாகராஜ௸ 6 0
அரு. வி. பழநியாண்டி௸ 3 0
அ. மு. கோ. அம்பலவாண௸ 4 8
க. சொ. அ. சொ. அம்பலவாண௸ 2 0
சபா. ரெ. விநாயகமூர்த்தி௸ 4 8
தி. குளந்தைவேல்௸ 4 8
உ. முத்தைய௸ 6 0
K. குமாரவேல்௸ 2 0

### ஆழியூர்

S. சரவண௸ 4 8

### தேவூர்

ஆறு மருதப்ப௸ 4 8

### இலுப்பூர்

து. சிதம்பர௸ 3 0

## ஜூலை மாத சந்தா வசூல் தொடர்ச்சி

**ஆவாணி புதுச்சேரி**

அ. த. க. கோவிந்த௸ 2 0

**சிக்கல்-பொறவச்சேரி**

சா. சபாபதி௸ 4 8
வீர. மாணிக்க௸ 3 0
பொ. நாராயண௸ 3 0
நா. வ. சீனிவாச௸ 2 0
வெ. மாணிக்க௸ 1 8
சா. பிள்ளையா௸ 3 0
கா. நாகப்ப௸ 1 8

**திருவிடமருதூர்**

S. ராமையா௸ 1 8
S. வேலாயுத௸ 1 8

**கருந்தட்டாங்குடி**

K. M. பழனியப்ப௸ 4 8

## தென்னாற்காடு ஜில்லா

**நடுவீரப்பட்டு**

S. சண்முக௸ 1 8

**முத்துகிருஷ்ணபுரம்**

தி. குமாரசாமி௸ 1 0
கு. துரைசாமி௸ 0 8

**மேல்பட்டாம் பாக்கம்**

தொ நடராஜ௸ 1 8

**கல்லாலம்பூண்டி**

நமசி. குப்புசாமி௸ 3 0
தங். கு. அப்புராய௸ 1 6

**எசாலம்**

க. இரிசப்ப௸ 1 8
நா. அருணசல௸ 1 8
சு. அருணசல௸ 1 8

**கண்டாச்சிபுரம்**

த. அ. நாராயணசாமி௸ 1 8
க. பொ. ராஜமாணிக்க௸ 1 8
வை ச. ராமலிங்க௸ 1 8
த. அ. கணபதி௸ 1 8
ந. க. சிங்காரவேலு௸ 1 12
த. அ. மாசிலாமணி௸ 3 4
நா. அ. ச. குப்புசாமி௸ 1 12
அரி. அண்ணாமலை௸ 3 4
எ. ரா. முனிசாமி௸ 2 0
சி. ஏகாம்பர௸ 0 8

**திருக்கோவலூர்**

V. C. நடேச௸ 1 8
வெங்கடாசல௸ 2 0
கேசவ௸ 3 4
S. மாணிக்க௸ 1 8

**விழுப்புரம்**

டாக்டர் P. மாணிக்க௸ 1 8
ஆ. சு. நடேச௸ 1 0

**ஆலம்பாடி**

கா. ர. நடேச௸ 3 4

**ஜம்பை**

மு. நடேச௸ 2 0

**திருவரங்கம்**

பொ கோவிந்தசாமி௸ 0 8
கொ. ஜெகந்நாத௸ 1 8
ராம. வெங்கடாசல௸ 0 8
வி கு. சண்முக௸ 2 0

**திருப்பாலப்பந்தல்**

சி கோ. அரி. முருகேச௸ 3 8
மணியம். ராகவ௸ 1 8

**எல்ராம்பட்டு**

தரும. மாணிக்க௸ 1 8

**காட்டுப்பையூர்**

கல். ராஜமாணிக்க௸ 1 0

**முதலூர்**

முரு. சொக்கலிங்க௸ 0 8

**அரகண்டநல்லூர்**

ஜம்பை. சரவண௸ 1 8

## வடாற்காடு ஜில்லா

**காஞ்சி**

பு. லெ. அழகேச௸ 2 0
ர. ராமலிங்க௸ 1 8
N. நாகப்ப௸ 2 0
பி. வி அழகேச௸ 1 0
கிராமணி M. வெங்கடாசல௸ 1 8

**கடலாடி**

க. சு. முருக௸ 1 8
ஆ ராயப்ப௸ 1 8
தெ. ரங்கசாமி௸ 1 8

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Sengunta Mahajana Sangam, Madras, at 31, Armenian Street, Madras, and is printed by A. Rangaswamy at The Progressive Printers, 2/17, Coral Merchant Street, Madras.